## கதையின் கதை...

என் இனிய வாசகர்களுக்கு வணக்கம்.

உங்களையெல்லாம் அகல்யாவின் மூலம் "என்னை மறந்ததேன், தென்றலே..?" என்ற நாவலின் மூலம் சந்திக்க வாய்ப்பளித்த ஆசிரியர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



பட்டதாரி ஆசிரியராக பணிபுரியும் நான் 2007ம் ஆண்டு பிரபல நாவலிதழில் அறிமுகமாகி... இதுவரை 25 நாவல்கள் வெளியாகியுள்ளன.

சிறுகதைகளும், கோயில் தலவரலாற்று கட்டுரைகளும் எழுதி, பிரபல இதழ்களில் வெளிவந்துள்ளது.

2010-ம் ஆண்டு கச்சிராயபாளையம் - வடக்கநந்தல் லயன்ஸ் - லியோ கிளப் இணைந்து... "வெற்றி எழுத்தாளர்" என்ற விருதையும், பாராட்டையும், பரிசையும் முன்னாள் ஆளுநர் PMJF. Lion. V.T.E. திருநாராயணன் (324 A3... விழுப்புரம், கடலூர் மாவட்டம், புதுச்சேரி மாநிலம்) அவர்களின் பொற்கரங்களால் பெற்றதை பெருமையாய் நினைக்கிறேன்.

நாவலின் நாயகி நந்தனா, சிறந்த சமூக சேவகி! காதலில் தோற்று சித்தம் கலங்கிப் போய் இருக்கும் பூரணியின் மகள்! அந்த தாயையே சுவாசமாய் எண்ணி வாழ்கிறாள்! சிறுமோதலில் நந்தனாவைச் சந்திக்கும் நாயகன் சித்தேஷ்வருக்கு அவளை பிடித்துப் போக காதலிக்கிறான்! தாய்க்கு நிறைவேறாத காதலை வெறுக்கும் அவளிடம் தன் காதலை வெளிப்படுத்த நந்தனா மறுக்கிறாள்!

நந்தனா தனது தந்தையைச் சந்தித்தாளா...? சித்தேஷ்வர் தனது காதலில் வென்றானா..? இல்லையா..? என்பதையெல்லாம் நாவலைப் படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

உங்களின் மேலான கருத்துக்களை எதிர்பார்த்து காத்திருக்கும்...

அன்புடன்
ஆர். மகேஸ்வரி

SUPPLEMENT ISSUE OF Tamilaga Vellithirai Cheythigal R.Dis. No. 1483/2003





# என்னை மறந்ததேன், தென்றலே..?

ஆர். மகேஸ்வரி
எம்.ஏ., எம்.எட்.,



## 1

நல்ல விலையுயர்ந்த பட்டுடுத்தி... தங்க நகைகளின் ஜொலிப்புடன்... மேனியெங்கும் நாணத்தைப் படரவிட்டு... குங்குமமாய் சிவந்த முகத்துடன்... அழகே உருவாய்... அலங்கரிக்கப்பட்ட தேனிலவு படுக்கையறையை நோக்கி... பால் சொம்பை கைகளில் ஏந்தி... பூரிப்பாய் வந்த மணப்பெண்ணாய்... வானமங்கை மேனியெங்கும் சிவந்து... நாணத்துடன் காணப்பட....

அந்த மணப்பெண்ணை எதிர்பார்த்து... ஏங்கி... கண்ணிலே காதலோடும்... நெஞ்சிலே அன்போடும்... அவளோடு சங்கமிக்கப்போகும் நிமிடத்திற்காய் காத்திருந்த மணமகன்... அவளைக் கண்டதும்... எப்படி துள்ளலும், துடிப்புமாய் ஓடிவந்து நேசத்தோடு கட்டிக் கொள்வானோ... அதுபோல கிழக்கு வானில் சூரிய மணமகன் வானமங்கையை கட்டியணைத்துக் கொண்ட, அழகான காலைப் பொழுது!

நந்தனா, இதுநேரம் வரை உறங்கமாட்டாள்...!

விடியற்காலையிலேயே எழுந்துவிடுவாள்..!

ஆனால், இன்று சூரியன் சன்னல் வழியே வந்து... அவளின் அழகிய கன்னம் நிமிண்டி எழுப்ப... கடிகாரத்தில் மணியைப் பார்த்தவள்... பதைபதைப்புடன் எழுந்தாள்!

குளிர்ந்த நீரில் தலையோடு குளித்தவள்... நைட்டியை அணிந்து கொண்டு வந்து... அவளின் நீள முடியை ஈரம் போக துடைத்தாள்! முடியை முதுகில் மயில் தோகையாய் படரவிட்டு அடியில் சிறு முடிச்சிட்டாள்! மஞ்சளில் மினுமினுத்த முகத்தில் கொஞ்சமாய் பவுடர் பூசி... சின்ன பொட்டிட்டாள்!

வேகவேகமாய் சமையலை முடித்தாள்.

தாயின் அறைக்கு செல்ல... அங்கே பூரணி வெறுந்தரையில் சுருண்டு படுத்திருந்தாள்...!

"ஜெய்... நீ எப்போ வருவே, ஜெய்...? சீக்கிரமா வா, ஜெய்! நான் உன்னைப் பார்க்கணும், ஜெய்...! நான் உன்கிட்ட பேசணும், ஜெய்...!"

தாய்தான் தூக்கத்தில் உளறிக் கொண்டிருந்தாள்...!

சித்த சுவாதீனமில்லாதவள்...!

"அம்மா... அம்மா..." அன்போடு தாயின் கன்னம் வருடி எழுப்ப...

பூரணியோ பரபரப்போடு எழுந்தாள்.

"ஜெய்... வந்தாச்சா...? எங்கே... என் ஜெய்?" என்று கேட்க...

நந்தனாவின் கண்கள் தளும்பி நின்றது!

நினைவு தெரிந்த நாளிலிருந்து... தனது தாயை இப்படி தான் காண்கிறாள், நந்தனா!

அவளின் சித்தம் கலங்க... யாரோ ஒரு ஜெய்தான் காரணம்...!

நந்தனாவின் தகப்பனும் அந்த ஜெய்தான்...!

சிஸ்டர் மரியாள் மட்டும் இல்லையென்றால் பூரணி உயிரோடு இருந்திருக்க மாட்டாள்...!

நந்தனா பிறந்திருக்க மாட்டாள்...!

சிஸ்டர் மரியாளின் பராமரிப்பில்... அன்பில்... பாசப்பிணைப்பில்... நேசச் சிறகுகளில்... அந்த அநாதை ஆசிரமத்தில் தாயும், நந்தனாவும் வாழ்ந்தனர்!

பனிரெண்டாம் வகுப்பில் நிறைய மதிப்பெண் எடுத்தாள், நந்தனா! 'விழுதுகள் பவுண்டேஷன்' என்ற அமைப்பு வசதியற்ற நன்கு படிக்கும் மாணவர்களுக்கு உதவுவதாய் அறிந்து... அதற்கு விண்ணப்பிக்க... நந்தனாவை 'விழுதுகள் பவுண்டேஷன்' படிக்க வைக்க தத்தெடுத்துக் கொண்டது!

பி.எஸ்ஸி., எம்.எஸ்ஸி., எம்.பில் என்று பட்டப் படிப்பை நந்தனா முடிக்க... கற்பகம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இரண்டாண்டுகளுக்கு முன் வேலை கிடைக்க...

ஆசிரமத்து பிள்ளைகள் முன்னேறி... சொந்தக் காலில் நிற்கும் சமயம் வெளியேறிவிட வேண்டும் என்ற கோட்பாடு படி... சித்தம் கலங்கிய தாயோடு வெளியே வந்து... வாடகைக்கு வீடு எடுத்து தங்கிவிட்டாள், நந்தனா!

தாயை பாதுகாக்க ஈஸ்வரி என்ற முதியவளை சம்பளத்திற்கு வைத்துக் கொண்டாள்! பகலில் ஈஸ்வரிதான் பூரணியைப் பார்த்துக் கொள்வது!

"அம்மா... உன் ஜெய் வருவார்! கண்டிப்பா ஒருநாள் வருவார்! நீ எழும்மா... குளிக்க வைக்கணும்!"

அந்தப் பதில் பூரணிக்கு புரியுமோ... புரியாதோ... ஆனால், நந்தனா அப்படி சொல்வதை ஒருபொழுதும் மறப்பதில்லை!

பூரணி... முன்பெல்லாம் கத்துவாள்...! கதறுவாள்...! பொருள்களைத் தூக்கிப் போட்டு உடைப்பாள்...! பெரும் ரகளை செய்வாள்...!



அவளை அடக்குவது பெரும்பாடாய் இருக்கும்!

கை, கால்களில் சங்கிலி பிணைத்துதான் ஆரம்பத்தில் கட்டி வைத்தார்கள், ஆசிரமத்தில்!

மருத்துவம் அவளைச் சாந்தப்படுத்தியதா...? அல்லது காலம் அவளின் மனதை அமைதிப்படுத்தியதா...?

தெரியவில்லை!

பூரணியைக் குளிக்க வைத்தாள்...! உடை உடுத்தி விட்டாள்...!

தட்டில் இட்லியை வைத்து... சாம்பாருடன் அவளுக்கு இட்லியை ஊட்ட... மூன்றாவது இட்லியை ஊட்டிய போது கையை தட்டிவிட்டாள், பூரணி!

"என் கண்ணம்மாயில்லே...! நீ என் பொன்னம்மாயில்லே...! ஆ.... ஆம்மா... இன்னும் ஒரு இட்லி, தங்கம்...!"

என்று அவள் கன்னம் தட்டி... முடிகோதி... முகம் வருடி... முத்தமிட்டு... மீதி இட்லியையும் ஊட்டிவிட்டுவிட்டாள், நந்தனா!

ஈஸ்வரி வந்தாள்.

"நந்தனா... அம்மாவை நான் பார்த்துகிறேன்! நீ கல்லூரிக்கு கிளம்பும்மா!"

"மருந்து, மாத்திரை கொடுக்கணும், ஆயா!"

"அதை நான் பார்த்துக்கிறேன்! நீ புதுக்கல்லூரிக்கில்ல வேலைக்கு போறே! முதல் நாளே லேட்டா போறது நல்லதில்லை, கண்ணு! நீ போய் உடுத்திட்டு, கிளம்பு, கண்ணு!"

"சரி, ஆயா! அம்மாவை பத்திரமா பார்த்துக்கங்க, ஆயா! மதியத்துக்கு முருங்கை காய் சாம்பார், கருணைக்கிழங்கு புளிக்குழம்பு, கீரை மசியல், உருளைக்கிழங்கு பொரியல்ன்னு செய்திருக்கேன்! அம்மாவை சாப்பிட வைத்து... நீங்களும் சாப்பிடுங்க, ஆயா!"

"உன் அம்மா எவ்வளவு சாப்பிடறா...? எதுக்கு வெட்டியா இவ்வளவு செய்து வீணாக்கறே...? ஒரு சாம்பாரும் பொரியலும் போதுமே, கண்ணு!" என்று ஈஸ்வரி அன்போடு அதட்ட...

"அம்மா வரவர மெலிஞ்சிட்டே போறா ஆயா! டாக்டர் ஹெல்தியான புட் குடுக்க சொல்றார்! அதான்! அடுத்தது, நீங்களும் நல்லா சாப்பிடுங்க, ஆயா! நீங்க நல்லாயிருந்தா தானே எங்களுக்கு உதவி!"

"இந்தக் கிழவி கடைசி மூச்சுவரை உன்கூடவே இருப்பேன், கண்ணு! பூரணியை என் மகளாத்தான் பார்க்கிறேன்...! உன்னை என் பேத்தியாதான் நினைக்கிறேன்...! வேற்று ஆளா ஒரு நாளும் நினைச்சதில்லே!"

"ரொம்ப சந்தோஷம், ஆயா! உங்களைப் போல நல்ல பாசமிகு உறவு கிடைக்க... அநாதையான நாங்க கொடுத்து வைத்திருக்கணும்!"

"என்ன வார்த்தை சொல்லிட்டே, கண்ணு...? மனிதரா பிறக்கற யாரும் அநாதையில்லே, கண்ணு! உனக்கு நான் உறவு... எனக்கு நீ உறவு...! இதைவிட மேல இருக்கற இறைவன் நமக்கெல்லாம் பெரிய உறவுக்காரன் இல்லையா...?"

நீ, பாரு நந்தனா கண்ணு... ராஜகுமாரன் போல அழகுல சிறந்த மாப்பிள்ளை வருவார்...! நீ நல்ல பெரிய வீட்டுல போய் மருமகளா வாழப்போறே! உனக்கு சொந்தம், சுற்றம்ன்னு பெரிய குடும்பமே விரைவில் உனக்கு கிடைக்கும்னு... என் உள்மனசு சொல்லுது...!"

ஈஸ்வரி மலர்ந்த முகத்துடன் சொல்ல...

"கல்யாணமா...? எனக்கா...? ம்கூம்...! இந்தப் பிறவியில்... அப்படி ஒரு வைபோகமே... என் வாழ்க்கையில நடக்க வாய்ப்பில்லை...!"

"என்னம்மா அப்படி சொல்றே...?"

"ஆமாம், ஆயா...! காதல்ன்னாலோ... கல்யாணம்ன்னாலோ கசக்குது, ஆயா! நெஞ்சு எரியுது, ஆயா!" என்று வெறுப்போடு சொல்ல...

"உன் தாய்க்கு ஏற்பட்ட நிலைமையால வெறுத்து பேசறீயா, தாயீ...?"

"பின்னே...? சிட்டா சுற்றித் திரிந்தவள் வாழ்க்கையில்... எமனா அந்த ஜெய் வந்து புகுந்து... அம்மா வாழ்க்கை நாசமாகி... அது நாள் முதல் பைத்தியமாகிப் போன என் தாயைப் பார்க்கும்போது எனக்கு கல்யாணம் பிடிக்குமா...? ஆண்களைப் பிடிக்குமா...?"

ஒரு ஆணின் பேச்சை நம்புவேனா...? ஆண்கள்ல நிறைய பேர் நான் உருவாக காரணமான ஜெய் போலத்தான் இருப்பார்கள்...!"

நந்தனா வெறுப்போடு பேச...

"அப்படி ஒட்டு மொத்த ஆண் சமுதாயத்தையும் குறை சொல்லக்கூடாது, தாயீ...! நல்லவங்களும் நிறைய பேர் இருக்காங்க!..."

அதில் ஒருத்தர் உன் கண்முன்னால வருவார்!... உன்னைக் கண்டு ஆசைப்படுவார்!... அந்த மன்னவன் உன்னையே கட்டி மனைவியாக்கி... நீ அவரோட சந்தோஷமா வாழறதை இந்தக் கிழவி பார்க்கத்தானே போறேன்!"

"நடக்காது, ஆயா! ஒரு ஆணை நம்பி என் வாழ்க்கையைப் பாழாக்கிக்க மாட்டேன், அம்மாவைப் போல...!"

"அம்மாவோட விதி இப்படி அனுபவிக்கணும்ன்னு! ஆனால், உனக்கு அந்தக் கடவுள் இரக்கம் காட்டுவார், கண்ணு!"



"தாய் பைத்தியக்காரியா இருக்காள்! அவளுடைய மரபுதானே... பொண்ணுக்கும் இருக்கும்! இவளும் ஒருநாள் பைத்தியமா ஆகலாம்! இவளுக்கு பிறக்கும் பிள்ளையும் குறையா பிறக்கும்ன்னு... என்மேல் ஆசைப்பட்ட ஆண்களின் அம்மாக்கள்... என்காதுபடவே பேசி கேட்டிருக்கேன், ஆயா!... என் அழகில் ஆசைப்பட்டு... காதல் கடிதம் நீட்டியவனெல்லாம்... அம்மாவை பார்த்ததும் அலறி ஓடியிருக்கான்! இந்தக் கல்யாணப் பேச்சை பேசாதே, ஆயா! அப்படியே நல்லவன் ஒருவன் வந்து என்னைக் கட்டிகிட்டாலும்... சித்தம் கலங்கிய மாமியாரை சகிச்சுப்பானா...? பேசப்பேச நேரம்தான் வீணாகுது! நான் கிளம்பறேன், ஆயா!"

அறைக்குப்போனாள்! இளநீல நிற காட்டன் சேலையில் வெள்ளையும், கறுப்புமாய் சிறுசிறு பூக்களிட்ட சேலையை உடுத்திக் கொண்டாள்!

தலைமுடியை பின்னி... சிறு ரோஜாவை காதோரம் செருகி... லேசாய் பவுடர் ஒற்றி... சாந்து பொட்டு வைத்து... கிளம்பிவிட்டாள்!

"நான் வரேன், ஆயா...!"

வானத்து தேவதையாய்... வைரத்தின் ஜொலிப்புடன்... அழகாய் வந்த நந்தனாவையே... வைத்த விழி எடுக்காமல் பார்த்த... ஈஸ்வரி சொன்னாள்!

"இப்படி ஒரு அழகான தேவதையை பெத்து, நடமாடவிட்டிருக்கோம்ன்னு தெரியாமல்... இந்த மகராசி சித்தம் கலங்கிப் போய் இருக்காளேம்மா! உன்னைப் பொத்தி பொத்தி பார்த்துக்க வேண்டியது, பூரணியோட கடமை! ஆனால், மாறா... பிள்ளையான நீ... தாயை இப்படி தாங்கணும்... கவனிக்கணும்... பாதுகாக்கணும்ன்னு உன் தலையில எழுதியிருக்கே, நந்தனா!"

என்று ஈஸ்வரி சோகமாய் சொல்ல...

நந்தனா... முகம்வாடி கல்லூரிக்கு சென்றாள்!

## 2

மாடிப்படிகளில் சிறுபெட்டியோடு... ஆகாய வண்ண முழுக்கை சட்டையும்... கறுப்பு பாண்டும் அணிந்து ...அவன் நடந்து வருவதைக் காண... கம்பீரமே கால் முளைத்து வருவதுபோல இருந்தது!

அவன் சித்தேஷ்வர்!

வயது முப்பது!

இந்த இளம் வயதிலேயே தந்தையோடு சேர்ந்து செய்யாத வர்த்தகமில்லை!

வர்த்தக உலகில் கொடிகட்டிப் பறக்கும், இளம் பிசினஸ் மேன்!

பேரழகன்...!

நெடுநெடுவென உயரம்...! கட்டுமஸ்தான உடம்பு...!

அழகான முகம்...! தீட்சண்ய பார்வையை வீசும் கண்கள்...!

நேரான நாசி...! நேர்த்தியான நெற்றி...!

அடர்த்தியான மீசை...! அழுத்தமான உதடுகள்...!

வெண்ணிற பல்வரிசை...! முகவாயில் சிறிய குழி...!

மூங்கிலாய் நீண்டு தொங்கிய கைகள்...!

பரந்து விரிந்த மார்புமாய் இருப்பான்!

மொத்தத்தில் பேரழகன்...! பேராண்மைக்காரன்...!

இந்த சித்தேஷ்வரைக் காணும் எந்த பெண்ணும்... சட்டென்று அவன் அழகில்... அம்சத்தில்... கம்பீரத்தில்... ஆண்மையில் மயங்கிவிடுவாள்!

இன்னும் திருமணமாகவில்லை!

"நான் கிளம்பறேம்மா!"

தாய் கோதைநாயகியைப் பார்த்து சித்தேஷ்வர் சொல்ல...

"சித்தேஷ்... அப்பா திட்டறார்டா!"

"எதுக்கும்மா...?"

"நான் ஒரு பொறுப்பான அம்மாவா நடந்துக்கலையாம்...!"

"என்னைப் பெற்று... நல்லவனாய் வளர்த்து... இன்று நான் சிகரம் தொட... நீங்கதான் காரணம்! அப்படியிருக்க அப்பா எப்படி உங்களைப் பொறுப்பான அம்மா இல்லையென்று குற்றம் சாட்டலாம்...?"

"இதை மட்டும் செய்தா போதுமா, சித்தேஷ்...?"

"இன்னும் நீங்க என்ன செய்யணும்...?"

"வயது முப்பதாகுது! காலாகாலத்துல உனக்கொரு திருமணத்தை செய்து வைக்க வேண்டியது என் பொறுப்பல்லவா...? அதைத்தான் நான் செய்யலேன்னு... அப்பா என்னை பொறுப்பான அம்மாவா இல்லேங்கிறார்!"

"அங்கே சுற்றி... இங்கே சுற்றி... என் திருமணத்தில் வந்து நின்னுடறீங்களே! திருமணத்துக்கு என்ன அவசரம்...? இன்னும் வயதிருக்கில்லே?" என்று சிரிப்புடன் சொல்ல...



"ஆமா... ஆமா... அறுபதுவயதிலே நேரா அறுபதாம் திருமணம் செய்துக்கோ, சித்து! செலவும், அலைச்சலும் மிச்சமாகும்!"

"என்ன கிண்டலா..? வீட்டில் ஒரு வயது பெண்ணை வைத்துக் கொண்டு... என்னை திருமணம் செய்துக்க சொன்னால்... கஷ்டமா இருக்காதா..? முதல்ல ஆரண்யாவுக்கு முடிங்க! அப்புறமா நான் செய்துக்கிறேன்!"

"ஏய்... ஏய்... ஆரண்யா குட்டிக்கு என்ன வயது? ம்...? இன்னும் பட்டப்படிப்பைக் கூட முடிக்கலே...!"

"இந்த வருடம் பி.எஸ்ஸியை முடிச்சிடுவாயில்லே...? இது முடிந்ததும் அவளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையாப் பார்த்து திருமணம் செய்துட்டு... நான் செய்துக்கிறேம்மா!"

"மாமா... என்ன என் மண்டையை உருட்டறீங்க...?"

ஆரண்யா என்ற அழகு புயல்... பாப் செய்யப்பட்ட தலையும்... டைட் ஜீன்ஸ"ம், மேலுடலைக் கவ்விப் பிடித்த டாப்ஸிலும்...! டக்டக்கென்று அரேபியக் குதிரை கணக்காய்... புத்தகத்தை மார்பில் அணைத்தவாறு... மாடிப்படிகளில் குதித்திறங்கிக் கொண்டிருந்தாள்!

ஆரண்யா... சித்தேஷ்வரின் அக்கா புவனாவின் மகள்!

கோதைநாயகி - சபரிவாசன் தம்பதிக்கு இரு பிள்ளைகள்! புவனா, சித்தேஷ்வர். புவனாவைவிட பதினைந்து வயது சிறியவன், சித்தேஷ்வர்!

தனது தம்பிக்கே புவனாவை மணமுடித்தாள், கோதைநாயகி.

புவனா இப்போது உயிருடன் இல்லை! ஆரண்யா சிறுவயதாய் இருக்கும்போதே ஹார்ட் அட்டாக் வந்து இறந்து போனாள்!

தம்பி மகளும்... தனது பேத்தியுமான ஆரண்யாவை நிறைய செல்லம் கொடுத்து வளர்த்துவிட்டாள் கோதைநாயகி!

ஆரண்யாவின் தந்தை மாதம் ஒருதடவை வந்து பார்த்து... மாலையே திரும்பிவிடுவார்!

"மாமா... நான் இன்னும் படிப்பை முடிக்கலை...! அப்புறம் எம்.எஸ்ஸி படிக்கணும்...! அப்புறம்தான் திருமணம் செய்து கொள்வேன். அதனால், என்னைப் பார்த்துட்டு... உங்க திருமணத்தைத் தள்ளிப் போடாதீங்க."

"சின்னப் பொண்ணு எவ்வளவு தெளிவா பேசறா...! ஆனால், திருமண விஷயத்தில்... உனக்கு முதிர்ச்சி இல்லையே, சித்து...?"

கோதைநாயகி குற்றம்சாட்ட...

"எனக்கு தொழிலில் இருக்கும் ஆர்வம்... திருமணத்தில் இல்லைம்மா...! இன்னும் நான் சாதிக்கணும்...! உயரம் தொடணும்...! உச்சிக்குப் போகணும்..!"

"இன்னுமென்ன உயரணும்..? உச்சிக்குப் போகணும்..? இப்போ இருப்பதே ஒரு பத்து தலைமுறை உட்கார்ந்து சாப்பிடலாம்..!" என்று வெடுக்கென்று சொல்ல...

"நீங்க என்ன தான் சொல்ல வரீங்க...?"

"நாங்க பார்க்கற பொண்ணைத் தான்... கட்டிக்கணும்ன்னு வற்புறுத்த மாட்டோம்...! உனக்கு எந்த பொண்ணையாவது பிடிச்சி... லவ் பண்ணிட்டு இருந்தால்... அவளைக் கைகாட்டு... கட்டி வைக்கிறோம், சித்து!"

"லவ்வா...? நானா...? அதுக்கெல்லாம் எனக்கு ஏது நேரம்...?"

"உன் மனசுக்கு பிடிச்ச பெண்ணைக் கண்டுட்டால்... அப்புறம் நேரம் காலத்தை தானே ஒதுக்கற மாதிரி இருக்கும்! அவளைக் கூட்டிட்டு பார்க், ஹோட்டல், ஷாப்பிங், சினிமான்னு சுத்துவதற்கு!"

"உன் பிள்ளை என்ன சராசரி ஆம்பளையாம்மா...? பொண்ணுங்களைப் பார்த்து ஜொள்ளுவிட்டு... அதில் பிடிச்சவளை லவ் பண்ணி சுத்தி திரிய...?"

"உன் மனக்கதவை திறந்து உள்ளே ஒருத்தி புகுந்த பின்னால்... வேலை, சம்பாத்தியம் எல்லாத்தையும் கொஞ்சம் ஓரம்கட்டி வைத்துவிட்டு... அவ பின்னாடி சுத்தி திரியத்தான் போறே, சித்து...!"

"என்னம்மா... ஏதாவது சாமி வந்து... உன் கனவுல எதுனா சொல்லிச்சா...?"

"நீ வேணாப்பாரு... உன் இதயத்தைச் சலனப் படுத்தி... சஞ்சலப்படுத்தி... உன்னைத் திசை திருப்ப... ஒரு அழகு தேவதை வரத்தான் போறா...!"

"ஆஹா... நீங்க சொல்றதைக் கேட்க... ரொம்ப நல்லாத்தான் இருக்கு!" கேலியாய் ஒரு முறுவல் அவன் இதழ்களில் பூக்க...

"நக்கல் வேண்டாம், சித்து! சீக்கிரமே, சட்டென்று உன் தேவதையை... என் மருமகளைப் பார்க்கத்தான் போறே!"

"பார்த்து...?" ஒற்றைப் புருவம் தூக்கி அழகாய் கேட்க...

"அவ பின்னாடியே போவே...! நான் உன்னை நேசிக்கிறேன்... என்னைத் திருமணம் செய்துக்க சம்மதமா?ன்னு கேட்டு ஒற்றைக்கால்ல நின்று... தவமா தவமிருக்கப் போறே...!"

"அதெல்லாம் இந்த சித்தேஷ்வர்கிட்ட நடக்காதும்மா...!"

"நடக்கும்...!"

"என்மேல ஆசைப்பட்டு... ஒற்றைக்கால்ல நிற்கற... பெண்களோட வரிசையின் நீளம் எவ்வளவுன்னு தெரிந்தும்... நீங்க இப்படி பேசலாமா...?



அவதான் என்மேல் ஆசைப்பட்டு என்கிட்ட வந்து ஒற்றைக் கால்ல நின்னு... என்னைக் கட்டிக்கங்கன்னு தவமிருப்பா...!"

"நிற்கலேன்னால்...?" என்று எகத்தாளமாய் கேட்க...

"நிற்க வைப்பான் இல்ல, இந்த சித்தேஷ்வர்!" என்று மமதையோடும்... மலர்ச்சியோடும் சொன்னான், அவன் எண்ணம் நிறைவேறாது என்று தெரியாமல்...!

"ஏம்மா... இன்றைய காலகட்டத்துல எந்த பொண்ணும்மா மனசை 'டச்' பண்ற மாதிரி எதிர்ல வர்றா...? அதுஅது முகத்துக்கு ஒரு வண்டி கிரீமும்... உதட்டுக்கு ஒரு டப்பா சாயமும் பூசி... அரையும் குறையுமா உடுத்தி... ஆபாசமா பேசிட்டுன்னு... பொண்ணுங்க பார்க்க சகிக்கறாங்களா, என்ன...? எக்ஸாம்பிளுக்கு நம்ம ஆரண்யாவையே சொல்லலாம் இல்ல...?"

"ஐய்யோ மாமா... என்னை வம்புக்கு இழுக்கலேன்னா... உங்களுக்கு தூக்கமே வராதா...? இருங்க... இருங்க... ஆறுமுழம் சேலை கட்டி... பவுடர் பூச்சு இல்லாமல்... இயற்கையா... நல்ல பண்பாடும், ஒழுக்கமும் நிறைந்த... எந்த குணவதி வந்து... உங்களுக்கு மாலை சூடறான்னு பார்க்கத்தானே போறேன்...?"என்று ஆரண்யா செல்லமாய் மாமனை மிரட்டினாள்!

"சரி... உன் படிப்பெல்லாம் எப்படி போகுது...?"

"சுமாராதான் போகுது, மாமா!"

"பைனல் இயராச்சே... அரியர்ஸ் இல்லாமல் பாஸ் பண்ணிட்டு வந்துடுவியா...?"

"நல்ல காலேஜா... செலக்ட் செய்து என்னைச் சேர்த்திருந்தால்... அரியர்ஸ் இல்லாமல்தான் பாஸ் பண்ணிட்டு வ்ருவேன்! நீங்க என்னென்னா ஊத்த... டப்பா... காலேஜ்ல இல்ல சேர்த்து படிக்க வைக்கறீங்க...?"

ஆரண்யா குறும்பாய் உதடு பிதுக்கி அழகு காட்ட...

"நீ படிக்கற காலேஜ் ஊத்த காலேஜா...? டப்பா காலேஜா...?"

சித்தேஷ்வர் கேட்டுக் கொண்டே அவள் காதைப்பிடித்து திருகி...

"இந்த கோவையிலேயே நெம்பர் ஒன் பெஸ்ட் காலேஜ் அது! உனக்கு என்ன கொழுப்பிருந்தால் அந்த காலேஜ்ஜைப் பழிப்பே...?"

"ஐய்யோ... மாமா... தப்புதான்...! விடுங்க மாமா...! வலிக்குது மாமா...!" என்று சிணுங்க...

"அந்தக் கல்லூரிய்யை சரியில்லாத கல்லூரின்னு சொல்லுவீயா...?

"ம்கூம்...! மாட்டேன்...! உங்களுக்கு கோபமில்லே வந்து.... என் காதைத் திருகி வலிக்க வைப்பீங்க...?"

"ப்ரண்ஸ்ங்களோட சேர்ந்து சுத்த வேண்டியது...! அரட்டையடிக்க வேண்டியது...! கடைசியில கல்லூரியை குறை சொல்ல வேண்டியது!"

"எங்க கல்லூரியை குறை சொன்னால்... உங்களுக்கு எதுக்கு கோபம் வரணும்...?"

என்று கூறியவள் அவனிடமிருந்து விடுபட்டு ஓட... சித்தேஷ்வர் அவளைத் துரத்திக் கொண்டு ஓட...

அதை விழிவிரிய பார்த்துக் கொண்டிருந்தாள், கோதைநாயகி!

## 3

**கோ**வையிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் வழியில்... நகரைவிட்டு கொஞ்சம் தள்ளி... இயற்கை எழில் கொஞ்சும் சூழ்நிலையில்... மிகப் பிரமாண்டமான கட்டிடங்களுடன்... பல நூறு ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து இருந்தது, கல்லூரி!

நந்தனா உள்ளே நுழைந்து... நடைபாதையில் மெல்ல நடந்துக் கொண்டிருந்தாள்.

நடைபாதையின் இருமருங்கும் நடப்பட்டிருந்த குல்மொஹர், நாகலிங்க மரங்களின் அணிவகுப்பும்... ரோஜா, செம்பருத்தி இன்னும் பிற பூச்செடிகளும் மனதை மயக்கியது!

அதையெல்லாம் விழிகளால் ரசித்துக் கொண்டே சென்ற போது...

"ஏய் பெண்ணே... இங்கே வா...!" என்ற குரல் இழுக்க... சந்தேகத்தோடே திரும்பிப் பார்த்தாள், நந்தனா!

"ஏய்... உன்னைத்தான்... வா... இங்கே வா..."

என்று சொடக்கு போட்டு கூப்பிட அருகில் சென்றாள்.

மிடி, ஜீன்ஸ், டாப்ஸ், கிஸ்மி, ஐ லவ் யூ என்று அசிங்கமான வாசகங்கள் எழுதிய பனியன் என அணிந்துக் கொண்டு... ஐந்து இளம்பெண்கள் பெஞ்சில் அமர்ந்திருந்தனர், அதில் நடுநாயகமாய் பெரிய மகாராணி தோரணையில் ஆரண்யா அமர்ந்திருந்தாள்!

"கல்லூரிக்கு புதுசா...?"

பாப் செய்யப்பட்ட தலையை கோதிக்கொண்டு... அசல் ரவுடி லேடியைப் போல இருந்த ஆரண்யா கேட்க...

"ஆமாம்...!" என்றாள், நந்தனா.

"என்ன சேர்ந்திருக்கே...?"



நந்தனாவை படிக்க வந்தவள் என்று நினைத்து... அவளை ஒரு வழி பண்ணிவிட அவர்கள் நினைக்க... நல்ல கல்லூரி... ராகிங் போன்ற கெட்டபழக்கங்கள் இல்லாத கல்லூரி என கேள்வி பட்டிருந்த நந்தனாவிற்கு இது அதிர்ச்சியைத் தந்தது!

வேலைக்கு வந்திருக்கிறேன் என்று சொல்லாமல்... அவளும் கொஞ்சநேரம் மாணவியாய் மாறினாள்!

"எம். எஸ்ஸி.,"

"என்ன சப்ஜெக்ட்...?"

"கணிதம்...!"

"நீ நல்லா கணக்கு போடுவீயா...?"

"பி.எஸ்ஸியில கோல்ட் மெடலிஸ்ட்...!"

"ரொம்ப நல்லது...! நான் ஆரண்யா...! பி.எஸ்ஸி., பைனல் இயர்...! மேக்ஸ்தான்...! உன் பெயர் என்ன...?"

"நந்தனா...!"

"ரொம்ப அருமையான பெயர்! இங்கே பார், நந்தனா... எனக்கு கணக்கு சரியா வராது! இது நாள் வரை என் ஹோம்ஒர்க் வேலையைப் பார்த்துகிட்டது, நம்ம ராதிகாதான்! அவளும் பாவம் இல்லையா...? இனி அந்த வேலையை நீ ஏத்துக்கணும்...!"

"நானா...? ம்கூம்...!" என்று பயந்தாற்போல சொல்ல...

"ஏய் ஆரண்யா சொன்னால் மறுத்து பேசக்கூடாது! நல்லா படிக்கறவங்களைக் கண்டால் எனக்கு பிடிக்காது! அதனால், இதுபோல தண்டனையைக் கொடுத்து தண்டிப்பேன்! அதை ஏத்துக்கத்தான் வேணும்!"

நந்தனா மௌனமாய் நிற்க...

"மௌனம் சம்மதம் தானே...? நான் யார் தெரியுமா...? என் செல்வாக்கு என்ன தெரியுமா...? நான் இங்கே பெரிய மகாராணி! நான் காலால் இட்ட வேலைகளை கையால் செய்ய ஒரு கியூவே நிற்கும்!"

"ஆரண்யா... ரொம்ப மிரட்டாதே! பொண்ணு ரொம்ப பயந்துபோய் தெரியறா..." என்று ஒருத்தி இடைப்புக...

"ஏய் நீ எந்த நூற்றாண்டுல இருக்க...? இப்படி ஆறுமுழ சேலை கட்டி... அடர்ந்த கூந்தலை சாட்டையா பின்னி... இதெல்லாம் ட்டூ மச்...! சகிக்கலே...!"

ஆரண்யா அசிங்கமாய் முகம் சுருக்க...

"இந்தக் கல்லூரிக்கு மஞ்சளை முகத்துல அப்பிட்டு... சாந்து பொட்டு வச்சிட்டு வரவ... நீ ஒருத்தியாதான் இருக்கும்...!"

மஞ்சள் பனியன்காரி சொல்ல...

"நாளையில் இருந்து நீ மாடர்ன் ட்ரஸ்ல வரணும்! ஜீன்ஸ், மிடி, பனியன்னு..." ஆரண்யா சொல்ல...

"ஐய்யோ... நான் மாட்டேன்...!"

நந்தனா பெரிதாய் பயப்படுகிறவள் போல அலற...

"எதுக்குடி இந்த அலறு அலறரே...? உன்னையென்ன ட்ரஸ் இல்லாமலா வரச் சொன்னேன்...? மறுத்துப் பேசக்கூடாதுன்னு சொன்னேனே... மறந்துவிட்டதா...?

"இந்தக் கல்லூரி நல்ல கல்லூரி! ராகிங் போன்ற கெட்டப்பழக்கமில்லாத கல்லூரின்னு கேள்விப்பட்டேன்!"

"நல்ல கல்லூரிதான் கண்ணு, இது...! இங்கே எனக்கு மட்டும் விதி விலக்கு...!"

"உங்களைக் கல்லூரி நிர்வாகத்திடம் புகார் செய்வேன்...?"

"போ... போய் புகார் செய்யுடி! யார் என்னை நிற்க வைத்து கேள்வி கேட்கறா... தண்டனை கொடுக்கறாங்கன்னு பார்ப்போம்...!"

ஆரண்யா கோபம் கொண்டு சீறினாள்!

"உனக்கு டான்ஸ் ஆடத் தெரியுமா...?"

"ம்கூம்...!"

"அவ தோற்றத்தைப் பார்த்தே டான்ஸ்ல அடிப்படைக் கூட தெரியாதவன்னு தெரியலையா, ஆரண்யா...?" மிடிகாரி சொல்ல...

"பாடத் தெரியுமா...?"

நந்தனா தயங்க...

"மகளே... பாடிக்காட்டினால் நீ தப்பிச்சே...! இல்ல... வெறும் தரையில நீச்சலடிக்கணும்... கார் ஓட்டணும்... சைக்கிள் ஓட்டணும்... எப்படி வசதி...?"

நந்தனா வேறு வழியில்லாமல் பாடினாள்...

"பொன்னெழில் பூத்தது புதுவானில்...
வெண்பனி தூவும் நிலவே நில்...
என் மனத்தோட்டத்து வண்ணப்பறவை..."

"ஏய் இது என் பாட்டி கோதைநாயகிக்கு பாடவேண்டிய பாட்டு! ஏய்... ஏய்... நிறுத்து! புதுசா ஏதாவது குத்து சாங்ஸ் பாடி... லேசா ஆடுடி!"

"கற்றாழை கண்ணால குத்தாத நீ என்ன...
இல்லாத இடுப்பால இடிக்காத நீ என்ன..."

அவள் பாடி முடித்ததும்... "நல்லாத்தான்டி பாடுறே! நீ போகலாம்!



மாலை என் ஹோம் ஒர்க் நோட்டை வாங்கிட்டு போக மறந்துடாதேடி, புண்ணியவதி!"

நந்தனா அந்த ரவுடி கும்பலிலிருந்து தப்பி... தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டாள்.!

சலசலத்துக் கொண்டிருந்த வகுப்பறை... கல்லூரி முதல்வர் எழில்மதி வந்ததும் கப்சிப் என்றாகியது!

பின்னாடியே வந்து நின்ற நந்தனாவைக் கண்ட... கடைசி பெஞ்ச் அதிர்ந்தது!

"ஏய் தீப்தி... நாம்ப ரேக் பண்ணின பொண்ணு எதுக்குடி இங்கே வந்திருக்கா...?" இது ஆரண்யா...

"கல்லூரி முதல்வர்கிட்ட கம்ளைண்ட் செய்து கூட்டிட்டு வந்திருக்கான்னு நினைக்கிறேன்...!" இது தீப்தி...

நீளமான முடியை சுற்றி சுழற்றி கொண்டையா போட்டிருக்கா...! நம்ம முன்னாடி பெரும் பயம்கொள்ளியா நின்னவ... என்ன இது இத்தனை கம்பீரமா நிற்கறா! இது மாயா...

"புரியலையே... தலைசுத்துதே..." இது சங்கீதா...

"உங்க யாருக்கும் புரியலையா... நமக்கெல்லாம் பெருசா ஆப்பு சீவி எடுத்து வந்திருக்கான்னு தோணுது!"

"எப்படி?"

"புது புரபசர் வரப்போறதா சொன்னாங்களே... அது இவளா... ம்கூம் இவங்களா இருக்குமோ...!" என்று கீர்த்தனா பயத்தோடு சொல்ல... அவள் யூகமே சரியாய் இருந்தது.

"டியர் ஸ்டூடண்ட்ஸ்... இவங்க உங்க புது புரபஸர்! பி. எஸ்ஸி, எம். எஸ்ஸி., எம்.பில்., எல்லாத்திலும் கோல்ட் மெடலிஸ்ட்! இதுக்கு முன்னா கற்பகம் காலேஜ்ல வொர்க் பண்ணினவங்க! டேலண்ட் யெங் பர்சன்! இவங்களை நீங்க பயன்படுத்திகணும், ஸ்டூடண்ட்ஸ்! நான் வரேன்...!" என்று கூறிவிட்டு அவர் வெளியேற...

வகுப்பே அவளின் தோற்றம், அழகு கண்டு ஆர்வமாய் பார்த்திருக்க... ஆரண்யாவைத் தவிர அவளது கூட்டாளிகள் கலவரமாயினர்!

நந்தனா கடைசி பெஞ்சைப் பார்த்து சத்தமாய் குரல் கொடுத்தாள்!

"கடைசி பெஞ்ச் கேர்ள்ஸ் எழுந்து வெளியேப் போங்க..."

அந்த ஐவரும் கல்லுபோல அமர்ந்திருக்க...

"என்ன காதில் விழவில்லையா...? ஆரண்யா மற்றும் அவ குரூப்புக்குத்தான் இந்த ஆணை...!"

நந்தனாவிடமிருந்து கோபமான சொற்கள் வெளிப்பட்டும் அவர்கள் எழாமல் இருக்க...

"ஏய் எழுந்திருங்கடி! வெளியேப் போங்கடி...! உங்க பேரண்ஸோட வந்தாதான் உள்ளே அலவ் பண்ணுவேன்...!"

"நாங்க எதுக்கு வெளியேப் போகணும்...?"

ஆரண்யாதான் சண்டைக் கோழியாய் சிலிப்பிக் கொண்டு கேட்டாள்.

"நீங்க ஐவரும் செய்த தப்புக்குதான்...!"

"நான் யாருன்னு உங்களுக்கு தெரியாது...!"

"நீ யாரா இருந்தா எனக்கென்ன...?"

"என்கிட்ட மோதாதீங்க...! வம்பை விலைக்கு வாங்காதீங்க...!"

"என்ன மோதாதே...? என்ன வம்பு...? ம்...? நீ என்ன ஜனாதிபதி மகளா...? இல்ல பிரதம மந்திரி மகளா...? இல்ல முதலமைச்சர் மகளா..? இவங்கள்ல யாரோட மகளா இருந்தாலும் எனக்கு கவலையில்லே...! பயமுமில்லே...! கோ அவுட்...!"

ஆரண்யா மற்றும் குரூப் எழுந்து... அவமானத்தில் தலைகுனிந்து வெளியே சென்றனர்.

"நிஜமாகவே ஸ்டூடண்ட் மாதிரி பயந்து பம்மினாலே எல்லாம் நடிப்புன்னு தெரியாமல் போச்சே!"

"இவளைச் சும்மாவிடக் கூடாது. ஆரண்யா...!"

"நம்மைவிட நாலைந்து வயதுதான் பெரியவளா இருப்பா...! இந்த சின்ன வயதிலே புரபசராயிட்டோம்... சம்பாதிக்கிறோம்கிற திமிர் அவகிட்ட நிறைய இருக்கு...!"

"இவளைச் சும்மாவிட்டால் நம்மை அவமட்டுமில்லே... இந்த காலேஜே கைக்கொட்டி துச்சமா நினைச்சி சிரிக்கும்...! ஓட ஓட விரட்டும்...!"

"பயந்தவங்க எல்லாம் பாய ஆரம்பிச்சுடுவாங்க...!"

"நம்மகிட்ட பயம் இருக்கும்வரைதான் நம்ம ராஜ்ஜியம் நடக்கும்...! நீ மகாராணிங்கிறதை நிரூபிக்கணும், ஆரண்யா!"

ஆளாளுக்கு ஆரண்யாவிற்கு கொம்பு சீவ... அவளோ ஜல்லிக்கட்டு காளையானாள்...!

விடுவேனா...? அவளை விடுவேனா...? நான் யார்ங்கிறதைத் தெரிஞ்சி... ஐய்யோ... இவகிட்ட வைச்சிகிட்டோமேன்னு அவள் நொந்து நூலாகிப் போகணும்!



என்று கறுவிய ஆரண்யா போனை எடுத்தாள்.

நகரின் மையத்தில் இருந்த ஆபீஸில் அமர்ந்து... மேனேஜர் கொடுத்த பைல்களைப்பார்த்து கையெழுத்திட்டுக் கொண்டிருந்த சித்தேஷ்வரின் போன் இசைக்க... திரையில் 'ஆரண்யா காலிங்' என்ற எழுத்துகள் மின்ன... ஆன் செய்து காதில் வைத்தான்.

"மாமா... நீங்க உடனே கல்லூரிக்கு வாங்க...!" என்று கம்மிய குரலில் அழைக்க...

"என்ன விஷயம், ஆரண்யா...? ஆபீஸ்க்கு இப்போ தானே வந்தேன்...? நிறைய வேலையிருக்கும்மா...! காரணத்தைச் சொன்னால் வரலாமா...? வேண்டாமா?ன்னு யோசிப்பேன்..!"

"மாமா... கேள்வி எதுவும் கேட்காமல் வாங்க, மாமா... ப்ளீஸ் மாமா..." என்று ஆரண்யா அழ...

"ஏய்... எதுக்கு அழறே...? வரேன்... வரேன்..."

சித்தேஷ்வர் உடனே கிளம்பினான்.

"அன்புள்ள மாணவர்களே.... நான் உங்க புது பேராசிரியர்...! என் பெயர் நந்தனா...! எல்லோர் மனதிலும் ஆரண்யா குரூப்பை ஏன் வெளியே அனுப்பினேன்னு கேள்வி பிறந்திருக்கு... அப்படித்தானே...?"

"யெஸ் மேம்..." என்று மாணவ, மாணவிகள் கோரசாய் குரல் கொடுக்க...

"இந்தக் கல்லூரி ரொம்ப ரொம்ப நல்ல கல்லூரி...! 'ரேகிங்' போன்ற கெட்ட பழக்கமில்லேன்னு கேள்விபட்டு வந்தேன்...!

நிறைய பேரண்ஸ் மத்தியிலே நல்ல அபிப்பராயம் இருக்கு! அதான் மாணவர்கள் எண்ணிக்கையிலும் முதலிடத்துல இருக்கு! அப்படியொரு பெஸ்ட் காலேஜிக்கு வேலைக்கு போறோம்ங்கிற பூரிப்புல, பெருமையில உள்ளே நுழைஞ்சா... அந்த ஐந்து தடிக்கழுதைகளும் வளைச்சி பிடிச்சி... என்னை உண்டு இல்லைன்னு செய்துட்டாங்க...!

நானும் புரபசர்ங்கிறதை மறைச்சி... ஸ்டூடண்ட் போல கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லி... பாடி, ஆடின்னு ரொம்ப கொடுமை ஸ்டூடண்ட்ஸ்...! என் இடத்தில் நிஜமாகவே ஒரு ஸ்டூடண்ட் இருந்திருந்தால்... இந்தக் கல்லூரியையும்... படிப்பையும் வெறுத்து ஓடிப்போய் இருப்பாங்க!...

எத்தனை பெற்றோர்களின் வியர்வையில் விளைந்த காசில் படிக்க வராங்கன்னு அந்தப் பணக்கார பொண்ணுங்களுக்கு தெரியுமா...?

நான் நல்லவர்களுக்கு நல்லவளா இருப்பேன்...! கெட்டவங்களுக்கு... நானும் அவங்க லெவல்லே இறங்கிடுவேன், ஸ்டூடண்ட்ஸ்!

என்னடா இந்த அளவு கண்டிப்பா பேசறாங்கன்னு பயப்பட வேண்டாம்!

நான் அன்பானவள்...! எனக்கு மரியாதைக் கொடுக்கறவங்களை ரொம்ப பிடிக்கும்...! கற்பகம் கல்லூரியிலே உங்க ப்ரண்ட்ஸ் இருந்தால் கேட்டுப்பாருங்க! அவங்க என்னைப்பற்றி சொல்லுவாங்க...!

நான் உங்ககிட்ட எதிர்பார்க்கறது அமைதியை... ஒழுக்கத்தை... பண்பாட்டைத்தான்! பாடத்துக்கு போகலாமா...?"

ஒரு மாணவி எழுந்து...

"அவள் யாருன்னு தெரியாமல் வெளியே அனுப்பிட்டீங்களே, மேடம்! அவள்..."

அந்தப் பெண்ணை மேலே சொல்ல விடாமல் கை அமர்த்திய நந்தனா...

"அவள் யாராயிருந்தாலும் எனக்கு கவலையில்லே...! தெரிஞ்சிக்க விரும்பலேம்மா...! நீ உட்கார்...! பாடத்தைக் கவனி...!"

என்றதும் வாயை மூடிக்கொண்டு அந்த மாணவி அமர்ந்துவிட... நந்தனா பாடத்தை நடத்தினாள்.

கல்லூரி கேட்டருகே கையை பிசைந்துக் கொண்டு ஆரண்யா அங்குமிங்கும் நடைபோட... சித்தேஷ்வர் வந்து சேர்ந்தான்.

"என்ன ஆரண்யா...? எதுக்கு அழைச்சே...?"

"புதுசா ஒரு மேடம் வந்திருக்காங்க...! என்னை வெளியே அனுப்பிட்டாங்க...!" என்று அழுகையோடு சொல்ல...

"நீ என்ன தப்பு செய்தே...?"

"அவங்க யார்ன்னு தெரியாமல்... கல்லூரி வாசல்ல வைச்சி... நீங்க யாரு...? உங்க பேரென்ன...? எந்த கோர்ஸ் சேர்ந்திருக்கீங்க?ன்னு கேட்டேன்...! அதை அவங்க 'ரேக்கிங்'ன்னு தப்பா புரிஞ்சிகிட்டு... வகுப்புக்கு வந்ததும் எங்களை வெளியே அனுப்பிட்டாங்க!"

"நீ நிஜமாகவே அவங்களை 'ரேக்கிங்' செய்யலையே...?"

"ம்கூம்...!"

"சாதாரண நலம் விசாரிப்புக்கும்... ரேக்கிங்குக்கும் வித்தியாசம் தெரியாத புரபசர்... அது யாரும்மா...?"

சித்தேஷ்வர் கோபப்பட்டான்.

ஆபீஸரும் போக... முதல்வர் ஓடிவந்து வரவேற்றார்!

விபரம் சொல்ல... பியூனைவிட்டு நந்தனாவை அழைத்துவரச் சொன்னார், எழில்மதி.



"அம்மா... உங்களைப் பார்க்க சித்தேஷ்வர் ஐயா வந்திருக்காங்க!" பியூன் நந்தனாவிடம் சொல்ல...

"அது யாரு சித்தேஷ்வர் ஐயா...?"

"ஆரண்யா மேடத்தோட மாமா...!"

"எதுக்கு வந்திருக்கார்...?"

"ஆரண்யா மேடத்தை எப்படி வெளியில அனுப்பலாம்ன்னு கேட்க வந்திருக்கார்!"

"அவரை இங்கே வரச்சொல்லுங்க!"

"அவர் யாரு...? எவ்வளவு பெரிய மனுஷன்...? ம்கூம்...! அவரெல்லாம் இங்கே வரமாட்டார்! ஆபீஸரும்ல உட்கார்ந்திருக்கார்! முதல்வர் ஐயா... உங்களைக் கையோட கூட்டிட்டு வரச்சொன்னார்!

ஆரண்யா மேடம் யார்ன்னு தெரியாமலேயே அவங்க கிட்ட வச்சிட்டு இருக்கீங்களே...? உங்கமேல நிர்வாகம் என்ன ஆக்ஷன் எடுக்குமோ...! வந்தமுதல் நாளே..."

"ஏய் மிஸ்டர் உன் வேலையென்ன...? செய்தியை சொல்லிட்ட இல்ல...? நீ போயிட்டே இரு!"

நந்தனா அதட்ட... பியூன் வாயை மூடிக் கொண்டு சென்றுவிட்டான்.

அந்த முகமறியாத சித்தேஷ்வர் மேல் பயங்கர கோபம் கொண்டு எரிமலையாய் கிளம்பினாள், நந்தனா!

சித்தேஷ்வரிடம் நெருப்பை கக்குவாளா...? அல்லது நெஞ்சத்தைத் தருவாளா...?

## 4

நிலவின் ஜொலிப்புடன் அழகான வட்ட வடிவ வதனம்...! சின்ன பிறை நெற்றி...! மன்மதனின் கையிலிருக்கும் வில்லாய் வளைந்த இருபுருவங்கள்....! மீன் குஞ்சுகளாய் இரண்டு நீண்ட பெரிய நயனங்கள்...!

ரோஜா இதழை பிய்த்து ஒட்டவைத்தாற்போல உதடுகள்...! வெண்மொட்டு வரிசைப் பற்கள்...!

அடர்ந்த நீண்ட தலைமுடி...! கொடியிடை...! நல்ல உயரம்...! நல்ல நிறம்...!

எதிராளியை வீழ்த்தும் அங்க லாவண்யங்கள்...!

அம்சமான உடல்வாகு...! அசர வைக்கும் பேரழகு...!

அடர்ந்த கூந்தலை இழுத்து இறுக்கி கொண்டையாய் சுற்றியிருந்த விதமும்... காதோரம் சொருகியிருந்த ரோஜா கூடுதல் அழகைக் கொடுத்தது!

எளிய பருத்தியாடையில்... மஞ்சளில் மினுமினுத்த முகத்துடன்... பிரம்மன் முழுத்திறமையையும் கொட்டிப் படைத்த... அந்தப் பேரழகியையே சித்தேஷ்வர் கண்ணிமைக்காது விழிவிரியப் பார்த்தான்!

வந்து நின்ற நந்தனாவையே மாமன் விழிவிரிய... ரசிப்புத் தன்மையுடன் பார்த்துக் கொண்டிருக்க... அதைக்கண்ட ஆரண்யாவிற்கோ பற்றிக்கொண்டு வந்தது!

நந்தனா சித்தேஷ்வரை ஒரு முறைப்புடன் பார்த்துக்கொண்டு வந்து நின்றாள்!

"இவங்கதான் மிஸ் நந்தனா! புதுசா அப்பாய்ண்மென்ட் ஆன புரபசர்!"

பள்ளிமுதல்வர் எழில்மதி அறிமுகப்படுத்த...

ஆரண்யாவை வகுப்பிலிருந்து வெளியேற்றியவளை... ஆரண்யாவை அழ வைத்தவளை நாலு வார்த்தை நறுக்கென்று கேள்வி கேட்க நினைத்த நான் இப்படி அவளை பட்டிக்காட்டான் மிட்டாய்கடையை முறைத்துப் பார்ப்பது போல பார்த்தாள் இந்த நந்தனா என்னைப் பற்றி என்ன நினைப்பாள்...?

தனது அக்காமகளை அவமானப்படுத்தியவளை... அழவைத்தவளை சும்மாவிடக்கூடாது என்ற எண்ணம் வர... அவன் முகமும் கோபத்திற்கு மாறியது.

"ஆரண்யா... என்ன தப்பு செய்தா... எதுக்கு வெளியே அனுப்பனீங்க...?"

கால்மேல் கால்போட்டுக் கொண்டு சித்தேஷ்வர் கேட்க...

"அதுக்கு முன்பு என் கேள்விக்கு பதில் சொல்லுங்க? இது முறையா...?"

"எது முறையா...?"

"ஸ்டூடண்ட் தப்பு செய்தால்... அவளுடைய பெற்றோரோ... பாதுகாவலரோ... சம்பந்தப்பட்ட பேராசிரியரை வந்து பார்க்கணும்! அதைவிட்டு நீங்க இப்படி கல்லூரி கரஸ்பாண்டண்ட் அறையில "மேடம்... மேடம்..." என்று குறுக்கே புகுந்த பள்ளி முதல்வர் எழில்மதியை கையமர்த்தினாள், நந்தனா.



"இருங்க சார்... இவர்கிட்ட பேசவேண்டியது பாக்கியிருக்க... அதை முடிச்சிடறேன்! எங்கே விட்டேன்...?" என்று அழகு விழிகளை சித்தேஷ்வர்மேல் அம்பாய் பாய்ச்சி கேட்க... அவன் அப்படியே சொக்கிப்போய்...

"கல்லூரி கரஸ்பாண்டண்ட் அறையில நுழைஞ்சி..." என்று ஊக்குவிக்க...

"ம்... ம்... கல்லூரி கரஸ்பாண்டண்ட் அறையில நுழைஞ்சி... ஏசி காற்றை ஓசியில வாங்கிட்டு... எங்க தரமான கல்லூரியின் மானத்தை வாங்கற... பேரைக் கெடுக்கற... தப்பு செய்த பெண்ணுக்கு பரிஞ்சிட்டு வரீங்களே... நீங்க யார்...?

இவளும் நான் யார் தெரியுமா...? என் செல்வாக்கு தெரியுமா...? என்கிட்ட மோதி வம்பை விலைக்கு வாங்காதீங்கன்னு பெருசா பில்டப் கொடுக்கறா...!

நீங்க அமைச்சரோ... இல்ல சட்டமன்ற உறுப்பினரோ இல்லைங்கிறது தெரியுது! அப்போ நீங்க யாரு...? உங்க செல்வாக்கு என்ன...? சொன்னால் தெரிஞ்சிக்கிறேன்...!"

நந்தனா பயமற்று... வில்லாய் வளைந்த புருவத்தை அலட்சியமாய் தூக்கி கேட்க...

"நிஜமாகவே... உங்களுக்கு நான் யார்ன்னு தெரியலையா...?"

"நெற்றியில எழுதி ஒட்டியிருந்தாக்கூட படிச்சி தெரிஞ்சுக்கலாம்...!"

நந்தனா குறும்சிரிப்போடு பட்டென்று சொல்ல...

"ஏய்... எங்க மாமாவையே கிண்டல் பண்றியா...?" என்று ஆரண்யா எகிற...

"ஆரண்யா... பாடம் கற்பிக்கிற பேராசிரியர்கிட்ட எப்படி பேசணும்ன்னு தெரியாதா...? என்ன இது அசிங்கமா 'ஏய்... ஓய்...'ன்னுட்டு...?"

என்று சித்தேஷ்வர் ஆத்திரத்துடன் அதட்ட... ஆரண்யாவோ மாமனின் மிதமிஞ்சிய கோபத்தைக் கண்டு வாயை கப்பென்று மூடிக்கொண்டாள்!

சித்தேஷ்வரின் முகம் அவமானத்தில் கறுத்ததைக்கண்ட பள்ளிமுதல்வரோ... நந்தனாவின் துடுக்குத்தனமான பேச்சு சித்தேஷ்வரைக் காயப்படுத்தியிருக்குமோ என்று கலங்கினார்.

"என் பெயர் சித்தேஷ்வர்!"

"நல்ல பெயர்தான்! சரி இருந்துட்டு போகட்டும்!" என்று அலட்சியமாய் சொல்ல...

"சித்தேஷ்வர் ஆர்ட்ஸ் அண்ட் சயன்ஸ் காலேஜ்... சித்தேஷ்வர் இஞ்சினியரிங் காலேஜ்... சித்தேஷ்வர் மெட்ரிகுலேஷன் ஸ்கூல்... சித்தேஷ்வர் சி.பி.எஸ்.சி ஸ்கூல்... சித்தேஷ்வர் கோல்டு பேலஸ்... சித்தேஷ்வர் சில்க் பேலஸ்... சித்தேஷ்வர் பில்டர்ஸ்... இப்படி என்னுடைய இராஜ்ஜியங்களை அடுக்கிகிட்டே போகலாம், மேடம்! சித்தேஷ்வர் குழுமத்தோட எம்.டி நான்! இந்தச் சொத்துகள் அனைத்துக்கும் சொந்தக்காரனும், நான்தான்! என்னைப் போய் கரஸ்பாண்டண்ட் அறையில நுழைஞ்சி ஏசிகாற்றை ஓசியில வாங்கறீங்களான்னு குற்றம் சாட்டறீங்களே? இப்போ தெரியுதா நான் யாரென்று...?"

சித்தேஷ்வர் மிதப்பாய் கேட்க... நந்தனா விதிர்விதிர்த்துப் போனாள்...!

சித்தேஷ்வர் என்ற பெயரைக் கேட்டதும் தான் வேலைக்குச் சேர்ந்த கல்லூரிதான் என்று எப்படி தெரியாமல் போனது, எனக்கு...?

இவ்வளவு ஞாபக மறதிகாரியாகவா நான் இருக்க வேண்டும்...?

வந்த முதல்நாளே இப்படி தேவையில்லாத பிரச்சனையில் மாட்டி... இந்த ஆரண்யா ரூபத்தில் என் வேலைபோக வேண்டும் என்று என் தலையில் எழுதியிருக்கிறதா...?

நல்ல கல்லூரி... அரசு கல்லூரிக்கு இணையான சம்பளம்... சலுகைகள்... மரியாதைகள்... என்றெல்லாம் கேள்விபட்டுதானே முன்பு பணியாற்றிய கல்லூரியில் இருந்து தாமதிக்காமல் வேலையை விட்டு நின்றேன்!

பொறுத்திருக்கலாமோ...?

அந்தக் கல்லூரியில் பெரிய லீவு போட்டுவிட்டு... இந்தக் கல்லூரியின் நம்பகத்தன்மை, தரம் என்றெல்லாம் ஆராய்ந்து தன்னை இங்கு நிலைநிறுத்திக் கொண்டு... பின்னர் அந்தக் கல்லூரியின் வேலையை விட்டிருக்கலாமோ....?

என்றெல்லாம் எண்ணியவாறு நந்தனா நிற்க...

"எங்க ஆரண்யா செய்த குற்றம்தான் என்ன...?" மிடுக்காய் வந்த சித்தேஷ்வரின் கேள்வியில் நினைவுக்கு வந்தாள். அந்தக் கேள்வி அவளை உசுப்பிவிட்டுவிட ஆத்திரமானாள்.

"அவ சொல்லலையா...?"

"சொன்னாள்! ஆனாலும் நீங்க சொல்லுங்க...? தெரிஞ்சிக்கிறேன்...?"



"இந்தக் கல்லூரியில் 'ரேக்கிங்'கிற கெட்டப் பழக்கம் இல்லைதானே, சார்?"

"ஆமாம்... ராகிங் பண்ணின யாரையும் இங்கே கல்லூரி நிர்வாகம் தொடர்ந்து படிக்கவிடறதில்லே! உடனே டி.சி கிழிச்சி வெளியே அனுப்பிடுவோம்!"

"அப்படியா...? அப்போ அதை ஆரண்யாவுக்கு செய்ங்க...?"

"அவள் என்ன செய்தாள்...?"

"என்னை வழிமறிச்சி 'ராகிங்' செய்தாள்!"

"நீங்க பேராசிரியர்ன்னு தெரியாமல்... மாணவின்னு நினைச்சி உங்க பெயர் என்ன...? எந்த படிப்புல சேர்ந்திருக்கீங்க...? என்று சின்னதா உங்களைப்பற்றி விசாரிச்சதை... நீங்க தப்பா அர்த்தம் எடுத்துட்டா... அதுக்கு, ஆரண்யா என்ன செய்வாள்...?"

சித்தேஷ்வர் இப்படி கேட்க... நந்தனாவினுள் மலையளவு கோபம் பொங்கியது!

'நிஜம் என்ன என்று தெரியாமல்... ஆரண்யா சொன்னதை அப்படியே நம்பிவிட்டானே!'

"நீ என்னை 'ரேகிங்' பண்ணலே...?" ஆரண்யாவைப் பார்த்து கேட்க...

"இல்லை...!" என்று பட்டென்று சொல்ல...

"என்னை நீ பாடச் சொல்லல...?"

"ஐய்யோ... ஏன் இப்படி அபாண்டமா பழிசுமத்தறீங்க, மேடம்...?"

"நீ என்னைக் குத்துப்பாட்டுபாடி... லேசா ஆடச் சொல்லலே...?" என்று ஒரு தீட்சண்யப் பார்வையை ஆரண்யாமேல் வீசிக் கேட்க...

"அநியாயத்துக்கு பொய் சொல்லாதீங்க, மேடம்...! மாணவின்னு நினைச்சதாலதான்... உங்களை நிறுத்தி சும்மா சின்னதா விசாரிச்சேன்! பேராசிரியர்ன்னு தெரிஞ்சிருந்தால்... நான் உங்களை வணங்கி வரவேற்று இருப்பேன்!"

என்று ஆரண்யா நல்ல பிள்ளையாய் பேச...

"ஆரண்யா... உண்மையைச் சொல்லு...?" என்று மிரட்டலோடு சித்தேஷ்வர் கேட்க...

"ஐய்யோ மாமா... நான் பொய் சொல்லுவேனா...? நீங்க என்னை அப்படியா வளர்த்திருக்கீங்க...? நான் உங்க வளர்ப்பு, மாமா! என்னைக்குமே பொய் சொல்ல மாட்டேன்! என்னை நம்புங்க, மாமா!"

என்றவள் அங்கே நின்ற தீப்தி, மாயா, சங்கீதாவைப் பார்த்து...

"ஏய்... மரம்மாதிரி நிற்கறீங்களே...! மாமா... நான் பொய் சொல்றதா நினைக்கறாங்க! இவளுங்களைக் கேளுங்க... மாமா? என்னைக் குற்றவாளிபோல பார்க்காதீங்க, மாமா!"

என்று ஆரண்யா சட்டென்று நீலிக்கண்ணீர் வடிக்க... சித்தேஷ்வரின் மனம் ஆரண்யா பொய் சொல்ல மாட்டாள் என்று பயங்கரமாய் நம்பியது!

"என்னம்மா... நலம் விசாரிச்சீங்களா...? இல்ல, ராகிங் பண்ணீங்களா...?"

அவர்களுக்கு பொய் சொல்ல கஷ்டமாய் இருந்தது!

ஆனால், ஆரண்யாவிற்கு எதிராய் இதுவரை சிறுதுரும்பைக்கூட கிள்ளிப் போட்டதில்லை! அப்படி அவளுக்கு மாறாய் நடந்துக் கொண்டால்... அவள் தாக்குதலுக்கு தாங்க முடியாது!

அடுத்தது... அவர்களுக்கான துணி, பேன்சி பொருட்கள் வாங்கிக் கொடுப்பது... ஹோட்டலுக்கு கூட்டிப் போய் வயிறார உணவளிப்பது... கேக், பீட்சா, பர்க்கர், கோக், பெப்சி என்று நொறுக்குத் தீனி அயிட்டங்களை வாங்கிக் கொடுப்பது...

சிலசமயம் மாமனிடம் கெஞ்சி... அவர்களின் டெர்ம் பீஸை கட்டாமல் செய்வது... என ஏகப்பட்ட நல்லது செய்யும் ஆரண்யாவிற்கு எதிராய் பதில் சொல்ல மனம் வராமல் போனது!

அடுத்ததாய், இன்று வந்த பேராசிரியைக்காக பள்ளி வயதிலிருந்து நகமும், சதையுமாய் பழகிய தோழியை விட்டுக் கொடுக்க மனமில்லாமல்...

"வெறும் நலம் விசாரிப்புதான், மாமா!" என்று கோரசாய் சொல்ல...

அந்த நால்வரையும் நம்பியிருந்தவளுக்கு அவர்களின் பதிலில் கொதித்துப் போனாள்.

'இங்கு நியாயம் எடுபடாது!' என்று உணர்ந்தாள், நந்தனா.

ஆரண்யாவை பயங்கரமாய் நம்பிய சித்தேஷ்வர்... நந்தனாவைப் பார்த்து...

"மேடம்... எங்க ஆரண்யாவிற்கு தாயில்லாததால கொஞ்சம் செல்லம் கொடுத்து வளர்த்துட்டோம்! கொஞ்சம் குறும்பு ஜாஸ்தி! மத்தபடி ரொம்ப நல்ல பொண்ணு, என் அக்கா மகள்! நீங்கதான் வெறும் விசாரிப்புக்கும்.. ராகிங்குக்கும் வித்தியாசம் தெரியாமல் குழம்பி தவறுதலா நினைச்சிட்டீங்க!

சரி போகட்டும் விடுங்க! ஏய் ஆரண்யா மேடம் கிட்ட மன்னிப்பு கேளு! மேடம் சொல்படி நடந்துக்கோ!"



"மேடம்... நான் உங்களை மாணவின்னு நினைச்சிதான் நலம் விசாரிச்சேன்! அப்படி விசாரிச்சது உங்க மனசைக் காயப்படுத்தியிருந்தால்... என்னை மன்னிக்க வேண்டுகிறேன், மேடம்!"

ஆரண்யா அநியாயத்துக்கு குழைந்து... உருகி... வார்த்தைகளை வெளியிட்டு... பவ்யமாய் வணங்கி... உடனே அங்கிருந்து அகன்று விட்டாள்.

நந்தனாவின் விழிகளில் நெருப்புச் சுடர் மின்னியது!

"முதல்வர் சார்... பேராசிரியர் பொய் பேசுவாங்க... மாணவி பொய் பேசமாட்டான்னு நினைக்கற... நியாயம் இல்லாத இடத்திலும்... உண்மையைவிட பொய்க்கு மதிப்பளிக்கும் இந்த கல்லூரியில் வேலை செய்ய விரும்பலே, சார்! என் ராஜினாமா கடிதத்தை போஸ்டல்ல அனுப்பிடறேன். நான் வரேன்!"

பள்ளி முதல்வரைப் பார்த்து சொன்னவள்... சித்தேஷ்வரிடம் சொல்லாமல்... ஏன் அவனைத் திரும்பிக் கூடப் பார்க்காமல்... நந்தனா எரிமலை 'லாவா'வாய் வெளியேறினாள்!

அவளின் செய்கையால்... அவள்மேல் நேசம் கொண்ட சித்தேஷ்வரின் மனம் அனிச்சமலராய் வாடிப்போனது!

## 5

**வா**னவீதியில் நிலவு நங்கை... முகம் முழுக்க வெட்கத்தை அப்பிக் கொண்டு... கொடியிடை அசைய மெல்ல நடைப்பயில... நட்சத்திர இளைஞர்கள் நிலவை் வழிமறித்து கண்சிமிட்டி கலாட்டா செய்ய... அந்த நங்கையோ அவர்களுக்கு பயந்து மேகங்களில் மறைந்து மறைந்து ஓடிக் கொண்டிருந்த ரம்யமான, இரவு எட்டுமணி!

சித்தேஷ்வர் பங்களாவிற்குள் நுழைந்து... தாயின் அருகில் போய் அமர்ந்தான்.

"சித்தேஷ்... என்னப்பா ரொம்ப களைப்பா தெரியறே...?" என்று கோதை நாயகி கேட்க...

"அம்மா... உங்க மடியில கொஞ்ச நேரம் தலைவைத்து படுத்துக்கவா...?"

"என்ன சித்தேஷ்... இதுக்கெல்லாம் என் அனுமதி கேட்கணுமா...? இது உனக்கு சொந்தமான மடி! படுப்பா...!"

என்ற கோதைநாயகி, சித்தேஷ்வரை மடியில் சாய்த்து... நெஞ்சை இதமாய் நீவ...

"அம்மா... இந்த மடி எனக்கு மட்டும்தான் சொந்தமா...? அப்பா காதுல விழுந்துடப்போகுது... பெரிசா சண்டைக்கு வந்துடப் போறார்!"

சித்தேஷ்வர் அந்தக் கவலையிலும்... தாயின் சொற்களில் இரட்டை அர்த்தம் எடுத்து கிண்டலடிக்க...

"ஆனாலும் உனக்கு வாய்நீளம்தான் சித்தேஷ்! உன்கிட்ட எவ மாட்டிட்டு முழிக்கப் போறாளோ....? முழிப்பிதுங்கப் போறாளோ...? பாவம்...! அந்த ஜீவனுக்காக நான் இரக்கப்படறேன்!"

என்று கோதைநாயகி சிரிப்பை மென்று விழுங்கி மலர்ச்சியாய்ச் சொல்ல...

"அப்படி ஒரு ஜீவனை நான் கண்ணால பார்த்தாச்சே...!" சொன்ன சித்தேஷ்வர் முகம் பூரிப்பில் மின்னியது.

"என்ன சொல்றே, சித்து...?"

"அம்மா... உங்களுக்கு முதல்ல நல்ல செய்தி சொல்லவா...? இல்ல கெட்ட செய்தி சொல்லவா...?

"என்னப்பா... சர்ப் எக்ஸ் எல் விளம்பரப் பையன் போல கேட்கறே...?"

"சொல்லுங்கம்மா...?"

தாயின் முகம் பிடித்து கொஞ்சலோடு கேட்க...

"நல்ல செய்தியே சொல்லு, சித்து?"

"நான் உங்க மருமகளை... என் இதய தேவதையைக் கண்டேன்...!"

"நிஜமாவா... சித்து? அப்புறம்...?"

"காதல் கொண்டேன்...!"

"சொல்லுடா... சொல்லு... என் மருமகள் பெயர் என்ன...?"

"நந்தனா!"

"அருமையான பேர்! எங்கே பார்த்தே, அவளை?"

"நம்ம கல்லூரியில்!"

"எப்படி இருப்பா, என் மருமகள்?"

"நல்ல நிறம்... நல்ல உயரம்... நிலாபோல வட்டமுகம்! மூக்கும், முழியும் எத்தனை அழகு தெரியுமா...? கண்ணை விரிச்சு ஒரு பார்வை... அதுவும் கோபமாத்தான் பார்த்தாள்...! அந்தப் பார்வையிலே... அந்த விழிகளிலே அப்போதே சட்டென்று விழுந்துட்டேன்ம்மா, எழவே முடியாத அளவு!"

சித்தேஷ்வர் ரசிப்புடன் சொன்னான்.

"ஆமா... என் மருமகள் எந்த நடிகை சாயலில் இருப்பா...?"



"உங்களுக்கு பிடிச்ச காஜல் அகர்வாலோட பெரிய தீட்சண்ய கண்கள்...! அது மையெழுதாமலேயே என்னை மயக்கிவிட்டதம்மா!"

"ஐய்யோ காஜல்அகர்வாலோட கண்ணா... அப்புறம்... அப்புறம்...?"

கோதைநாயகி சந்தோஷத்தில் சிறுகுழந்தையாகிவிட்டாள்.

"ஒரு கல் ஒரு கண்ணாடி படத்துல நடிச்ச ஹன்சிகாவோட மூக்கு!"

"சொல்லு சித்து...? நிறம், யாரோட நிறம்...?"

"உங்க பேவரெட் டாப்ஸியோட நிறம்!"

"அப்புறம்...?"

"தமன்னாவோட சதைப்பற்றுள்ள கன்னம்...! ஐஸ்வர்யாராயோட உடம்பு...! சிநேகாவோட முல்லை பல்வரிசைன்னு அற்புதமான செம அழகிம்மா...!"

கோதைநாயகி பிரமித்துப்போய் உட்கார்ந்துவிட்டாள், சித்தேஷ்வரின் வர்ணனைகளைக் கேட்டு!

"இவங்க அத்தனை பேரையும் ஒன்றா கொட்டி... பிசைந்து... பிரம்மன் பார்த்து பார்த்து படைத்த படைப்பும்மா அந்த நந்தனா! அவ தலைமுடி எவ்வளவு நீளமோ தெரியலே... நீண்ட முடிய பின்னி இழுத்து இறுக்கி கொண்டையா சுற்றியிருந்தா பாருங்க... அப்படியே காதோரம் சின்ன ரோஜா எவ்வளவு வசீகரம் தெரியுமா...? கொண்டையோட கணத்தை கழுத்து தாங்குமான்னு கவலைப்பட்டேன்னா பாருங்க! விரிச்சி விட்டால் மயில்தோகைக் கணக்காய் தரையைப் பெருக்கும்ன்னு நினைக்கிறேன்!"

சித்தேஷ்வர் சிலிர்ப்போடு சொல்லி முடித்தான்!

"இவ்வளவு நாள் கழித்து... உனக்கான இணையை, தேவதையை கடவுள் இப்போதாவது காட்டினாரே...! ஏழுமலையானே... திருப்பதி வெங்கடாஜலபதி... என் பையனுக்கும், அந்தப் பொண்ணுக்கும் விரைவிலேயே திருமணம் நடக்கணும்ப்பா!"

"அம்மா... அது ரொம்ப கஷ்டம்ன்னு தோணுது!"

சித்தேஷ்வர் சோகமாய் சொல்ல...

"என்ன சொல்றே, சித்து...?" - அம்மா அதிர்ந்தாள்.

"கெட்ட செய்தி சொல்றேன்னு சொன்னேனே இன்னும் சொல்லலையே...!"

"சித்து... அந்தப் பொண்ணுக்கு ஏற்கனவே கல்யாணமாயிடிச்சா...?"

"ம்கூம்...!"

"இல்ல வேறொரு மாப்பிள்ளையோட நிச்சயமாயிடிச்சா...?"

"அதெல்லாம் இல்லேம்மா...! அவளை நான் நல்ல சூழ்நிலையில சந்திக்கலே!"

"ஏன்...?"

"நம்ம வீட்டுல வாலில்லாத குரங்கு ஒண்ணிருக்கே... அதுதான் எல்லாத்தையும் கெடுத்து குட்டிச்சுவராக்கிடிச்சி...!"

"நம்ம ஆரண்யாவையாச் சொல்றே...?"

"ஆமாம்மா...! அது விட்ட கண்ணீரை உண்மைன்னு நம்பி... நானுமே நந்தனாவை சந்தேகப்பட்டுட்டேன்! அது அவளுக்கு அவமானமாயிடிச்சி!"

"நீ சொல்ற எதுவுமே விளங்கலே, சித்து! விபரமா சொல்லேன்!"

சொன்னான்.

கல்லூரியில் நடந்த அனைத்தையுமே சொன்னான்.

"என் மனதுக்கு பிடிச்சவளை சந்திச்ச நேரமே... அவளுடைய வெறுப்புக்கு ஆளாயிட்டேம்மா! ஒரு பெண் இந்த அளவு ரோசம் கொண்டு கிளம்பறான்னா அவகிட்ட பொய்யிருக்காதுன்னு நினைச்சி... அவளுடைய தோழிகளை தனியே மிரட்டி கேட்க... அவள் செய்த தப்பை ஒப்பிச்சுட்டாங்க!,

'அடுத்ததா ஒவ்வொரு பேராசிரியரும் வரிசைகட்டி நின்று அவள்மேல புகார் வாசிக்கிறாங்க!'

'வகுப்பறையில் உட்காருவதில்லை...!'

'உட்கார்ந்தாலும் எங்களைப் பாடம் நடத்த விடறதில்லை...!'

'நினைச்சால் ஒரு கும்பலோட வெளிய போறது... உள்ளவரது! அதை ஏன்னு கேட்டால் எங்களுக்கு எதிரா போர்கொடி தூக்குகிறாள்!'

'அவளை எதிர்க்கிற மாணவன், மாணவியோட பேர்களை சேர்த்து சுவற்றில் எழுதி... அவதூறான வாசகங்களை எழுதி... அசிங்கமாக படம் போட்டு... நம்ம கல்லூரியின் ஒழுக்கக் கேட்டை சீர்குலைக்கிறாள்!' என்றெல்லாம் அவள்மேல் பெரும்புகார்கள் சொல்ல... ரொம்ப அவமானமாய் உணர்ந்தேன்ம்மா...!'

'நம்ம கல்லூரியின் புனிதத்தைக் கெடுக்கவே இந்த லூசு அங்கேப் போகுது போல...! நம்ம வீட்டு பெண்ணுன்னு எல்லோரும் பொறுத்துட்டு... என் காதுக்கு கொண்டு வர துணியலை! அடுத்ததா தாயில்லாப் பெண்ணாச்சே நாம் தண்டிச்சிடுவோம்ன்னு பயந்தும் இவ்வளவு நாளும் அவள் கொட்டத்தையும்... அட்டூழியத்தையும் நம்ம காதுக்கு கொண்டுவர்லே...!'



'ஒரு பெண் துணியவும்... ஆண்கள் அத்தனைப் பேருக்கும் அவமானமாகி என்முன்னாடி வந்து கொட்டிட்டாங்க!'

'அவ காலை ஒடிச்சி வீட்டுலேயே போட்டு வைக்கணும்...! இல்லே படிக்கணும்ன்னு விரும்பினால் மூட்டை முடிச்சைக் கட்டிட்டு திருப்பூர்ல இருக்கிற அவள் அப்பாகிட்ட கொண்டு போய்விடுங்க! அங்கே ஏதாவது நாறிப்போன கல்லூரியிலே சேர்ந்து படிக்கட்டும்!"

நீளமாய் பேசிமுடித்தான் சித்தேஷ்வர்.

"தாயில்லாப் பொண்ணு...! கூப்பிட்டு கேட்கறேன்!"

"அவள் உண்மையை ஒத்துக்கமாட்டாள்!"

"உன் சொல்லை நம்பறேன், சித்து! அதுக்காக எடுத்தேன் கவிழ்த்தேன்னு... எப்படி அவளை என் தம்பிகிட்ட அனுப்பறது...? அவன் என்ன நினைப்பான்...? கஷ்டப்பட மாட்டானா...? நம்ம வீட்டு பெண் புவனா விட்டுட்டுப்போன பாரம், இந்த ஆரண்யா! அதை நாம தான் சுமந்து ஆகணும்!"

"என்னம்மா இப்படி பேசறீங்க...?" தாயை முறைத்தவனுக்கு...

"கெட்டவங்களைக் கண்டிக்கலாம்...! ஆனால் ஒரேயடியா தண்டிக்கக் கூடாதுப்பா...! அவ தப்பை குத்தி காட்டி, உணர்த்தி, அன்பால் திருத்தலாம்! ஆரண்யா நல்ல பொண்ணுதான்! நாம கொடுத்த செல்லம்... இந்த வசதி, பணம்... எல்லாம் சேர்ந்து இப்படி தான்தோன்றியா வளர்ந்துட்டா!... அவளை திருத்தறது என் பொறுப்பு! நந்தனாகிட்ட பேசு...! சமாதானப்படுத்தி வேலைக்கு வரவை? அவளோட பழகு! அப்புறமா, அவளுக்கு உன்மேல ஈர்ப்பு வந்ததும்... உன் இதயம் திறந்து காட்டு! கடைசியா நான் பெண்கேட்டு கட்டி வைக்கிறேன்!"

அந்த நேரம் அங்கே வந்த ஆரண்யாவைக் கண்ட சித்தேஷ்வர்...

"ஏய் இங்கே வா...! இந்த கழுதை பொய் சொல்லி... இது பேச்சைக் கேட்டு... நானே கைப்பிடி மண்ணையள்ளி என் மண்டையில் போட்டுட்டேன்!"

ஆரண்யா அருகில் வந்து நின்றதும் ஓங்கி பட்டென்று அறைந்தான்!

"திமிர் கொண்ட நாயே... கல்லூரிக்கு போனமா... ஒழுக்கமா படிச்சமா... வந்தோமான்னு இல்லாம ராகிங் பண்றியா, ராகிங்...? நீ செய்யற ஒவ்வொரு செயலாலும் என் பேருக்குதான் இழுக்கு...! களங்கம்...! இதுபோல இருந்தே தொலைச்சிடுவேன் தொலைச்சி! பாவ புண்ணியம் பார்க்காமல் தரதரன்னு இழுத்துட்டுபோய் மாமாகிட்ட விட்டுட்டு வந்துடுவேன்!"

சித்தேஷ்வர் கோபம் கொண்ட அய்யனாராய் மாறி கத்தினான்.

"இவளை என்கிட்ட விடு, சித்து! என் மருமகள் நந்தனாவை எப்படி சமாதானப்படுத்தப் போறே...?"

"பிசினஸ் விஷயமாய் சென்னை கிளம்பறேன்! அது நாலு நாள்ள முடிஞ்சிடும்! நந்தனாவும் என்மேல் கொண்ட கோபம் தணிந்து... கொஞ்சம் அமைதியாய் இருக்கலாம்! வந்ததும் போய் சமாதானப் படுத்திடறேன்!"

"சீக்கிரமே நந்தனாவை இந்த வீட்டு மருமகளா கொண்டு வந்து நிறுத்து, சித்தேஷ்!"

ஆரண்யா இவர்களின் உரையாடலை... கன்னத்தைப் பிடித்துக் கொண்டு... குரோதத்துடன்... கொதிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்!

"நீங்க கொஞ்சம் பொறுத்துக்கணும்மா! ஆனால், ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்வேன்.... இந்த வீட்டு மருமகள்ன்னா என் மனைவின்னா அது நந்தனா மட்டும் தான்! அதுல எந்த மாற்றமும் இருக்காது!"

அவன் நம்பினான்...

அவனின் நம்பிக்கையில் பெரும் தீயை வைக்கப் போகிறாள் நந்தனா என்று தெரியாமல்...!

## 6

மறுநாள்...

ஈஸ்வரி வந்தாள்.

நந்தனா குளித்து உடுத்தாமல் இருந்ததைக் கண்டு...

"என்னம்மா... இன்னும் குளிக்கலையா...? நேரமாகுதே...! கல்லூரிக்கு புறப்படலையாம்மா...?"

"ம்கூம்...!"

"ஏன்...?"

"நேற்றே நீங்க புறப்படும்போது சொல்லணும்ன்னு நினைச்சேன்! சொல்லலே! எனக்கு வேலை போயாச்சி, ஆயா!"

"என்னம்மா சொல்றே...? நேற்றுதானே புது இடத்துக்கு வேலைக்கு போனே...? நல்ல கல்லூரி... நல்ல சம்பளம்ன்னு பூரிப்பா போனியே, நந்தனா...?"



நந்தனா அங்கே நடந்தது அனைத்தையும் சொல்லி முடிக்க...

"அவசரப்பட்டுட்டையோன்னு தோணுதும்மா! கொஞ்சம் நிதானிச்சி இருக்கலாம்ன்னு தோணுது, தாயீ! சரி... சரி... அழாதே...! இதுபோனா என்ன... வேற வேலைத் தேடிக்கலாம்! நடக்கணும்ங்கிறதுதான் நடக்கும்! நாம நினைக்கறதெல்லாம் நடக்காது, தாயீ...!"

ஈஸ்வரியின் பேச்சு... ரணமான மனப்புண்ணிற்கு மயிலிறகால் மருந்து தடவியது போல இதமாய் இருந்தது!

"பழைய கல்லூரிக்கே போய் மீண்டும் என் வேலையைக் கேட்கலாம்ன்னு நினைக்கிறேன், ஆயா!"

"கிளம்பும்மா! அந்த பழனிமுருகன் ஒருவழியை மூடினால் இன்னொரு வழியை திறந்து உனக்கு நல்லது செய்வார்!"

நந்தனா ஈஸ்வரியிடம் அம்மாவை ஒப்படைத்துவிட்டு கிளம்பிவிட்டாள்!

சோகமே உருவாய் வந்து நின்ற நந்தனாவைக் கண்ட கல்லூரி முதல்வர்...

"வாம்மா...! உட்கார்...! நல்லாயிருக்கியா...? புதுக்கல்லூரி எப்படி இருக்கு...? பிடிச்சிருக்கா...? ஜாயின் பண்ணி போயிட்டுதானே இருக்கே...?"

கேள்விகளாய் அடுக்க... நந்தனா திணறிவிட்டு பின் சொன்னாள்.

"எனக்கு இங்கே வேலை வேண்டும், சார்!"

"அங்கே போனாயேம்மா...?"

"சில கசப்பான சம்பவங்களால் என் மனசு பாதிசிடிச்சி! அதான் மீண்டும் இங்கே வந்திருக்கேன்!"

"உன் இடத்துக்கு வேற ஆளை செலக்ட் செய்தாகிவிட்டது, நந்தனா! வேற இடம் போய் கேளும்மா! நான் ரவுண்ட்ஸ் போகணும்! நீ கிளம்பும்மா!"

கல்லூரி முதல்வர் முகத்தில் அடிக்காத குறையாய் வெளியேற்ற... கண்களில் பூத்த கண்ணீரோடு வெளியே வந்தாள்!

அவளின் சகதோழி பார்த்துவிட்டு ஓடிவந்தாள்!

"ஏய் நந்தனா... என்ன விஷயம்...? கல்லூரிக்கு போகலே!"

"இல்லே அமுதா! அங்கே வேலையை விட்டுட்டேன்!"

"நல்ல கல்லூரியாச்சே! ஏன்டி விட்டே....? என்னடி காரணம்...?"

"அங்கே பிடிக்கலே அமுதா" - என்ற நந்தனா ஆரண்யா விஷயத்தையும்... சித்தேஷ்வர் தவறாய் நீதி வழங்கியதையும் சொல்லிமுடிக்க...

"இதெல்லாம் ஒரு பிரச்சனையா...?"

"நியாயம், நீதியில்லாத இடத்துல பிடிக்கலே, அமுதா!"

"ஏதோ சின்ன பெண் குறும்பு செய்ய... நீயும் வெளியேற்ற... தங்கள் கல்லூரியில் ராணிபோல இருந்தவளுக்கு அவமானமாகி... மாமனை வரவழைத்து... மாமனிடம் உண்மையைச் சொன்னால் திட்டுவார்ன்னு பயந்து உன்னைப் பழிவாங்க... பொய் சொல்லியிருக்கா...! வயசு கோளாறு, இது!"

"அந்தப் பொண்ணுக்கு வயசு கோளாறு! அந்த கல்லூரிக்கு சொந்தக்காரனுக்கு எப்படியும் வயது முப்பது இருக்கும்! உண்மை என்னன்னு ஆராய்ந்து தெரிஞ்சிக்காமல் குற்றம் சாட்டிட்டான்! தாங்க முடியலே!"

இறக்கையை இழந்த வண்ணத்துப்பூச்சியின் வலி, அவளின் உள்ளத்தில்!

"எவ்வளவு சோகங்களையும், சுமைகளையும் தாங்கிப் பழகினவள், நீ!"

"சோகம், சுமைகளைத் தாங்கிக்கலாம்! ஆனால் குற்றத்தை, பழியை தாங்கி பழகினதில்லே, அமுதா! என் சுயமரியாதை... சுய கௌரவத்திற்கு ஒரு கேடு எனும் போது எப்படி தாங்க முடியும்...?"

"வீட்டுவாடகை, அம்மாவோட மருத்துவ செலவு, சாப்பாட்டு செலவு, ஆயாவோட சம்பளம்ன்னு உன் வருமானம் போதலேன்னு தானே... அங்கே முயற்சி செய்தே! உன் மேல் கருணை கொண்ட கடவுள் நல்வழி காட்டியும்... இப்படி மதிகெட்ட தனமாய் வந்து நிற்கறியே, நந்தனா! புதுவேலை கிடைக்கும்வரை என்ன செய்வே...? சேமிப்பு ஏதாவது இருக்கா...?"

"உனக்கு தெரியாமல் என்கிட்ட ஏது சேமிப்பு...?"

"இதுல உன் தெரு பையன் ஒருத்தனை எம்.எஸ்.ஸி., படிக்க வைக்கறதா வாக்கு கொடுத்திருக்கே இல்லை...?"

"ஆமா, அமுதா! அங்கே வேலைப் பார்க்கறவங்க வீட்டு பிள்ளைகளுக்கு பீஸ் இல்லாமல் இலவச படிப்பு கிடைக்கிறது! அந்தச் சலுகையை மனசுல வைச்சுகிட்டுதான் கிஷோருக்கு உதவறேன்னு சொன்னேன்!"

"ரிசைனிங் லெட்டர் இன்னும் கொடுக்கவில்லையில்ல...?"

"இனிமேல்தான் போஸ்ட் ஆபீஸ்போய் அனுப்பிட்டு போகணும்!

"பேசாமல் உன் வீம்பை மூட்டைகட்டி வச்சிட்டு அங்கே வேலைக்கு போடி!"



"மாட்டேன்...!"

"பிடிவாதம் வேண்டாம்! அம்மாவுக்கு நல்ல தரமான ஹாஸ்பிடல் சிகிச்சைத் தரலாம்...!"

"..................."

"கிஷோர்க்கும் நீ பீஸ்கட்டத் தேவையில்லை! அவனவன் அங்கே வேலை கிடைக்க தவமிருக்க... கிடைச்ச வேலையை சின்ன பிரச்சனைக்காக... கிறுக்கி மாதிரி விட்டுட்டு நிற்காதே...!"

"..................."

"தன் வீட்டுப் பெண்ணுன்னு சித்தேஷ்வர் ஆரண்யா பேச்சை நம்பிட்டார்!"

"அது தப்புதானே...?"

"தப்புதான்...!"

"எதிராளியை கேவலமா எடைபோடற குணம் கொண்டவனோட கல்லூரியில் மீண்டும் போய் வேலைப் பார்க்க மாட்டேன்! அவன் என்னைப் பற்றி என்ன நினைப்பான்...?"

"நீ அங்கே வேலைக்கு போகப்போறது தெரிஞ்சி... அந்த சித்தேஷ்வர் பற்றி விசாரிச்சேன், நந்தனா! தங்கமானவர்... நியாயவாதி... நேர்மையானவர்... நல்ல சமூக சேவகர்ன்னு சொன்னாங்க! அவர்கிட்ட சொல்லி அவங்க ட்ரஸ்ட் மூலமாகூட அம்மாவுக்கு வைத்தியத்தைத் தொடரலாம், நீ...!"

"போயும்... போயும்... அந்தாள் மூலமா என் அம்மாவுக்கு வைத்தியமா...? போடி... என் அம்மாவைப் பார்த்துக்க எனக்கு தெரியும்! எண்ணி ரெண்டே நாள்ல... நல்ல வேலையில சேர்ந்து காட்டறேன்! நான் வரேன்...!"

என்று வீறுநடைப்போட்டாள், நந்தனா! அவளின் எண்ணம் நிறைவேறாது என அறியாமல்...!

## 7

நந்தனா அலைந்து திரிந்தாள்!

ஒரு கல்லூரிகூட அவளுக்கு பட்டுக்கம்பளம் விரித்து வரவேற்கவில்லை...! வேலை காலியில்லை என்று திருப்பி அனுப்பினர்!

ஆனாலும், நந்தனா மனம் தளரவில்லை...!

கடைசியாய் மெட்ரிகுலேஷன், சி.பி.எஸ்.சி ஸ்கூலுக்கு போய் கேட்ட போது... அவள் தகுதி, படிப்புக்கு சிவப்பு கம்பளம் விரித்து

வரவேற்றாலும்... சந்தைக்கு வந்த ஆட்டையும், மாட்டையும் பல்லைப் பிடித்துப்பார்த்து... அது இள ஆடாய் இருந்தாலும்... கன்றுகுட்டியாய் இருந்தாலும்... முற்றிபோனது... பல்விழுந்து போனது... என்று பொய்யுரைத்து அடிமாட்டு விலைக்கு கேட்கும் தரகர்கள்போல... அங்கே அவளுக்கு குறைந்த சம்பளமே கொடுக்க முன்வந்தனர்... கல்வி என்றபெயரில் கொள்ளையடிக்கும் பெரும் கொள்ளைகார கூட்டங்கள்!

அவர்கள் கொடுக்க முன்வரும் சம்பளத்தில் வாடகை, ஆயா சம்பளத்திற்கே போதாது! பின் அவர்கள் எப்படி உண்பது...? எப்படி உடுத்துவது...? அம்மாவிற்கு ஹாஸ்பிடல் செலவு பார்ப்பது எப்படி...? பஸ், போக்குவரத்து என்று இதர செலவுகள் உள்ளதே!

நந்தனாவின் மனம் தளரவில்லை என்றாலும்... அவளின் உடல் தளர்ந்து விட்டது!

கவலையில் இந்த நான்கைந்து நாட்களும் உண்ணவே இல்லை!

நகரைவிட்டுத் தள்ளி புறநகர் பகுதியில் உள்ள கல்லூரிக்குதான் சென்று திரும்பிக் கொண்டிருந்தாள், நந்தனா!

ஆள் அரவமற்ற பொட்டல்காடு...!

நண்பகல் நேரம்...! உச்சி வெய்யில் மண்டையைப் பிளக்க... அங்கிருந்த பஸ் நிறுத்தத்திற்கு நடந்தாள்!

பயங்கர வெய்யிலின் தாக்கமும்... பசியின் கொடுமையும் சேர அவளுக்கு கண்களை இருட்டிக் கொண்டு வந்தது!

நடந்துக் கொண்டிருந்த நந்தனா... தலை கிறுகிறுத்து அப்படியே அல்லிக் கொடியாய் மடங்கி தரையில் சரிந்தாள்!

அந்தப் பகுதியில் 'சித்தேஷ்வர் பில்டர்ஸ்' ஒரு பெரிய பில்டிங்கைக் கட்டிக் கொண்டிருந்தது! அதைப் பார்வையிட்டு திரும்பிக் கொண்டிருந்தான், சித்தேஷ்வர்!

சித்தேஷ்வர் அவ்விடம் வரவும்... நந்தனா மயங்கி விழுந்து கிடக்கவும்... ஓடிப்போய் பார்க்க... அது நந்தனாவாய் இருக்க பதறிப்போனான்.

நந்தனாவை பார்க்கத்தான் போய் கொண்டிருந்தான்! ஆனால் நந்தனாவே அவ்வழி வந்து... அந்தக் கோலத்தில் காட்சி தருவாள் என்று அவன் கற்பனையிலும் எண்ணவில்லை!

பூங்கொடியாய் துவண்டு கிடந்தவளைச் சற்றும் தாமதிக்காமல் அள்ளி அணைத்துக் கொண்டு காருக்கு ஓடினான்!

"நந்தனா... நந்தனா..." என தோளில் சாய்த்து...

கன்னம் தட்ட... அவள் விழித்தபாடில்லை!



முகத்தில் தண்ணீர் தெளித்தான்!

"தண்ணீர்... தண்ணீர்..." என்று இதழ்கள் முணகியதே தவிர கண்விழித்த பாடில்லை!

நீரை புகட்டி... அவளை மடியில் சாய்த்து... ஒரு கையால் அவளை இறுக பற்றிக் கொண்டு... மறு கையால் காரை ஓட்டிக் கொண்டு சென்றான்!

வேற்று ஆடவனின் மடியில் தலைவைத்து படுத்திருக்கிறோமே என்ற அறிகுறியே இல்லாத நந்தனா அதிக மயக்கத்தில் இருந்தாள்!

'கிரிஜா முருகன் மருத்துவமனை'யில் அவளைச் சேர்க்க... டாக்டர் கிரிஜா முருகன் அவளுக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்தார்.

ஒருமணி நேரம் கழித்து கண்விழித்த நந்தனாவின் எதிரே... டாக்டர் கிரிஜா முருகன் தென்பட... லேசாய் இதழ் விரித்து புன்னகைத்தாள்!

ஏனென்றால் டாக்டர் கிரிஜா முருகன் நந்தனாவிற்கு நல்ல பரிட்சயம்!

அடிக்கடி ரத்ததானம் செய்ய நந்தனாவும், அவளது நண்பர்கள் குழுவும் போனதுண்டு!

"நடுரோட்டில் மயங்கி கிடந்த உன்னை... அவன் சரியான நேரத்தில் ஆஸ்பத்தரியில் சேர்க்க... உனக்கு ஊசி போட்டிருக்கேன்...! உடம்புல நீர்சத்து இல்லாததால் ட்ரிப்ஸ் ஏத்திட்டு இருக்கேன்...! எழுந்துக்க முயற்சி செய்யாதே...!"

டாக்டர் அறிவுறுத்த... அப்போதுதான் இடது கையைப் பார்த்தாள், ட்ரிப்ஸ் ஏறிக் கொண்டிருந்தது!

"சரியா சாப்பிடறதில்லையாம்மா...? இப்படி மெலிந்து வெளிறி தெரிகிறாயே, நந்தனா...?"

"நான் இங்கே எப்படி வந்தேன், டாக்டர்? என்னை இங்கே யார் கொண்டுவந்து சேர்த்தது...?"

"சித்தேஷ்வர்!" என்று டாக்டர் மொட்டையாய் சொல்ல...

தன் இந்த நிலைக்கு காரணமான சித்தேஷ்வராக இருக்கமாட்டான்! ஊரில் சித்தேஷ்வர் என்ற பெயரில் ஆயிரம் பேர் இருப்பார்கள்! அதில் ஒரு சித்தேஷ்வர் தன்னை காப்பாற்றியிருக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த போது...

"சித்தேஷ்வர் உனக்கு சொந்தமாம்மா...?"

நந்தனா புரியாமல் திருதிருவென விழிக்க...

"கண்ணில் நீர் வந்துவிட்டதம்மா...! ரொம்ப தவிச்சிம்... துடிச்சிம் போயிட்டான்...! உனக்கு விழிப்பு வந்துவிட்டது என்று தெரிந்தால் மகிழ்வான்!"

'யாரோ ஒரு சித்தேஷ்வருக்கு தவிப்பும், துடிப்பும், கண்ணீரும் வந்து என்ன பயன்...?'

'என் நிலைக்கு காரணமான கல்நெஞ்சன் சித்தேஷ்வருக்கல்லவா என் நிலைக்கண்டு கண்ணீர் வரவேண்டும்...? துடிப்பும், தவிப்பும் வரவேண்டும்'

நந்தனா மனதிற்குள் எண்ணியவாரே டாக்டரைப் பார்த்து...

"எனக்கு இங்கே ஏதாவது வேலை தரீங்களா, மேடம்...?"

"எம்.எஸ்ஸி., எம்.பில்., படித்தவளுக்கு இங்கே என்ன வேலைம்மா கொடுப்பேன்...? உன் படிப்புக்கு தக்க வேலை இங்கேது...? நம்ம சித்தேஷ்வர்கிட்ட கேட்டால் அவனுடைய 'சித்தேஷ்வர் குழுமத்தில்' வேலை தந்துட்டுப் போறான்! நான் வேண்டுமானால் சித்துகிட்டே ரெக்கமண்ட் பண்ணட்டுமா...?"

டாக்டர் சொல்ல சொல்ல... அவளுக்கு புரிந்தது, அவளைக் காப்பாற்றியது... அந்த இதயமே இல்லாத சித்தேஷ்வர் என்று!

எனக்கு மன அழுத்தம்... மன இறுக்கம்... மனத்தளர்ச்சி... பெரும் துன்பம், துயரத்தைக் கொடுத்த சித்தேஷ்வரால்தான் நான் காப்பாற்றப் பட்டிருக்கிறேனா...?

ச்சே... அவன் கையால் பிழைத்ததற்கு பதிலாய்... அந்த நட்டநடு பொட்டலில்... எரிமலையின் கொதிப்பில் இருந்த தார்சாலையில் அப்படியே பொட்டென்று உயிரை விட்டிருக்கலாமே...!

அவன் தொட்டு, தூக்கி... கட்டி, அணைத்து...ச்சே... எங்கெங்கே அவன் முரட்டு கைகள் பட்டதோ...!

அவன் வந்ததும் 'உன்னை யாருய்யா என்னைக் காப்பாற்ற சொன்னது..?' என்று பயங்கரமாய் சண்டைக்கு போகவேண்டும் என்றெல்லாம் உள்மனதில் ஒரு பெரிய போராட்டம் நடந்து கொண்டிருந்த போது...

"நந்தனா... கண்விழிச்சிட்டியாம்மா...? நட்ட நடு தார்சாலையின் கொதிப்பில்... நீ கிடந்த கோலம் கண்டு பதறிட்டேன், நந்தனா! கிரிஜா ஆன்ட்டிதான் என்னைத் தேற்றி... உனக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்தாங்கம்மா!"

என்று தவிப்போடும், கலங்கத்தோடும் சொன்னவனை அவள் நினைத்ததுபோல திட்ட முடியவில்லை!

அவனின் அன்புகலந்த விழிப்பார்வையால்... குபுகுபுவென பொங்கி அவளுள் விரவி வேடிக்கைப் பார்த்த வெப்பம்... தண்ணீரைக் கண்ட நெருப்பாய் தணிந்துப் போனது!



"ஏய் சித்து... நந்தனா உனக்கு சொந்தமா...? இல்ல தெரிந்த பெண்ணா...?"

"சொந்தம், ஆன்ட்டி!"

டாக்டர் கிரிஜா முருகனின் கேள்விக்கு... சித்தேஷ்வர் தாமதிக்காமல் சட்டென்று சொல்ல... அவளுள் ஒரு சிலிர்ப்பு ஏற்படாமல் இல்லை!

ஆனாலும், அந்தச் சிலிர்ப்புக்கு தடைப்போட்டாள், அந்த பேரரக்கி!

"சொந்தப் பெண் வேலையில்லாமல் திண்டாடிட்டு இருக்கிறாளே... உன் கல்வி குழுமத்தில் ஒரு வேலை போட்டு கொடுக்கக் கூடாதா, சித்தேஷ்வர்...?"

"அதுக்கென்ன ஆன்ட்டி... வேலைதானே... நந்தனாவுக்கு இல்லாத வேலையா...? தந்துவிட்டால் போகுது!"

நந்தனாவைப் பார்த்து சின்ன சிரிப்போடு சொல்ல... ஆனால், அவனின் அந்த வார்த்தைகள்... ஆகாயத்தில் இருக்கும் சூரியனின் 6000° வெப்பத்தை விஞ்சி நின்றது, நந்தனாவுக்கு!

'எப்படி இவனால் இப்படி சிரிக்க முடிகிறது...? பேச முடிகிறது...?'

'என் இத்தனை துன்பங்களுக்கும் காரணம், இந்த ராட்சசன்தான்! அன்று மட்டும் இவன் நியாயம் தவறி நடக்காமல் இருந்திருந்தால்... என் வாழ்க்கை எவ்வளவு சந்தோஷமாய் இருந்திருக்கும்!'

'இப்படி வேலைதேடி நாயாய் பேயாய் அலையத் தேவையில்லையே! என் எதிர்காலம் குறித்து கவலைப்படத் தேவையில்லையே!'

'எல்லாம் இவனால் தான்!'

'என் இந்த நிலைக்கு காரணம், இவன்தான்!'

'இப்படி ஒரு நிலையை ஏற்படுத்தி விட்டு... இப்போது நீ மயங்கினாய்... நான் காப்பாற்றினேன்... என்று நெஞ்சை நிமிர்த்தி... பல்லிளித்து... அன்பொழுக பேசி என்ன புண்ணியம்...?'

'நெஞ்சில் நெருப்பை பற்ற வைத்துவிட்டு... இப்போது வந்து வெஞ்சாமரம் வீசினால் மறந்து போகுமா...? மறைந்துதான் போகுமா...? தீ இன்னும் 'திகுதிகு' வென்று தானே சுடர்விட்டு எரியும், என் இதயத்தில்!'

நல்ல பசி! அவள் முகத்தில் அதைப் படித்த சித்தேஷ்வர் உடனே அருகில் உள்ள ஹோட்டலில் இருந்து சாப்பாடு தருவித்துக் கொடுக்க... டாக்டர் முன்னிலையில் உண்ண வேண்டியதாகிப் போனது!

டாக்டர் அறைக்கு சென்று திரும்பிய சித்தேஷ்வரின் கைகளில் மருந்தும், மாத்திரைகளும் அடங்கிய பை இருந்தது!

"சித்து...ஷி ஈஸ் ஆல்ரைட்! நீ இவளை வீட்டுக்கு கூட்டிட்டுப் போகலாம்! நந்தனா... நீ வேலைக்கு போகணும்ன்னு அவசியமாம்மா...? ஏன் கேட்கறேன்னா... உன் முகத்தில், உடலில், தோரணையில், நீ பேசும் பேச்சில் பணக்கார களைத் தெரியும்! அடுத்தா இப்போ எங்க சித்து வேற உன்னை உறவுன்னு சொன்னதால் நீ பணக்கார வீட்டு பெண்ணோ என்று கேட்கிறேன்! வேலைக்கு போகணும்ன்னு அவசியமா...?"

'காதல் என்ற போர்வையில் அம்மாவிற்கு ஆசைக்காட்டிய ஜெய் ஓரளவு பணக்காரனாய் இருக்கலாம்! பணக்காரர்களுக்குதானே இதுபோல மோசம் செய்வது அல்வா சாப்பிடுவது போல! அந்த ஜெய்யின் வம்ச விருத்தி... மரபு... என்றெல்லாம் டாக்டருக்கு விளக்க முடியுமா என்ன?'

"சித்து... நந்தனாவுக்கு வேலை போட்டு கொடுப்பா!"

"சரிங்க, ஆன்ட்டி!"

"ஆபீஸில் இல்லை!"

"பின்னே எங்கே...?"

"உன் வீட்டில்... உன் மனைவி போஸ்ட் காலியாத்தானே இருக்கு... அங்கேதான்!"'

டாக்டர் சிறிய புன்னகையுடன் சொல்ல... சித்தேஷ்வர் முகம் ஒளியை உமிழ... நந்தனாவின் முகமோ இருட்டை உள்வாங்கிக் கொண்டது!

"நந்தனா... சித்து பயல் உன் வலையில்... உன் மீன்விழியின் தூண்டிலில் சிக்கிட்டான்னு தோன்றுதும்மா...! சித்து நல்ல பையன்ம்மா! எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லாத அற்புதன்! நல்ல திறமைசாலி!" என்று நந்தனாவைப் பார்த்து சொன்ன கிரிஜா முருகன்...

"சித்து பயலே... இரண்டு பேருக்கும் ஜோடிப் பொருத்தம் அருமை...! அம்சம்.. அசத்துது...! விரைவிலேயே எதிர்ப்பார்க்கிறேன்...!" என்று பீடிகைப் போட... சித்தேஷ்வர் முழிக்க...

"உன் திருமணப் பத்திரிகையை!" என்று அவன் தோளில் பட்டென்று விளையாட்டுக்கு தட்டினார்.

நந்தனாவின் முகம் மாலை நேர தாமரையாய், அல்லியாய் கூம்பிப்போனது!

இருவரும் சொல்லிக் கொண்டு கிளம்பி வாசலுக்கு வர...

"உங்களுடைய பிசியான நேரத்தில்... என்னை ஆஸ்பத்தரியில் சேர்த்து காப்பாற்றியதற்கு ரொம்பவே நன்றி சார்! இந்தக் கடனை நான் வேலைக்குப் போனாத்தான் அடைக்க முடியும்! ஆனால் இதை அடைக்காமல் விடமாட்டேன்! நான் வருகிறேன்!" என்று நடக்க...



"நந்தனா வண்டியில ஏறு!" கார் கதவைத் திறந்து சொல்ல...

"முடியாது, சார்!"

"ஏய் நந்தனா... உன் மனதில் என்ன நினைச்சிட்டு இருக்கே...? உடம்பு சரியில்லாதவள்! மீண்டும் மயங்கி எங்காவது விழுந்தால்... நீ மறுக்கக் கூடாது! மறுத்தால் உன் கைப்பிடித்து இழுத்து போய் காரில் போட்டு பூட்டி... உன்னை வீடுபோய் சேர்க்கும்படி ஆகும்! நான் செய்யமாட்டேன் என்று நினைக்க வேண்டாம்! உன்னைவிட நான் திமிர்பிடித்தவன்...! வீம்புக்காரன்!"

சித்தேஷ்வரின் பேச்சு... அவளுக்கு பெரும் அதிர்வை தந்தது!

## 8

நல்ல ஒரு அன்புள்ள, அருமையான தாய்... நெய்யும், பருப்பும் பிசைந்து... பாலும், தயிரும் கலந்து... காயையும், கீரையையும் மசித்து... புரதம், வைட்டமின்கள், கொழுப்பு சத்துக்கள், தாது உப்புக்கள் அனைத்தும் கலந்த சரிவிகித உணவினை... பார்த்து பார்த்து செய்து... ஊட்டி வளர்த்த கொழுகொழு குழந்தையாய்... இளம் சூரியன் கிழக்கு வானில் துடிப்புடன் நடைபயின்ற, காலைப் பொழுது!

இளம் ஆரஞ்சு வண்ண பருத்தி சேலையணிந்து... பாந்தமாய் கிளம்பிவிட்டாள், நந்தனா... வேலை வேட்டைக்காக...!

வேண்டா வெறுப்பாய் இரண்டு இட்லிகளை வயிற்றில் திணித்தாள், நேற்றைப்போல எந்த அசம்பாவிதமும் நடக்க வேண்டாமென்று!

நேற்று காரில் வீடு திரும்பிய போது... நந்தனாவின் பயங்கர கோபம் கண்டு... சித்தேஷ்வரும் எதுவுமே பேசவில்லை!

இருவரிடையே பெருத்த மௌனம்தான் சுவராய் அமைந்தது!

அடிக்கடி ஓரவிழிப் பார்வையால்... அவன், அவள் மேனியை வருட... எவ்வளவு நேரம்தான் வெளியே வெறித்துக் கொண்டு வருவாள், நந்தனா!

நந்தனாவும் லேசாய் திரும்பி கடைகண்ணால் பார்க்க... அந்த நேரத்தில் அவன் பார்வையோடு இவள் பார்வையும் பின்னி பிணைய... அந்தப் பார்வையின் கலப்பில், அணைப்பில் சித்தேஷ்வரின் உடலில் மின்சாரம் பாய்ந்தது!

அவனின் விழிவீச்சு தாங்காமல்... நந்தனாவும், அவ்வப்போது பார்வையை அவனிடமிருந்து சட்டென்று பிடுங்கிக் கொள்வாள்!

வீடு வந்ததும்...

"வீட்டுக்கு வாங்கன்னு அழைக்க மாட்டாயா, நந்தனா...?" என்று சித்தேஷ்வர் கேட்க...

"எதுக்கு அழைக்கனும்...? உதவராப்போல உதவி... உள்ளே புகுந்துடலாம்ங்கிற நினைப்பா...? ஆனாலும், எனக்கு உதவர கடமை உங்களுக்கு உண்டு! என் இந்த நிலைமைக்கு காரணமே, நீங்கதான்!"

பெரிய குற்றச்சாட்டை அவன்முன் வைத்துவிட்டு... ஓடிப்போய் கதவை அறைந்து சாத்திக் கொண்டாள், நந்தனா.

"ஆயா... அம்மாவைப் பத்திரமா பார்த்துக்கங்க! நான் வரேன்!"

"இன்னைக்காவது அந்த பழனி முருகன் அருளால் உனக்கு வேலை கிடைக்கும், நந்தனா!"

"பழனி முருகனுக்கு வேற வேலையே இல்லையா, ஆயா...? எனக்கு வேலை வாங்கி கொடுப்பதுதான் அவருக்கு வேலையா...?" என்று சிரிக்க...

"வாயாடிப் பெண்ணே... உன் கஷ்டத்துக்கும், அலைச்சலுக்கும், துன்பத்துக்கும் உனக்கு இன்னைக்கு வேலைத்தான் கிடைக்கப் போகுது!"

உன்னைப் போல ஒரு நல்லப் பெண்ணை... ஊரிலும், உலகத்திலும் தேடிட்டுப் போனாலும் கிடைக்கவே கிடைக்கமாட்டாம்மா!

ஒரு தாய்தான் பிள்ளையை பாசமா பராமரிப்பாள்...! அன்பால் குளிப்பாட்டுவாள்...! ஆசையோடு அரவணைச்சிக்குவாள்...! தட்டி தாலாட்டுவாள்...! ஆனால், மாறா சித்தம் கலங்கிப் போன பெற்றவளை.... தாயா தாங்கிகிட்ட தங்கப் பெண், நீ...! தட்டி தாலாட்டற வைரம், நீ...! உன் ஆத்தாவுக்கு செய்யற செலவுகளால்... பூரணி குணமாகலாம்... இல்லே குணமாகாதக்கூட போகலாம்! அது தெரிஞ்சும் மனம் கோணாமல்... உள்ளம் தளராமல் செலவு செய்யறியே, நந்தனா தங்கம்! அந்தப் பணத்தை சேமிச்சால் உன் எதிர்காலத்துக்கு ஆகுமில்லே, கண்ணு!"

ஈஸ்வரி பாட்டி அன்போடும்... அக்கறையோடும் சொல்ல...

"என் எதிர்காலமே என் தாய்தான், ஆயா!"

"நீ இப்படி சொல்றதுக்காக நான் பெருமைப்படறேம்மா! ஆனால், இந்தச் சித்தம் கலங்கியதாய் எதுவரை உனக்கு துணைவருவா...?"

"அம்மாதான் என் உயிர்...! அம்மா எதுவரை இருப்பாளோ அதுவரை நானும் இருப்பேன்! அம்மாவோட மூச்சு போயிட்டால் என் உயிர்மூச்சும் போயிடும்! புரியலையா, ஆயா...? என் மூச்சை நானே நிறுத்திக்குவேன்!"



நந்தனா திடமாய் சொல்ல... கலங்கிப் போனாள், ஈஸ்வரி.

"ச்சே... என்ன பேச்சு பேசறே, நந்தனா?

உன்னை நான் எத்தனை அறிவாளின்னு நினைச்சேன்! என் நினைப்பை பொய்யாக்கிட்டியே...! சிறு தீ வச்சி கொளுத்திட்டியே தாயீ...?"

கலங்காதே, நந்தனா! அந்தக் கடவுள் ஒருநாள் கண்திறப்பார்! நீ வேணாப்பார்... அம்மா ஒருநாள் குணமாவாள்...! நந்தனா.... என் பெண்ணே....! என் கண்ணே...! என் தங்கமே...! வைரமே...! என் பட்டு குட்டியே!ன்னு மடியில தூக்கி வச்சி கொஞ்சுவாள்! தட்டித் தாலாட்டுவாள்...! அந்த நம்பிக்கை எனக்கிருக்கு!"

ஈஸ்வரி பலமான நம்பிக்கையோடு சொல்ல...

"ஆயா... ஆயா... நீங்க சொன்னதுப்போல நடக்குமா...?"

"நம்பிக்கைதானே வாழ்வின் அச்சாணி! நம்பி வாழேன், நந்தனா!"

"சரி ஆயா... சரிஆயா..."

கண்களில் கண்ணீர் மிதக்க வேக வேகமாய் தலையாட்டினாள், நந்தனா!

"அப்படியே இன்னொன்னும் சொல்வேன்! நீ கேட்டுக்கணும்!"

"என்ன, ஆயா...?"

"உன்மேல இஷ்டப்பட்டு கட்டிக்க வந்தால் நீ கண்ணாலம் கட்டிக்கணும்!"

"ஆயா காதல்ன்னாலும், கல்யாணம்ன்னாலும் எனக்கு கசக்குது...! வெறுக்குது...! அம்மாவுக்கு நிறைவேறாமல் போன காதல் எனக்கும் வேண்டாம், ஆயா! அம்மாவுக்கு கிடைக்காமல் போன கல்யாணம் எனக்கும் வேண்டாம்!"

"வயசு பெண்... நல்ல அழகு பெண்... இப்படி சொல்லக் கூடாதும்மா! களவாணிகள் நிறைஞ்ச உலகம், இது! உன் அழகுக்கும், வயசுக்கும் காவல்காரன் வேணுமில்லே...?"

"அந்தக் காவல்காரன் என்னை மட்டும்தான் காப்பான்! என் பைத்தியக்கார தாயை ஏத்துக்க மாட்டான்!"

"நல்ல பரந்த மனசு உள்ளவன் வந்தால்..."

"வரமாட்டான்...!"

"வந்தால்...?"

"வரட்டும்...! அப்புறம் யோசிக்கலாம்...!"

என்றபோது... சித்தேஷ்வர் கண்ணிலும், கருத்திலும், மனதிலும் வந்து நிற்க... நந்தனாவோ மிரண்டுவிட்டாள்!

உடனே அந்த எண்ணத்தை தன் மனதிலிருந்து சுக்கு நூறாய் கிழித்தெறிய நிம்மதியானாள்...!

அந்த நிம்மதி நெடுநாட்களுக்கு நிலைக்காது எனத் தெரியாமல்...!

## 9

நந்தனா வாசலுக்கு வரவும்... சித்தேஷ்வர் காரை நிறுத்திவிட்டு பேரழகனாய் நடைபோட்டு வரவும்... சரியாய் இருந்தது!

"நீ இன்று அழைக்கலேன்னாலும்... நான் உள்ளே வரத்தான் போறேன்!"

அவள் வழிமறித்து நிற்க... அவளை விலக்கி விட்டு வந்து... அங்கிருந்த நாற்காலியில் அமர... ஈஸ்வரி விழியெடுக்காமல் நோக்கி...

"யாருப்பா நீ...?" என்று கேட்க...

அவனைப் பற்றி சொல்லி... நேற்று நந்தனாவை காப்பாற்றியது வரை சொல்லி முடிக்க...

"உங்களுக்கு ரொம்ப நன்றி, தம்பி!"

"திறந்த வீட்டில் எதுவோ நுழையறாப்போல... எதுக்கு உள்ளே வந்தீங்க...?"

நந்தனா முகம் சுளித்து சுள்ளென்று கேட்க...

"தம்பி எவ்வளவு பெரிய ஆள்...? நீ இப்போ இவர் முன்னாடி பேசிட்டு நிற்க இவர்தான் காரணம்! அந்த நன்றியை மறந்துடாதே, நந்தனா!"

ஈஸ்வரி அதட்ட...

"இவர் மட்டும் நேற்று வராமல் இருந்திருந்தால் நான் நிம்மதியா செத்து ஒழிஞ்சிருப்பேன்...!"

நந்தனா மித மிஞ்சிய ஆத்திரத்துடன் சொல்ல...

"ஏன் இப்படியெல்லாம் பேசி என் மனதை சித்தரவதை செய்யறே...?"

"எது சித்தரவதை...?"

"நீ செத்திருப்பேன்னு சொன்னதை என்னால் தாங்க முடியலே...! என் மனதுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கும்மா!"

என்று சித்தேஷ்வர் உயிரில் கலந்த வார்த்தைகளோடு உருகினான்!

"நீங்க யார் எனக்காக கஷ்டப்பட...? நீங்க என் மாமன் மகனா...? இல்ல அத்தை மகனா...? என்ன உறவு நீங்க, எனக்கு...? எனக்காக வருத்தப்படவும்... கஷ்டப்படவும்...? ம்...? சொல்லுங்க...?"



சித்தேஷ்வர் வாயடைத்துப் போய்விட்டான்!

'எந்த உறவும் இல்லைதான்! இனி உன்னைக் கட்டி உறவுக்காரன் ஆக விரும்புகிறேன்!' என்று இந்தக் கோபக்காரியிடம் சொல்ல ஒரு நிமிடம் ஆகாது, அவனுக்கு!

ஆனால், அவள் பத்ரகாளியாகிவிடுவாளே!

இந்த நினைப்பில்தான் மீண்டும் என்னை கல்லூரி வேலைக்கு வரச் சொல்கிறாயா...? என்று குற்றம் காண்பாள்! குறை சொல்லுவாள்!

வம்பை விலை கொடுத்து வாங்க... அவன் விரும்பவில்லை!

"பதில் சொல்ல முடியாதில்லையா...? சரி... எனக்கு நேரமாகுது! எதுக்கு வந்தீங்கன்னு சொல்லிட்டு கிளம்பினால் நல்லாயிருக்கும்...?"

"உன் உடம்பு எப்படியிருக்குன்னு பார்த்துட்டுப்போக வந்தேன்!"

"இப்போ பறிச்ச மஞ்சள் கிழங்காட்டம் மினுமினுன்னு... பளபளன்னு தானே இருக்கேன்...? நீங்களே பார்க்கறீங்க, இல்ல...?"

சொன்னவள் சும்மாயிருக்காமல்... ஒயிலாய் இடுப்பை வளைத்து... அழகாய் போஸ் கொடுத்து... நளினமாய் நிற்க...

சித்தேஷ்வருக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை!

மெல்ல மென்று விழுங்கியும்... இதழ்களில் லேசாய் சிறுபுன்னகை அரும்ப... அதைக் கண்டவள்...

"என்ன சார் சிரிப்பு வேண்டி கிடக்கு...?" என்று அதட்டினாள்.

லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளிகளை அவன் அதட்டிக் கொண்டு பேரரசனாய் வலம் வந்துக் கொண்டிருக்கும்போது... இங்கே ஒருத்தியின் மிரட்டலுக்கும், அதட்டலுக்கும், கோபத்திற்கும் கட்டுப்பட்டு பெட்டிப்பாம்பாய் இருக்கும் சித்தேஷ்வரைக் கண்டால்... யாருமே நம்ப மாட்டார்கள்! இது அவனுடைய நகல் என்றுதான் நினைப்பர்!

"கல்லூரிக்கு, வேலைக்கு வாம்மா!"

"எதுக்கு வரணும்...? நல்லக் கல்லூரியில் நல்ல மனிதர்களும் இருப்பாங்கன்னு தப்பு கணக்கு போட்டு... நான் தவறுதலா வந்துட்டேன்!"

அனல் கக்கும் பார்வையை வீசி சொல்ல...

"அன்றைய பிழையை பொறுக்க மாட்டாயா, நந்தனா...?"

"எதுக்கு பொறுத்துக்கணும்,..?"

"என்னை மன்னிக்க மாட்டாயா...?"

"மன்னிக்க கூடிய தவறையா செய்தீர்கள்...? குற்றம் செய்தவளை நிரபராதி என்றும்... குற்றம் செய்யாதவளை குற்றவாளி என்றும்

பேசினீர்களே...! மறந்து போகுமா...? பள்ளி முதல்வர் முதல் கடைநிலை ஊழியர் வரை வைத்துக் கொண்டு... அவர்கள் முன்பு என்னை அவமானப்படுத்தி விட்டீர்களே, சார்!"

"இனி அதுபோல தப்பு நடக்காது! ஆரண்யாவின் தோழிகள் நிஜத்தை ஒத்துக் கொண்டனர்! அடுத்ததாய் ஆரண்யாவின் மேல் ஏகப்பட்ட புகார்வர... அவளை கூப்பிட்டு கண்டித்து வைத்திருக்கிறேன்!"

"இதை நான் நம்ப வேண்டுமா...? அவள் வேறு ஏதாவது வம்பில் மாட்டிவிட்டாள் நம்பிவிடுவீர்!"

"ஏம்மா.... நீங்க பெரியவங்க! இவங்களை கண்டிச்சி அனுப்பக் கூடாதாங்கம்மா...? நீங்க இவங்களுக்கு..."

ஈஸ்வரியைப் பார்த்து கேட்க...

"உறவெல்லாம் இல்லை, தம்பி! இவ தாயைப் பார்த்துக்கற ஆயா, நான்!"

"இவங்க தாய்க்கு என்னம்மா...?"

"அந்த ரூம்ல போய் பாருங்க... நீங்களே தெரிஞ்சிக்குவீங்க!"

ஈஸ்வரி புதிர்போட... சித்தேஷ்வர் எழுந்து போய் எட்டிப் பார்க்க... அவற்றையே பார்த்துக் கொண்டு ஏதோ புலம்பிக் கொண்டிருந்த பூரணியைப் பார்த்து அதிர்ந்தான்.

"இவங்க... இவங்களா நந்தனாவின் தாய்...? ஐய்யோ...! ஏன்...? எப்போதிருந்து...? எப்படி...?"

சித்தேஷ்வர் கேள்விகளை அடுக்க...

"அதெல்லாம் பெரிய கதை தம்பி! இப்படி ஒரு தாயை வைச்சிகிட்டுதான் நந்தனா அல்லாடறாள்!" என்று முற்றுப்புள்ளி வைத்தாள், ஈஸ்வரி.

"புரியுதா...? தெரிஞ்சிட்டீங்களா...? பழைய கல்லூரியின் சம்பளம் பத்தாமையால் தான்... உங்க கல்லூரிக்கு வந்தேன்! அம்மா வைத்தியத்திற்கு தாராளமாய் செலவு செய்யலாம் என்றுதான் நான் அங்கே வந்ததே! என் மேனியில் தங்கமும், வெள்ளியுமாய் வாங்கி பூட்டிக்கணும்ங்கிற ஆசையில நான் அங்கே வர்லே!"

நந்தனா சொல்லிவிட்டு மடிந்தமர்ந்து தன் நிலையை நினைத்து அழுதாள். அவளுடைய அழுகை சித்தேஷ்வரின் நெஞ்சைக் கசக்கி பிழிந்தது!

"நந்தனா... நந்தனாம்மா... அழாதேம்மா... ஸாரி... ஸாரிம்மா... என்னை மன்னிக்க வேண்டுகிறேம்மா...!"



அவள் முன்பு மண்டியிட்டு மன்னிப்பைக் கோர... அவனின் அந்தச் செயலால் நந்தனாவிற்கு சித்தேஷ்வர் மேல் பெரும் மதிப்பும்... மரியாதையும் தோன்றியது!

"நீ கல்லூரி வேலைக்கு வரவேண்டும்மா! வர்லேன்னா உன் கையை காலைக் கட்டி தூக்கிக் கொண்டு போய்விடுவேன்!"

அவன் பொய்யாய் இளநகை புரிந்து மிரட்ட...

நீர் ஒழுகும் கண்களோடு நின்றவள்... வழியும் நீரைத் துடைத்துவிட்டு... அவனைப் பார்த்து அழகாய் புன்னகைத்தாள்!

விதி மேலிருந்து அவளைப் பார்த்து புன்னகைப்பது தெரியாமல்...!

## 10

பொய்யை நிஜம்போல கூறி... சித்தேஷ்வரை நியாயம் தவற வைத்தது, ஆரண்யா!

ஆரண்யா செய்த தப்பை ஆராயாமல் பேசியது மட்டும்தான்... சித்தேஷ்வர் செய்த தவறு!

எவ்வளவு போராடினாலும்... எங்கு தேடினாலும் இதுபோல சம்பளத்துடன் கூடிய வேலை எங்கும் கிடைக்காது!

இந்த வேலையால் எவ்வளவு நன்மைகள்...?

'உயிரினும் மேலான தாய்க்கு இராஜவைத்தியம் பார்க்கலாம்...! இரண்டு பிள்ளைகளுக்கு கல்லூரியில் பீஸ்கட்டி படிக்க வைக்கலாம்...! ஈஸ்வரி ஆயாவிற்கு இரண்டாயிரம் என்பதை மூன்றாயிரமாய் கூட்டிக் கொடுக்கலாம்' என்று தான் பிறநலம் வேண்டி மனது எண்ணியதே தவிர... தனக்கு ஏதும் செலவு செய்துக் கொள்ளலாம் என்று சுயநலமாய் யோசிக்கவேயில்லை, அவளின் பண்பட்ட உள்ளம்! அவன் அவளையே கூர்மையாக பார்த்துக் கொண்டிருக்க...

"கல்லூரி வேலைக்கு வருகிறேன், சார்!" என்று மலர... சித்தேஷ்வரோ பேரானந்தப்பட்டான்.

"சரி போகலாமா, நந்தனா...?"

"நந்தனா... உடனே கிளம்பும்மா! இன்றுகூட நல்ல முகூர்த்த நாள்தான்! ஒன்பதரையிலிருந்து பத்தரை வரை முகூர்த்த நேரம்! அது முடியறதுக்குள்ளே..."

ஈஸ்வரி சொல்லி முடிப்பதற்குள்...

"நான் ரெடிதான்!" சித்தேஷ்வர் பட்டென்று சொல்ல...

"என்ன ரெடி?" நந்தனா புரியாமல் கேட்க...

"முகூர்த்த நேரம் முடியறதுக்குள்ளே... உன்னை இழுத்துட்டுப் போய்... ஒரு கோயில்ல வைத்து தாலி கட்ட ரெடிதான்னு சொன்னேன்!"

நந்தனாவின் முகம்போன போக்கைக் கண்டவன்...

"ஆயா முகூர்த்த நேரம் முடியறதுக்குள்ளன்னு சொன்னாங்களா...? அதான் சட்டென்று இந்த குறும்பு பேச்சு வந்துவிட்டது!"

"எதுக்கெல்லாம் குறும்பு பேச்சு பேசுவதுன்னு தெரியாதா...?" என்று நந்தனா கோபமாய் கேட்க...

"எதுக்கெல்லாம்... பேசக்கூடாது..?"

"இதுக்கெல்லாம் பேசக்கூடாது, சார்!" என்று மிரட்டலோடு சொல்ல...

"உத்தரவு, பேரரசி!"

சித்தேஷ்வர் முதுகு குனிந்து... சிரிப்போடு வணங்க... நந்தனாவிற்கும் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

அவளோ உள்ளே சென்று முகம் கழுவி... லேசாய் பவுடர் பூசி தலைமுடியை கொண்டை போட்டு... காதோரம் சிறு ரோஜாவை செருகி வந்தாள்.

கல்லூரி சென்றபின்தான் கொண்டைப் போட்டுக் கொள்வாள்! ஆனால் இனி அந்த வேலையையும் இங்கேயே செய்துக் கொண்டு போய்விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டு வர... நந்தனா... முடியை சுற்றி சுழற்றி கொண்டையாக போடுவது கஷ்டமில்லையா...? முடியின் பாரத்தை கழுத்தும், தலையும் தாங்குமா...?" என்று அவன் கவலைப்பட...

"தாங்கலேதான், சார்! ஒரு கல்லூரி பேராசிரியையின் நல்லொழுக்கங்களில் இதுவும் ஒன்றில்லையா...? முடியை வெட்டி வீசவும் மனசு வர்லே! ஜடையா பின்னிப் போட்டுட்டு போகவும் மனசுக்கு ஒப்பலே!"

"நம்ம கல்லூரியில் அப்படியெல்லாம் சட்டதிட்டமில்லே! அவரவர் விருப்பம்போல வரலாம்!"

"இருக்கட்டும்! எனக்கு இதுதான் பிடிச்சிருக்கு! அந்தந்த வேலைக்கும் எப்படி உடுத்தணும்... நடக்கணும்... தலைவாரிக்கணும்ன்னு சில ஒழுக்க விதிமுறைகள் இருக்கில்லே...? அதை மீற எனக்கு பிடிக்காது!"

"இந்த நாகரீக உலகத்தில் இப்படி ஒரு பெண்ணா...? நீ என்னை மேலும் மேலும் ஆச்சரியப்பட வைக்கிறாய்...?"



சித்தேஷ்வர் ஆச்சரியப்பட்டு... அவள் மேல் பார்வையை ஊசியாய் இறக்க... அந்த குத்தும் பார்வை அவளை என்னென்னவோ செய்தது!

இருவரும் ஜோடியாய் போய் இறங்கினர்.

அவனுக்கு கிடைத்த அதே மரியாதை எள்ளளவும் குறையாமல்... அவளுக்கும் கிடைத்ததில் அவள் மகிழ்ந்தாள்!

ஆரண்யாவின் அட்டூழியத்தால் ஒரு நல்ல பேராசிரியையை இழந்தோமே என்று வருந்திய மாணவர்கள் அனைவரும் அவளைக் கண்டதும் மகிழ்ந்தனர்!

ஆரண்யாவிற்கோ உள்ளுக்குள் பெரும் பூகம்பமும்... பெரும் புயலும் ஏற்பட்டது!

அவளை வகுப்பில் விட்டுவிட்டு சித்தேஷ்வரும், பள்ளி முதல்வர் எழில்மதியும் நடந்து கொண்டிருந்தனர்!

"நந்தனா மேடம்... உங்களுக்கு ஸ்பெஷலா, சார்?" என்று எழில்மதி சிரிக்க...

"மற்றவங்க முன்னாடிதான் நீ பள்ளிமுதல்வர், நான் கரஸ்பாண்டண்ட்! இப்போ நீ என் நண்பன்! அந்த சாரையும் மோரையும் நான் தனியே இருக்கும் போது விடக்கூடாதா...?"

சித்தேஷ்வரும், எழில்மதியும் ஒன்றாய் படித்தவர்கள்! அவனுடைய கல்வி குழுமத்திலும் சரி... கம்பெனியிலும் சரி... கடைகளும் சரி... பெரிய பெரிய பதவிகளை வகிப்பவர்கள் அத்தனைபேரும்... அவனுடன் படித்த நண்பர்கள்! அந்த நேர்மையான நண்பர்களால்தான்... அவனால் உச்சிக்கு போக முடிந்தது!

"என்ன கேட்டே, எழில்? நந்தனா ஸ்பெஷலான்னா...?"

"ஆமாம்டா, சித்து!"

"நாளைக்கே நந்தனா இந்தக் கல்லூரியின் கரஸ்பாண்டண்டா கூட ஆகலாம்!" என்று சிரிக்க...

"ஓஹோ... கதை அப்படிப் போகுதா...?" என்று கண்ணடித்தான், எழில்மதி!

"அதான் அண்ணியை போய் சமாதானப்படுத்தி கூட்டிட்டுவரீங்களா...? காரணமில்லாமல் எந்த காரியத்தையும் தலைவர் செய்யமாட்டார்ன்னு தெரியாமல் போச்சே!...

அன்னைக்கே மேடத்தைப் பார்த்து குடம் குடமா ஜொள்ளுவிட்டதைப் பார்த்து லேசா எனக்கு பொறிதட்டிச்சி தான்! பய சிக்கிட்டான்! நந்தனா அழகுல கவிழ்ந்துட்டான்! அதான் முகம் விழுந்து போச்சின்னு நினைச்சேன்!...

சரி எல்லாம் நல்லதுக்குதான்! இவ்வளவு நாள் கட்டிக் காத்த பிரம்மச்சரியம் நந்தனாவைப் பார்த்து கலைஞ்சதிலே சந்தோஷம்தான்...!

நாமெல்லாம் திருமணம் செய்து குழந்தை காண்வெண்ட்டுக்கு போறானே... இந்த சித்து இப்படியே இருக்கானேன்னு கவலைப்பட்டேன்! என் கவலையெல்லாம் தீர்ந்து போச்சு!" என்று நீளமாய் பேசியவன் கேட்டான்.

"ஆமா... மகாராஜா மனதில் உள்ளதெல்லாம் மகாராணிக்கு தெரியுமா...?"

"ம்கூம்...!"

"அல்லி ராணி... அடங்காப் பிடாரி... அகங்காரக்காரின்னும் சொல்றாங்க! சமூக சேவைன்னால் அண்ணிக்கு அல்வா சாப்பிடறது போலவாம்! லீவு நாளெல்லாம் இரத்ததான முகாம், எய்ட்ஸ் நோய் தடுப்பு முகாம், சுத்தம், சுகாதாரம்ன்னு மாணவர்களோட புறப்பட்டுவிடுவாங்களாம்! கற்பகம் கல்லூரியிலே மேடத்தைப் பற்றி கேட்டு தெரிந்து கொண்டேன்!" எழில்மதி சொல்ல...

"இன்னும் கொஞ்ச நாள்ல அந்த அல்லிராணி... என் இனிய ராணியாயிடுவா!"

"அண்ணி ரொம்ப கோபக்காரி! அண்ணனுக்கு அவசரம் கூடாது!" என்று எழில்மதி கண்சிமிட்ட...

"அதெல்லாம் அண்ணிகிட்ட எப்படி நடந்துக்கணும்ன்னு அண்ணனுக்கு தெரியும்டா! தம்பி இதான் சாக்குன்னு ஓவரா புத்தி புகட்ட வேண்டாம்!"

சித்தேஷ்வர் எழில்மதியின் முதுகில் தட்ட...

"அப்போ நானெல்லாம் அலர்ட்டா இருக்கணும்! அதான் அண்ணியைப் பார்க்க அடிக்கடி இங்கே விசிட் வருவீங்க, இல்லே?"

"என்னவளை... என் தேவதையை தரிசிக்க அடிக்கடி வருவேன்! அப்படியே உங்களையெல்லாம் உண்டு இல்லைன்னு செய்துடறேன் பார்!"

என்று சித்தேஷ்வர் பொய்யாய் மிரட்ட...

"ஐய்யோ சாமி... பயமா இருக்கே!" என்று அவனும் பொய்யாய் பயந்தான்.

மதிய இடைவேளையில் ஆரண்யா தோழிகளிடம் சீறலோடு சொல்லிக் கொண்டிருந்தாள்!

"அந்த நந்தனா நம்மை எதிரியா பாவிக்கறாள்! வைப்பேனா ஒழிப்பேனான்னு பார்க்கறாள்! என் மாமன்காரன் மனசு மதிகெட்டுப் போச்சு!...



என்னவோ தேவலோகத்து ரம்பை, ஊர்வசியைக் கண்டாற்போல் மயங்கி கிடக்கறான்!...

இவளை ஒழிக்கணும்!...

கொண்டு வந்துவிட்ட என் மாமனே ஓடஓட விரட்டறாபோல செய்யறேனா... இல்லையா...? பாருங்கடி!"

ஆரண்யா மற்றும் நால்வரும் நந்தனாவை ஒழித்துக்கட்ட திட்டம் தீட்டினர்!

அவர்கள் வகுத்த வியூகத்தில் மானாய் மாட்டி தவித்தாளா...? அல்லது சிங்கமாய் சீறி தப்பித்தாளா...?

## 11

ஆரண்யா எவ்வளவோ தொல்லைகளை நந்தனாவிற்கு கொடுக்க... அதை சித்தேஷ்வர் பார்வைக்கு கொண்டு போய்... தவிடுபொடியாக்கினாள்!

நந்தனா உறங்கும் எரிமலையானாள்!

எரிமலை மூன்று வகைப்படும். செயல்படும் எரிமலை, செயல்படாத எரிமலை, உறங்கும் எரிமலையென்று!

செயல்படும் எரிமலை என்பது எந்த நேரமும்... நாளிலும் எரிமலை குழம்பான 'லாவா'வை கக்கிக்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கும்!

செயல்படாத எரிமலை என்பது நீண்ட நெடுநாட்களாக செயல்பட்டுக் கொண்டிருந்த எரிமலை... ஒரு குறிப்பிட்ட பொழுது... தனது செயற்பாட்டை நிறுத்திக் கொள்ளும்! பிறகு எப்போதுமே அங்கே செயல்பாடு இருக்காது!

உறங்கும் எரிமலை என்பது செயல்பட்டுக் கொண்டிருந்த எரிமலை தன் செயல்பாட்டை நிறுத்தி உறங்கும்! உறங்குபவன் திரும்ப எப்போது எழுவானோ என்று தெரியாதது போல... அந்த எரிமலை எப்போது மீண்டும் வெடித்து எரிமலைக்குழம்பை கக்கும் என்று தெரியாது!

அதுபோலதான் ஆரண்யாவும் தனது செயல்பாட்டை நிறுத்தி... நல்ல பிள்ளையாய் உறங்க ஆரம்பித்துவிட்டாள்! சமய சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தாள், மீண்டும் வெடித்து சிதற...!

சக ஆசிரியர்கள் நந்தனாவிடம் தோழமையுடன் பழகினர்.

மாணவர்கள் அவள்மேல் பெரும்மதிப்பு வைத்திருந்தனர்!

அடுத்ததாய், அவள் செய்யும் சமூகசேவை கண்டு... அங்கிருந்த அத்தனை பேருக்கும் பிடித்ததல்லாமல்... பிரமித்துப் போனார்கள்!

அந்தக் கல்லூரியைவிட.... இந்தக் கல்லூரியில் சித்தேஷ்வர் கொடுத்த சுதந்திரத்தால், சலுகையால் திறம்பட செயல்பட்டாள்.

என்.சி.சியில் நிறைய மாணவர்களைச் சேர்த்தாள்!

என். எஸ். எஸ் என்ற நாட்டு நலப்பணி திட்ட அமைப்பில் ஏராளமான சேவை மனம் கொண்ட மாணவர்களை சேர்த்துக் கொண்டாள். அதனுடைய 'திட்ட அலுவலர்' பொறுப்பை வேறு ஒரு வயதான பேராசிரியரிடமிருந்து மனம் உவந்து வாங்கிக் கொண்டாள்!

ஒவ்வொரு சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களிலும் கோவையைச் சுற்றியுள்ள கிராமத்தில் ஏதாவது ஒன்றை தேர்ந்தெடுத்து சுத்தம், சுகாதாரம் என்று இறங்கிவிடுவர்... அவளும், பெரும் மாணவ, மாணவியர் குழுவும்!

மாலை அங்கிருக்கும் மக்களுக்கு சுத்தம், சுகாதாரம் பற்றிய வகுப்புகளை எடுப்பார்கள்!

சுற்றுச் சூழல் மாசு, எய்ட்ஸ் விழிப்புணர்வு பற்றியெல்லாம் நாடகத்தின் மூலமும், பாடல்களின் மூலமும் விழிப்புணர்வு ஊட்டுவார்கள்!

நாடகத்துக்கு கதையும், பாடல்களையும் நந்தனாவே சொந்தமாக எழுதுவாள்!

வகுப்பைவிட.... இதுபோல கதை, பாடல், நாடகம் மூலம் விளக்கும்போது கிராமத்து மக்களுக்கு நன்கு புரியும் என்று அவர்கள் நாடிப்பிடித்து வைத்திருப்பவள், நந்தனா!

அடுத்ததாய் மாலையில் அவர்கள் தெருவில் உள்ள பத்து, பனிரெண்டு வகுப்பு பிள்ளைகளுக்கு இலவச டியூசன் நடத்துகிறாள்!

அதைக் கண்ட மாணவர்கள் 'தாங்களும் எங்கள் பகுதியில் செய்கிறோம்' என்று கேட்க... விருப்பமுள்ள மாணவர்களை குழுவாய் முதலில் பிரித்தாள்.

அந்தந்தப் பகுதி ஊராட்சி மன்ற தலைவர்கள், கவுன்சிலர்களைச் சந்தித்து... அனுமதிபெற்று... அங்கிருக்கும் ஊராட்சி மன்ற கட்டிடத்திலேயே இலவச டியூசனை... மாணவர்களை வைத்து ஆரம்பித்தாள்.

தவணை முறையில் ஸ்கூட்டி வாங்கினாள்! சில மாலை வேளைகளில் அங்கே போய் மேற்பார்வை இட்டாள்!



'நண்பர்கள் குழு' என்று சிறிதாய் இருந்த இரத்ததான குழுவை பெரிதாக்கினாள். இப்போது அனைத்து அரசு, தனியார் ஆஸ்பத்திரியில் அவர்களின் செல் நம்பர் இருந்தது! போன் வந்தால் அந்த வகை ரத்த குரூப் உள்ளவர்களோடு சென்றுவிடுவாள், நந்தனா.

அவன் மனதில் ஆழ ஆழ கால் ஊன்றி, சித்தேஷ்வரின் மனதை அவஸ்தைக்கு உள்ளாக்கினாள்!

கல்லூரி நாட்களில்... அதுவும் கல்லூரி வேளைகளில் மட்டும்தான் சந்திக்க முடிந்தது, நந்தனாவை!

அதுவும் ஓய்வு பாடவேளை என்றால்தான் பேசுவாள்!

சனி, ஞாயிறுகளில் ஆசைப்பட்டு போன் செய்தால்...

"ம்கூம்... டியூசன் சொல்லித் தரேன்!"

"டியூசன் சென்டர் விசிட்ல இருக்கேன்!"

"எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம்ல இருக்கேன்!"

"ரத்ததான முகாம்ல இருக்கேன்!"

"இன்று போலியோ சொட்டுமருந்து தினமில்லையா...? அதனால் காந்தி நகர் முகாம்ல இருக்கேன்!"

சித்தேஷ்வர் இப்படிப்பட்ட பதில்களால் நொந்துப் போவான்! அவளின் பூ முகத்தை பார்க்க முடியவில்லையே என்று வருந்துவான்.

அவளின் புகழ் கோவை மாவட்டத்தில் காற்றாய் பரவியது!

கலெக்டர் சரண்ரெட்டி நேரில் வந்து நீண்ட நேரம் வாழ்த்திவிட்டுப் போனார்!

அன்று...

சித்தேஷ்வர், நந்தனாவிற்கு போன் செய்ய...

"நான் ஆஸ்பத்திரியில இருக்கேன், சார்!" என்று கூற...

"எந்த ஆஸ்பிட்டல்!" பதறி கேட்க...

"கே.ஜி. ஆஸ்பிட்டல்! அப்புறம் பேசறேன்!" என்று நந்தனா போனை கட் செய்ய...

நந்தனாவிற்கு உடம்பிற்கு என்னவோ... ஏதோ என்று கவலைப்பட்ட சித்தேஷ்வர்... பதறிக் கொண்டு சென்று... காரை நிறுத்திவிட்டு... ஆஸ்பத்தரிக்குள் புயலாய் நுழைந்து... ரிசப்ஷனில்...

"நந்தனா... எங்கே இருக்கா...?" என்று அவசரப்பட....

"பத்தாம் நெம்பர் அறை!" என்று அவள் கூற...

ஓடிப்போய் மூச்சிறைக்க நின்றவனை...

ஒரு ஹார்ட் பேஷண்டின் ஆபரேஷனுக்காக இரத்தம் கொடுத்துக் கொண்டிருந்த அவளும், அவள் தோழிகளும், இரண்டு கல்லூரி மாணவர்களும் அவனை அதிசயமாய் பார்க்க...

நந்தனாவின் உடல்நிலைக்கு என்னவோ... ஏதோவென்று பதறி ஓடிவந்தவன்... அவள் இரத்த தானம் வழங்குவதைக் கண்டு... தன் நிலைக் கண்டு வெட்கினான்.

"என்ன சார்...? மேடத்துக்கு என்னவோ... ஏதோன்னு பதறிட்டு வந்தீங்களா என்ன...?" என்று நந்தனாவின் தோழிகள் கிண்டலடிக்க...

"நந்தனா... இரத்த தானம் வழங்கதான் ஆஸ்பத்தரிக்கு வந்தேன்னு சொல்லக் கூடாதா...?" என்று கொஞ்சம் கடிந்துக் கொண்டான்.

அவனின் கோபம் அவளுள் லேசாய் கலவரத்தை உண்டுபண்ணியது!

நந்தனா... அவன் இதயத்தை தன்பால் கட்டி வைத்துக் கொண்டு கண்ணாமூச்சு ஆடிக் கொண்டிருக்க... ஆழிப்பேரலையில் சிக்கிய மரப்படகாய் தத்தளித்தான்...! தவித்தான்...!

அவனுள் நந்தனாவின் மேலான காதல்... காட்டாறு வெள்ளமாய்... அவனின் இதய ஆற்றில்... பொங்கி பிரவாகம் எடுத்து... நொப்பும் நுரையுமாய்... துள்ளலோடும்... துடிப்போடும் ஓடிக் கொண்டிருந்தது!

நந்தனா... அவன் நினைவுகளைச் சிறைபிடித்துச் கொண்டாள்!

நந்தனா... அவன் கனவுகளைக் களவாடிக் கொண்டாள்!

நந்தனா... அவன் கற்பனைகளை சுருட்டி முடிந்துக் கொண்டாள்!

சித்தேஷ்வர்... அவளிடம் மயங்கினான்... ஆனால், அவளிடம் காதலைச் சொல்ல தயங்கினான்!

சித்தேஷ்வர்... நந்தனாவிற்குள் கலந்தான்...!

சித்தேஷ்வர்... நந்தனாவிற்குள் கரைந்தான்...!

சித்தேஷ்வர்... நந்தனாவிற்குள் காணாமல் போனான்...!

அவன் நந்தனாவை உயிர் உருக நேசித்தான்!

அந்த நேசம்தான் இப்போது அவனின் சுவாசம்...!

'நந்தனா... நந்தனா... நந்தனா...'

இதுவே அவனின் தாரக மந்திரமானது!

நந்தனா... அவனுடைய உயிர்...!

நந்தனா... அவனுடைய உடல்...!

நந்தனா... அவனுடைய ஆத்மா...!



நந்தனா... அவனுடைய வாழ்வு... சந்தோஷம்...!

நந்தனா இல்லையேல் சித்தேஷ்வர் இல்லை...

அவன் காத்திருந்தான்... அவளிடம், அவனது காதலைச் சொல்ல...!

நந்தனா அவனின் காதலை ஏற்றுக் கொள்வாளா..?

## 12

"நந்தனா... நான் உன்னைச் சந்திக்கணும்!"

சித்தேஷ்வரிடம் இருந்து போன் வர...

"கல்லூரிக்கு வரீங்களா...?" அவள் கேட்க...

"ம்கூம்... வெளியில இருக்க நேரு பூங்காவுக்கு போகலாம்! எழில்மதிக்கிட்ட உனக்கு லீவு சொல்லிட்டேன்! உனக்கு அவன் அனுமதி தேவையில்லே! நேரே புறப்பட்டு வா! இல்லே நான் அங்கே வருவேன்!"

"எங்க இருக்கீங்க...?" கோபமாய் கேட்க...

"நம்ம கல்லூரி கேட் வாசல்லே! நீ வர்லேன்னா உள்ளே வந்துடுவேன்!"

"வருகிறேன்!"

பையை தூக்கிக் கொண்டு வெளியே வர... அவன் கார் நிற்க ஏறிக் கொண்டாள்!

இங்கு வேலைக்கு வந்த பத்து மாதத்தில் நந்தனாவின் இதயம்கூட சலனப்பட்டுதான்... சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிறது!

சித்தேஷ்வரின் அன்பால்... அக்கறையால்... பாசமான பேச்சால்... பண்பான அணுகுமுறையால்... அவளின் புண்ணாகிப் போன, இதயத்திற்கு... மாலைத் தென்றலின் இதமான தழுவலாய்... தட்டி தாலாட்டியது!

அவனின் நேசப்பார்வையின் வருடலால்... அவளின் உடலும், உள்ளமும் மார்கழி பனியின் மிதமிஞ்சிய குளுமையை உணரும்!

அவனைக் கண்டுவிட்டால்... அவளின் அனுமதியைப் பெறாமல்... இதயம் துள்ளி குதித்து விழுந்தடித்துக் கொண்டு ஓடி... அவனிடம் தஞ்சம் புகும்!

அந்த இதயத்திற்கு பலமான கயிறு போட்டு கட்டுவாள்! ஆனால், அந்தக் கயிற்றை பிய்த்துக் கொண்டு... ஜல்லிக்கட்டு காளையின் பாய்ச்சலில் ஓடிப் போய்... அவனிடம் முட்டி மோதி... கட்டியணைத்து சுகம் காணும்!

அவளின் நீண்ட நயனங்கள் அதைவிட படுமோசம் செய்யும்! அவனின் விழியோடு கை கோர்த்து, கலந்து, கொஞ்சிக் கொஞ்சி, சிறுகுழந்தையாய் குதித்து விளையாடும்!

நந்தனாவும் தவித்துக் கொண்டிருந்தாள்!

அவன் மேலாய்... அவளுள்ளே பொங்கும் நேசத்திற்கு அணைப்போட முயற்சிக்கிறாள்!

சதா அவளுள் பூக்கும்... அவனைப் பற்றிய நினைவுகளுக்கும், கனவுகளுக்கும், கற்பனைகளுக்கும் எஸ்மா... டெஸ்மா போன்ற பயங்கரமான தடாசட்டங்களைப் போட்டாலும் அடங்காது!

'காதல்... உனக்கு தேவையா...?'

'உன்னை ஈன்ற தாயை தவிக்க விட்டுவிட்டு... ஒரு கல்யாணம் வேண்டுமா...?

'உன் தகுதி என்ன...? உன் தராதரம் என்ன...?'

'சித்தேஷ்வர் எவ்வளவு பெரிய பணக்காரன்! பொழுதுபோக்காய் பழகலாம்! அல்லது நிஜக் காதலானாலும் அவனுடைய பெற்றவர்கள் உன்னையும் உன் பைத்தியக்கார தாயையும் ஏற்று கொள்வார்களா...?'

'உன் தாய்க்கு நிறைவேறாத காதல் உனக்கு மட்டும் நிறைவேறுமா...?'

'வீணாய் நீயும் உன் தாய்போல உருகி... மருகி... கடைசியில் தலையில் மண்ணையள்ளிப் போட்டுக் கொள்ளாதே!'

'நீயும் சித்தம் கலங்கி... உன் தாயின் வாரிசு என்று நிரூபித்து விடாதே!'

அவ்வப்போது அவளின் மனது அவளின் தாடையில் இடித்து அறிவுறுத்தும்! மண்டையில் ஓங்கி கொட்டும்!

மனதை பெரும் அங்குசம் போட்டு அடக்கித்தான் அவளும் வாழ்கிறாள்!

சித்தேஷ்வர் தனியே பேச வேண்டும் என்று அழைக்கும்போது... தன் மனதில் கள்ளத்தனமாய் புதைந்திருக்கும் நேசம்... அவன் முன்னே முகம்காட்டி... தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்றுதான் தூரே தூரே விலகிப் போவது!

அதிகப்படியான சேவையை, வேலையை இழுத்துப் போட்டு... அவனை மறக்க நினைத்தாள்!

ஆனால், அவளால் அவனை மறக்கத்தான் முடிந்ததா...?

பூங்காவில் நிழற்பரப்பிக் கொண்டிருந்த ஆலமரத்தின் அடியில் போடப்பட்டிருந்த பெஞ்சில் அருகருகே அமர்ந்திருந்தனர்!



"என்ன பேசணும், சார்?"

இமைக்க மறந்து... கண்ணில் காதல் வழிய வழிய... அவளை நீண்ட நேரம் பார்த்தான்! பின்...

"நான் சுற்றி வளைத்து பேச விரும்பலே, நந்தனா! நேரே விஷயத்துக்கு வரேன்! நான் உன்னை நேசிக்கிறேன், நந்தனா! உன்னைக் கண்ட நாள்முதலாய்... என் உயிரினும் மேலாய் நேசிக்கிறேன், நந்தனா!"

அவள் அதிர்ந்தாள்!

நேசிக்கிறான் என்பது மட்டும் தெரியும்! ஆனால், கண்ட நாள் முதலாய் நேசிப்பான் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை!

"நீயும் என்னை நேசிக்கிறாய், தானே...?"

அவன் அப்படி கேட்க... முதலில் அதிர்ந்தவள் பின் சட்டென்று சொன்னாள்!

"ம்கூம்... நான் உங்களை நேசிக்கலே...!"

"அப்படின்னு உன் வாய் மட்டும்தான் சொல்லுது! உன் உள்ளம் சொல்லலே!"

"நிஜம் சித்தேஷ்!"

"வாயை மூடு, நந்தனா! நீ பொய் சொல்லலாம்! ஆனால், உன் நீண்ட விழிகள் ஒருநாளும் பொய் சொன்னதில்லே! உனது விழியில்... எனது மேலான நேசத்தை... வரிவரியாய்... தினமும்... நான் வாசித்துக் கொண்டுதானே இருக்கிறேன்!...

உன்னைப் பிரிந்து இருக்க முடியலே, நந்தனா...!

உன்னைக் காணாமல் போனால் என் கண்கள் குருடாகிப் போகிறது...!

உன் நினைவை எண்ணாது போனால்.. என் இதயம் சுவாசத்திற்கு தவிக்கிறது...!

நீ இல்லாத இடம் எனக்கு இருட்டாகி தெரிகிறது...!

உனக்கு புரியவில்லையா, நந்தனா...? நீ என் பார்வையானவள்...! நீ என் சுவாசமானவள்... நீ என் ஒளியானவள்..! நீ என் வாழ்வானவள்...!

நீ மறுத்தால் என் சின்ன இதயம் சில்லுசில்லாய் சிதறிப்போய்விடும்!

நீ என் காதலை ஏற்று... என்னை மணந்து கொள்ள வேண்டும், நந்தனா! உன்னோடு கனவில் ஊடலும், கூடலுமாய் குடும்பம் நடத்தி... இரண்டு இல்லையில்லை நான்கு குழந்தைகளின் தகப்பன், நான்!"

"ஐய்யோ... சித்தேஷ்..." என்று அலறலோடு அவள் காதைப் பொத்தி...

"காதலுக்கும், கல்யாணத்திற்கும் பிராப்தம் இல்லாதவள், நான்! காதலை மலையளவு, வானளவு, கடலின் ஆழமளவு வெறுப்பவள், நான்! காதலுக்கும் எங்க குடும்பத்துக்கும் ராசியே இல்லை, சித்தேஷ்! என் தாய் புத்திசுவாதீனம் இல்லாமல் இருக்க... இந்த வீணாய் போன காதல் தான் காரணம்!...

அவளை உருகுலைய வைத்தது, காதல்! தந்தையில்லாமல்... சித்தம் கலங்கிய தாயோடு... அநாதையாசிரமத்தில் எப்படியான வாழ்க்கையை நான் வாழ்ந்தேன், தெரியுமா...?"

நந்தனா அழுகையோடு... சிஸ்டர் மரியாள் தனது தாயைப் பற்றி சொன்னதை ஏடு திருப்பி காட்ட ஆரம்பித்தாள்!

## 13

கல்வராயன் மலை!

விழுப்புரம் மாவட்டத்தின் மேற்கு கடைகோடியில்... மாவட்டத்திற்கு பாதுகாப்பு அரணாய் விளங்கும், நெடிய மலைத் தொடர்!

'ஏழைகளின் ஏற்காடு' என்று கூறப்படும் வெள்ளிமலை அங்கேதான் இருக்கிறது!

வானளவு வளர்ந்த உயர்ந்த மரங்களும்... செடிகளும்... கொடிகளும்... எங்கும் பசுமையாய் பச்சைப்பட்டை மேனியில் சுற்றிய அழகிய இளம் பெண்ணாய் காட்சியளித்தாள், மலைராணி!

சுற்றுலாப் பயணிகள் சுற்றித்திரிய... அரசுக்கு சொந்தமான பெரிய பழத்தோட்டம், மலர் தோட்டம்...!

குளித்து மகிழ... மேகம் நீர் வீழ்ச்சி, பெரியார் நீர்வீழ்ச்சி...!

குதூகலிக்க... ஏரியில் படகு சவாரி...!

என்று காண்பவரை கவரும் சுற்றுலாதலம், அது!

மலையில் பிறக்கும் கோமுகி ஆறு, மணிமுத்தாறு மாவட்டத்தையே வளமாக்கி கொண்டிருக்கிறது!

கோமுகியாறு மலையடிவாரத்தை தொடுமிடத்தில் காமராஜர் ஆட்சியில் கட்டிய பெரிய கோமுகி அணை என எல்லாம் அம்சமாய் இருக்கும்! விழுப்புரம் மாவட்டத்தின் பக்கத்து மாவட்டங்களான திருவண்ணாமலை, கடலூர், சேலம், தர்மபுரி மாவட்ட மக்களெல்லாம் கோடையில் சுற்றுலா வருவர்!



அண்டை மாநிலமான புதுச்சேரியிலிருந்தும் சுற்றுலாவுக்கு வரும் கூட்டம் அதிகம்! அந்த மலையகம்தான் பூரணிக்கு தாயகம்!

அழகிய தென்றலாய்... சலசலத்து ஓடும் ரம்யமான நதியாய்... இதமாய் மேனித் தவழும் பனிச்சாரலாய்... சிறகடிக்கும் சிட்டாய்... அந்த வெள்ளிமலையில் பிறந்து வளர்ந்த பதினெட்டு வயது தங்கச்சிலைதான், பூரணி!

பூரணிக்கு தந்தையில்லை! சிறுவயது இருக்கும் போதே இறந்துவிட்டான்!

அதன் பிறகு தாய் சரஸ்வதிதான், எல்லாமே! மாநிறமாய் இருந்த கணவன் மனைவிக்கு பொன்னிறத்தில், பூரண சந்திரனாய், தகதகவென மின்னிய நிறத்தில் குழந்தை பிறக்க... பூரித்துப்போனவர்கள், பூரணி என்று பெயர் சூட்டினர்.

படிப்பறிவில்லாதவர்கள்... தேவநாதனும், சரஸ்வதியும்!

மலை ஜாதியினர்!

அந்தப் பரந்து விரிந்த மலையில் தேவநாதனுக்கு சொந்தம் என்று சொல்லிக் கொள்ள சிறுகுடிசைதான் இருந்தது!

தேவநாதனின் தொழில் தேனெடுத்தல்!

சரஸ்வதி வரகு, சாமை, திணை, நெல் அறுவடைக்கு செல்வாள்!

ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களில்தான் மழையிருக்காது, மலையில்!

அந்த இலையுதிர்காலம் முடிந்ததும் மரங்கள், செடிகள், கொடிகள் புதிய இலைகளும், பூக்களுமாய் பூத்துக் குலுங்கும்!

பூத்துக் குலுங்கும் மலர்களைநாடி ஏராளமான தேனீக்கள் வரும்! மலர்களிலிருந்து உறிஞ்சிய தேனை தேனீக்கள் பெரிய பெரிய ராட்சஷ மரங்களில் கூடுகட்டும்!

அதுவும் வேம்பு, வெப்பாலை மரங்களில் பூக்கும் வெண்ணிற பூக்களின் நிறத்தில், அழகில் மயங்கும் தேனீக்கள்... மலையில் ஏராளமாய் கூடிவிடும்!

வேம்பு, வெப்பாலைப் பூக்களில் இருந்து கிடைக்கும் சிறு கசப்பு கொண்ட தேன் மருத்துவ குணம் உள்ளது!

அந்த தேனுக்கு கொள்முதலாளர்களிடையே நல்ல வரவேற்பு இருக்கும்!

மற்ற தேனைவிட இருமடங்கு தொகையைக் கொடுத்து வாங்கிப் போவர்!

தேவநாதன், அவன் கூட்டாளி கடம்பன், இடும்பன் மூவரும் வேம்பு, வெப்பாலை மரங்கள் மிகுந்த பகுதிக்குதான் தேனெடுக்க செல்வார்கள்!

பெரிய தீப்பந்தம் எடுத்துக் கொண்டு... மரத்தில் ஏறி... தேனீக்களை விரட்டி விட்டு... அந்த தேன் கூட்டைப் பிய்த்துப் போடும் வேலை தேவநாதனுக்கு!

அதிலிருந்து தேன்பிழிந்து... தலையில் சுமந்து வருவது இடும்பன், கடம்பன் வேலை!

கிடைக்கும் வருவாயை மூவரும் சமமாக பங்கிட்டுக் கொள்வர்!

ஆறுமாதம் சம்பாதிப்பார்கள்! மீதி ஆறுமாதம் அதை வைத்துக் கொண்டு சிக்கனமாய் செலவழிப்பார்கள்!

கண் நிறைந்த கணவன்! அழகான குட்டி தேவதையாய் மகள் என்று வாழ்க்கை தெளிந்த நீரோடையாய் சென்ற போது...

தேனெடுக்க சென்ற கணவன்... மரத்திலிருந்து விழுந்து... சடலமாய் இடும்பனும், கடம்பனும் தூக்கி வர... அந்தக் காட்சி பெரும் துக்கமாய் அமைந்து விட்டது!

சரஸ்வதி நிலைகுலைந்துப் போனாள்!

கணவனின் துக்கம் தாங்காது தூக்குமாட்டி தொங்கியவளை... அக்கம் பக்கம் காப்பாற்றிவிட்டது!

"ஏன்டி கூறு கெட்டவளே... புருஷன் போன இடத்துக்கு நீயும் போய் சேர்ந்துட்டா... இந்த இளங்குருத்தை யாருடி பார்த்துப்பா...? பொட்ட புள்ளை யாருமில்லாமல்... இந்த வனத்திலே வாழமுடியுமா...?

இந்தப் பொல்லாத உலகம்தான் விட்டு வைக்குமா...? புருஷன் செத்து எந்த பொம்பளையும் வாழறதில்லையா...? நீ வாழணும்டி! உன் மகள் பூரணிக்காக வாழணும்!...

இனி உன் எதிர்காலமே பூரணிதான்டி! கஷ்டப்பட்டு உழைச்சி படிக்க வை! வயசுக்கு வந்ததும்... ஏதாவது நல்ல மாப்பிள்ளைக்கு கட்டிக் கொடுத்து... அவள் புருஷன், புள்ளைன்னு வாழறதை... நீ கண்குளிர பார்க்க வேணாமா...?"

என்று ஆளாளுக்கு அறிவுரை கூறினர்.

தன் தவறு உணர்ந்தாள்! தனது பிள்ளைக்காக வாழ எழுந்தாள்!

பூரணிக்கு ஐந்து வயதானது. 'ஏகலைவா உயர்நிலைப் பள்ளி'யில் சேர்த்தாள்!

பூரணிக்கு தந்தை ஞாபகம் வராமல் தந்தையாகவும், தாயாகவும் மாறி தாங்கிக் கொண்டாள்.

பூரணி நன்கு படித்தாள்! முதல் வகுப்பில் தேறினாள்!



இயற்கை காற்று, நெல், கம்பு, கேழ்வரகு, சோளம், திணை, வரகு, சாமை என இயற்கை உரம்போட்டு விளைவித்த பொருட்களில் சமைத்த சத்தான உணவு... பழம், காய்கறிகள்... தேன் கலந்த உணவுகள்... வீட்டிற்கு பின்பு ஓடும் சிற்றோடையில் மூலிகை வாசத்தோடு ஓடிவரும் நீரில் குளியல் என்று பூரணி வெகு அழகாய்... பாலாய்... பளிங்காய்... தங்க நிற சருமத்துடன்... வெகு ஆரோக்கியமாய் வளர்ந்தாள்!

வயதுக்கு வந்த பின் அவளை அழகி என்று சொல்லக் கூடாது, பேரழகி என்றுதான் சொல்ல வேண்டும்!

ரெட்டை ஜடையில், பாவாடை தாவணியில்... சிற்பி வடித்த சிலையாய் அம்சத்தோடு, அவளைக் கடக்கும் யாரும் அவளை திரும்பி திரும்பி பார்த்து மோகம் கொள்ளாமல் போகமாட்டார்கள்!

கூலி வேலையை விட்டுவிட்டாள்!

கூலி வேலைக்கு போனால் மாலை மங்கிதான் திரும்ப முடியும்! வயது பெண் தனியே இருக்கும்... எந்த களவாணியாவது புகுந்து விட்டால் வம்பாகிப் போய்விடும். பார்த்து பார்த்து... ரசித்து ரசித்து... வளர்த்தப் பிள்ளை, பூரணி! ஒத்தை பொம்பளையாய் இந்த பொல்லாத உலகத்தில் போராடி வளர்த்த பிள்ளையை எவனாவது கசக்கி முகந்துவிட்டால் என்ன செய்வது...? என்று யோசித்து கூலி வேலையை விட்டு...

வீட்டிலேயே டிபன் கடையை வைத்துக்கொண்டாள்!

இட்லி, தோசை, வெள்ளைப் பணியாரம்... அதற்கு தொட்டுக் கொள்ள சாம்பார், எள்ளு, கொள்ளு, வேப்பம் பூவில் தயாரான விதவிதமான மூலிகை சட்னிகள், தேனும், திணைமாவும் என அங்கே கிடைத்தது!

சரஸ்வதியின் பக்குவமான கைதயாரிப்பில் தயாரான உணவின் வாசம் ஊரையே கூட்டும்!

விலைமலிவு! கூட்டம் வந்தது! ஓரளவு லாபமும் கிடைத்தது!

பூரணியும் காலை, மாலை உதவினாள்!

பத்தாம் வகுப்பில் ஐநூறுக்கு நானூற்று ஐம்பது எடுத்து பாஸ் செய்ய... தாய் சரஸ்வதி பூரித்தாள்!

பதினொன்றாம் வகுப்பு படிக்க வேண்டுமென்றால்... மலையடிவாரத்தில் இருந்த கோமுகி அணை அரசு பள்ளிக்கோ, அல்லது கள்ளக்குறிச்சிக்கோ வர வேண்டும், அந்நாட்களில்!

அதனால், பூரணியை பதினொன்றாம் வகுப்பு சேர்த்து படிக்க வைக்க பிரியப்படவில்லை, சரஸ்வதி!

"பூரணி... நல்ல மார்க் எடுத்து பாஸாயிருக்கா? கோமுகி பள்ளியில் சேர்த்துவிட்டால்,. அங்கேயே இலவசமாய் தங்கி ஹாஸ்டலில் இருந்து படிக்கலாம்!...

பெண்கள் படிக்கணும்! அதுவும் மலைஜாதிக்காரியா பிறந்த உங்களுக்கெல்லாம் அரசாங்கம் நிறைய சலுகைகள் தருகிறது!...

வேலையில் முன்னுரிமை தருகிறது...!

படித்து முடித்தவுடன் வேலை கிடைத்து விடும், பூரணிக்கு! நம்மோட பக்கத்து மலையில் இருக்க சேராப்பட்டு என்ற மலைகிராமத்தில் பிறந்த ஒரு மாணவன்... படித்து முடித்து... கலெக்டருக்கு பரீட்சை எழுதி... பாஸ் செய்து... இப்போ கலெக்டரா இருக்கார், கேரளத்தில்!

உன் பொண்ணும், படிச்சான்னா கலெக்டராகி விடுவாள், சரஸ்வதி! கலெக்டரோட அம்மான்னா சும்மாவா...? காரில் நகர்வலம் வரலாம்! இந்த ஓட்டல் வேலையை விட்டொழிக்கலாம்! பொண்ணை மேலே படிக்க வைக்கறீயா, சரஸ்வதி...?"

என்று எவ்வளவோ எடுத்து சொல்லிய ஆசிரியையின் சொல்... சரஸ்வதியின் காதில் விழாமல் போனது!

பூரணி மட்டும் படிப்பதற்கு போயிருந்தால்... அந்த பெரும் விபரீதம் ஏற்பட்டிருக்குமா...?

அதைத்தான் விதி என்று சொல்வதா...?

## 14

வெள்ளிமலையில் நிலவிய இதமான, மிதமான தட்ப வெப்பத்துடன் கூடிய சீதோஷ்ண நிலை... இயற்கைச் சூழல்... சுற்றுச் சூழலின் தூய்மை... பழத்தோட்டம், மலர்வனத்திற்கு அடுத்ததாய் விரிந்து பரந்து கிடந்த பலநூறு ஏக்கர் நிலப்பரப்பு அனைத்தையும் கண்ட அரசாங்கம்... அங்கே பெரிய மூலிகைத் தோட்டம் அமைக்க திட்டமிட்டது!

பி.எஸ்ஸி அக்ரி முடித்த மூவர் சேர்ந்து... தனியாருக்கு, அரசாங்கத்திற்கு என... பழத்தோட்டம், மலர்த்தோட்டம், மூலிகைத் தோட்டம் அமைத்துக் கொடுக்கும் தொழில் செய்துக் கொண்டிருந்தனர்.

அரசு விளம்பர அறிக்கையை நாளிதழில் கொடுக்க... இந்த மூவரும் சேர்ந்து அப்ளை செய்ய... அவர்களுக்கே அந்த டெண்டர் கிடைத்தது!



ஜெய், காந்தன், பாவேந்தன் மூவரும் வெள்ளிமலைக்கு மூலிகைத்தோட்டம் அமைத்துக் கொடுக்கும் பணிக்காக வந்திறங்கினர்!

ஹோட்டலில் ரூம் எடுத்து தங்கி பணியைப் பார்த்தனர்.

ஹோட்டல் சாப்பாடு ஜெய்க்கு ஒத்துக்கொள்ளாமல் போக... பூரணி டிபன் சென்டரைப் பற்றி கேள்விப்பட்டு அங்கு வந்தான்!

நகரில் வளர்ந்து, வாழ்ந்த ஜெய்... அந்தச் சிறுகுடிசையைக் கண்டு முகம் சுளித்தான்!

பின் உள்ளே செல்ல... அங்கிருந்த சுத்தம் சுகாதாரம் பிடித்துப் போனது!

தரையில் இருந்த சிறுபாயில் அமர... அவன் முன்பு வாழையிலை விரிக்கப்பட்டு...

"என்ன சாப்படறீங்க, தம்பி...?" - என்று சரஸ்வதி பாசமாய் கேட்க...

"வெள்ளைப் பணியாரமும்... தேனும், தினைமாவும் வேணும்!" - என்றான்.

"பூரணி... தம்பிக்கு பணியாரம் வேணுமாம்... ஊத்தி எடுத்துட்டு வரீயா...?" - என்று குரல் கொடுக்க...

கொஞ்ச நேரத்தில் உள்ளே இருந்து சில்வர் தட்டில் பணியாரத்தை ஒரு கையிலும்... சாம்பார் வாளியை மறு கையிலும் என... கொலுசொலி சிணுங்க... இரட்டை ஜடையில்... முத்து முத்தாய் முகமெல்லாம் வேர்வை துளிகள் பூத்திருக்க... மானாய் துள்ளிக் கொண்டு பூரணி வர...

ஜெய்யோ.., அந்த மான்குட்டியையே எடுத்து விழுங்கி விடுவதுபோல... பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்!

அவனும் நோக்க... அவளும் நோக்க... இருவர் பார்வையும் மோகத்தோடு வேகமாய் தீண்டி நலம் விசாரித்துக் கொண்டன!

அவன் இலையில் பணியாரம் வைக்கப்பட... எடுத்து விண்டு சாப்பிட்டவனுக்கு அமிர்தமாய் தித்தித்தது, உணவு!

ஒருநொடியில் மனதைக் கவ்விப் பிடித்துவிட்ட தேவதையின் கையால் சாப்பிட்டால் இனிக்காதா, பின்னே...?

பேண்ட், சட்டையில் அம்சமாய் இருந்த அழகனின் விழிப்பார்வை தந்த போதையில் வெட்கி தலைகுனிந்து... கால் கட்டை விரலால் கோலமிட்டுக் கொண்டிருந்த பூரணியைப் பார்த்து அவன் கேட்டான்!

"உன் பெயர் என்ன...?"

"பூரணி!"

"பூரணி... உணவு அருமை! என்ன ருசி! என்ன மணம்! எத்தனை மென்மை!"

ஜெய் பாராட்ட பூரணி ஆகாயத்தில் மிதந்தாள், ரெக்கையில்லாமல்...!

அங்கே அவனும், அவளுமே!

சரஸ்வதி அடுப்படியில் இருந்தாள்!

"என்ன படிக்கறே, பூரணி...?"

அவன் அழகான சிரிப்போடு கேட்க... அவளால் பதில் சொல்லாமல் இருக்க முடியவில்லை!

"நான் படிக்கலே! நின்னுட்டேன்!"

"ஏன்...?"

"இங்கே பத்தாம் வகுப்பு வரைதான் படிக்க முடியும்! பதினொன்று படிக்கணும்னா மலையைவிட்டு சமவெளிக்கு போகணும்!"

"போய் படிக்கறதுதானே...?"

"ஆத்தா பயப்படுது!"

"என்ன பயம்?"

"காலம் கெட்டு கிடக்கு! எப்படி அவ்வளவு தூரம் உன்னை அனுப்பறதுன்னு அழுது! தகப்பன் சிறுவயதிலே இறந்துட்டாங்க! அதுக்கு பிறகு ஆத்தாதான் என்னை கண்ணுக்குள்ளே வச்சி... தாயா தகப்பனா பார்த்துக்குது! அப்படிப்பட்ட ஆத்தாவோட பேச்சை தட்ட முடியலே!"

"பத்தாவதுல என்ன மார்க்?"

"நானூற்று ஐம்பது!"

"என்ன பெண், நீ? இவ்வளவு மார்க் எடுத்துட்டு படிக்காமல் இருக்கலாமா...? அறிவில்லையா? பெண்கள் படிக்கணும், பூரணி! எங்க நகரத்துல வந்துப் பாரு. பெண்கள் எப்படி படிக்கறாங்க... ஆணுக்கு இணையா வேலைக்கு போறாங்கன்னு!"

"ஆத்தா பேச்சை தட்டமுடியாது! ஆத்தா பாவம்! எனக்காகதான் உயிரையே வச்சிட்டு வாழுது!"

"வீட்டில் உட்கார்ந்து என்ன செய்யப் போறே...?"

"மாப்பிள்ளைப் பார்க்குது!

"அதுக்குள்ளே வா...?"

"நல்ல மாப்பிள்ளையாப் பார்த்து என்னை ஒரு வீட்டுக்கு தள்ளிவிடறதிலே இருக்கு! வர மாப்பிள்ளைகளை பிடிக்கலேன்னு அனுப்பிட்டு இருக்கேன்!"



"ஏன் கல்யாணம் பிடிக்கலையா...? இல்ல மாப்பிள்ளையை பிடிக்கலையா...?"

"கல்யாணம் பிடிச்சிருக்கு! வர்ற மாப்பிள்ளைகளைப் பிடிக்கலே! தேனெடுக்கறவனும்... மரம் வெட்டறவனும்... சாமை விதைக்கறவனுமா வரானுங்க!"

"நல்ல மாப்பிள்ளை வந்தால் கல்யாணம் செய்துக்குவியா...?"

"உங்களைப் போல படிச்சவர் வந்தால் கட்டிப்பேன்!"

என்று சொன்ன பூரணி வெட்கம் தாங்காமல் உள்ளே ஓடினாள்.

அன்று இரவு, மறுநாள் என்று மீண்டும் மீண்டும் வந்தான்! சாப்பிடுவதற்காக மட்டுமல்ல... பூரணியைத் தரிசிக்கவும்தான்!

அந்தத் தரிசனத்தின் விளைவுதான் பயங்கரமாய் இருந்தது!

## 15

மலைராணியின் மடியில் காலை நேரம் மிகமிக ரம்யமாய் இருந்தது!

மரங்களும், செடிகளும், கொடிகளும் பனியை கிரீடமாய் சூடிக் கொண்டு... மன்னர்களின் தோரணையில் கர்வத்தோடு... மந்தகாசமாய் நின்று கொண்டிருந்தன!

கொஞ்ச நேரத்தில் போரிடப் போகும் எதிரி நாட்டு வேந்தனின் ஆக்ரோஷத்தோடு... வேகத்தோடு... நிமிர்வோடு... வானில் இளங்கதிரவன் வலம்வர... போரில் தோற்ற மன்னர்கள் தங்கள் மணிமுடியை இழந்து முகம் வாடி நின்றது போல... பனிகிரீடத்தை இழந்து பரிதாப நிலைக்கு ஆளானது, பசும்தாவரங்கள்!

ஜெய் அழகாய் உடுத்திக் கொண்டு பூரணி டிபன் சென்டரை நோக்கி வந்தான்!

கருப்பு பெல்ஸும், உடம்போடு ஒட்டினாற்போல தைக்கப்பட்ட வெள்ளைநிற முழுக்கைச் சட்டையை அழகாய் இன் செய்து... பெல்ட் அணிந்து ராஜ நடைப் போட்டுக் கொண்டிருந்தான்!

அவனைக் கண்டதும் பூரணியின் முகத்தில் லைட்டெரிந்தது!

அவனழகை விழிகள் விரிய நோக்கியவள்... இதழ்களில் சிறுநகையை தவழ விட்டு...

"வாங்க... உட்காருங்க! என்ன சாப்பிடறீங்க?"

பூரணி கேட்டது கூட காதில் வாங்காமல்... அவளையே விழுங்கிக் கொண்டிருந்தான் விழிகளால்!

நான்கு நாட்கள் ஊருக்கு சென்று இன்றுதான் திரும்பினான். அந்த பிரிவின் தாக்கத்தை தாங்காத நெஞ்சம்... விழிகளின் ஸ்பரிசத்தால் வேதனையைச் சொல்லிக் கொண்டிருந்தது!

அங்கே யாருமில்லை என்ற தைரியத்தில்...

"நாலு நாளா எங்கே போனீங்க...?"

கேட்டு முடிப்பதற்குள் பூரணியின் கண்கள் உடைப்பெடுத்துக் கொண்டது! உதடுகள் அழுகையில் பிதுங்கியது!

"அம்மாவுக்கு உடம்பு முடியாமல் போக, உடனே போக வேண்டி வந்துட்டது, பூரணி!"

"அதை என்கிட்ட சொல்லிட்டு போயிருக்கலாமே! நான் உங்களைப் பார்க்காமல் தவிச்சிட்டேன்! உங்களுக்கு என்னவோன்னு துடிச்சிட்டேன்!"

கன்னங்களில் பூப்பூவாய் கண்ணீர் சரம் தொடுத்து பேச...

"தப்புதான்... உன்கிட்ட சொல்லாமல் போனது தப்புதாம்மா! உன்னைப் பிரிந்து என்னாலும் இருக்க முடியலே, பூரணி! கஷ்டப் பட்டுட்டேன்! இதுபோல பெரிய துயரத்தை, துன்பத்தை நான் அனுபவிச்சதில்லே!...

பூரணி... நான் உன்னை உயிருக்குயிரா விரும்பறேன்! பூரணி... நீ எனக்கு வேணும்! இப்போ காதலியா வேணும்...! கல்யாணத்திற்கு பின்னாடி... நீ எனக்கு மனைவியா வேணும், பூரணி!"

ஜெய்... தனது மனதில் உள்ளதை அப்படியே ஒப்புவித்தான்!

"என்னை உனக்கு பிடிச்சிருக்கா...?"

ஜெய் பூரணியைப் பார்த்து காதலோடு கேட்க...

"என் உயிரினும் மேலாய்!" அவனுக்கு சற்றும் குறையாத காதலோடு சொல்ல...

"என்னை நீ கட்டிக்குவியா, பூரணி?"

"உங்களைத்தவிர வேற யாரையும் கட்டிக்க மாட்டேன்!"

பூரணியின் கண்கள் கசிந்துருகியது!

சஸ்வதி அங்கே வர... கண்களைத் துடைத்து... இயல்புக்கு வர பூரணி பெரும் கஷ்டப்பட்டாள்!

அவனும் தலைகுனிந்து இட்லியை விண்டு மெல்ல சாப்பிடும் போது...

"தம்பி... பின்னாடி இருக்க ஒட்டு வீடு காலியா இருக்கு! யாராவது உங்களுக்கு தெரிஞ்சவங்க இருந்தால் சொல்லுங்க!"



"சரிம்மா!" என்றான்.

ஜெய்க்கு அவன் தங்கியிருக்கும் ஹோட்டலின் சுகாதாரம் பிடிக்கவில்லை!

இங்கே வந்துவிட்டால்... பூரணியின் மலர்முகத்தை நினைத்த நேரத்திற்கு பார்க்கலாம்... பேசலாம் என்று அவன் உள்ளம் ஏங்க...

"நான் ஹோட்டல்லதான் தங்கியிருக்கேன்! எனக்கு அங்கே பிடிக்கலை! நீங்க அனுமதிச்சால் நானே இங்கே வந்து தங்கிடுவேன்! என்ன சொல்றீங்கம்மா...?"

சரஸ்வதி எதுவும் சொல்லாமல் மவுனமாய் இருக்க...

"என்னம்மா யோசிக்கறீங்க...?"

"இல்ல... வயசு பொண்ணு இருக்கற இடத்துல ஒரு வயசு ஆம்பளையை தங்க வைக்கலாமான்னு யோசிக்கிறேன்! உங்களைப் பார்த்தா நல்ல பிள்ளையாத்தான் தோணுது! பெரிய இடத்து பிள்ளை போல தெரியுது! பெத்தவங்க உங்களை ஒழுக்கமாத்தான் வளர்த்து இருப்பாங்க! உங்களால் எங்க பூரணிக்கு எந்த தீங்கும் வராதுதான்!"

"இவ்வளவு நம்பிக்கை வைச்ச உங்களை நான் ஏமாற்ற மாட்டேம்மா! என்னை நம்புங்கம்மா! ஒரு மூணுமாசம் மட்டும்தான்!"

சரஸ்வதி சம்மதிக்க... ஜெய்யும், பூரணியும் பெருமகிழ்ச்சி கொண்டனர்!

ஹோட்டலைக் காலி செய்து... மறுநாளே வந்து சேர்ந்தான்!

காலை, இரவு உணவை பூரணி அவன் இருப்பிடத்திற்கே கொண்டுபோய் கொடுப்பாள்!

அன்று...

"ஏய் பூரணி... சாப்பாட்டை கொண்டு வந்து வைத்தால் போதுமா...?" என்று ஜெய் கேட்க...

"அப்புறம் என்ன செய்யணும்...?" என்று பூரணி நீட்டி முழக்க...

"மச்சானை மடியில் போட்டு ஊட்டிவிடுடி!

"ம்கூம்... நான் மாட்டேம்ப்பா!"

"அதை யார்டி செய்வா...? ஒரு மச்சினி இருந்திருந்தால்... இந்த வேலையை பார்ட் டைம் வொர்க்கா அவகிட்ட கொடுத்திடலாம்!"

ஜெய் கண்ணடித்து உல்லாசமாய் சிரிக்க...

"ஜெய்... ஆனாலும் உங்களுக்கு கொழுப்பு ஜாஸ்தி! ஆத்தா... உங்களை எவ்வளவோ 'நல்ல்ல்ல பிள்ளை'ன்னு நம்பிட்டு இருக்கா! உங்க வால்தனம் மட்டும் தெரிஞ்சது ஒட்ட நறுக்கிடுவா, அருவா எடுத்து!" என்று சொல்லிச் சிரித்தாள், பூரணி!

"பூரணி... சாப்பிட மாட்டேன்! நீ உணவை ஊட்டி விட்டாத்தான் சாப்பிடுவேன்! ஊட்டி விடுடி, பொண்டாட்டி!" என்று சிணுங்க...

"என்ன இது அடம்...? ம்...? இன்று மட்டும்தான்! தினம் இதுபோல வம்பு பண்ணக் கூடாது! சரியா...?"

பூரணி சிறுமிரட்டலோடு சொன்னவள்... அவனுக்கு ஊட்ட... அவன் இவளுக்கு ஊட்ட.... பேச்சும் சிரிப்புமாய் சாப்பிட்டு முடித்தனர்.

இந்தத் திருட்டுதனம்... தினம் தினம் சரஸ்வதிக்கு தெரியாமல் அரங்கேறியது!

அன்று காலை வெளியூருக்கு பயணமாகிக் கொண்டிருந்த சரஸ்வதி...

"தம்பி... சொந்தக்காரவங்க வீட்டுல கல்யாணம்! நான் போயே ஆகணும்! ராக்காயி பாட்டியை பூரணிக்கு துணை வச்சிட்டு போகலாம்னு பார்த்தால்... அவளும் கல்யாணத்துக்கு வருவேன்னு அடம் பிடிக்கறா...!

பூரணியையும் கூட்டிட்டு போகலாம்னா போற இடம் ரொம்ப தொலைவா இருக்கு! நாலு மலை கடந்து போகணும்! பூரணிக்கு பஸ்பயணம் ஒத்துக்காது! வாந்தி எடுத்து களைச்சி போயிடுவா! அதனால் உங்க பாதுகாப்புல விட்டுட்டு போறேன், தம்பி! ஒரே ஒரு இராத்திரி மட்டும் பத்திரமா பார்த்துக்கங்க! நான் வந்துடறேன்!" என்று கெஞ்சலோடு சொல்ல...

"நீங்க பயப்படாமல் போயிட்டு வாங்க! பூரணியை பாதுகாக்கறது என் பொறுப்பு!" என்று சொல்ல சரஸ்வதி நிம்மதியோடு பயணமானாள்!

மாலை வானம் இருட்டிக் கொண்டது!

சட்டென்று பெரும் இடியும், மின்னலும் தோன்றி பெரு மழையாய் உருவாகிவிட்டது!

ஜெய் குடை எடுத்து போகவில்லை! மூலிகைத்தோட்ட குடிலிலேயே மழைவிடும் என்று நீண்ட நேரம் காத்திருக்க... மழைவிட்ட பாடில்லை!

பூரணி தனியே இருப்பாளே! மழையும், இருட்டும் கண்டு பயந்து விடுவாளோ என்று நினைத்து கொட்டும் மழையில் இறங்கி நனைந்து கொண்டே வந்து...

"பூரணி... நான் வந்துட்டேன்! மதியம் உண்ணலே! பயங்கர பசிம்மா! உணவு எடுத்துட்டு வா!"

ஜெய் குடிசையைப் பார்த்து குரல் கொடுத்துவிட்டு அவனறைக்கு போய்... கதவு திறந்து... மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்துவிட்டு... நனைந்த உடையை அகற்றிவிட்டு தலையை துவட்டினான்!



தலைகுளித்து... நீண்ட கூந்தலை ஒற்றையாய் தளர தளர பின்னி... காதில் கல்வைத்த ஜிமிக்கி அணிந்து முதன் முதலாய் சேலையணிந்து. அதுவும் புதுசேலை அணிந்து... தோட்டத்தில் பூத்த மல்லிகையை பறித்து தொடுத்து சரம்சரமாய் கூந்தலில் தொங்க விட்டுக் கொண்டு... கையில் உணவு தட்டோடு வந்த பூரணியை சின்ன மெழுகுவர்த்தி ஒளியில் காண... முதலிரவுக்கு பால் சொம்போடு வந்த பெண்ணைப் போல தெரிந்தது, ஜெய்க்கு!

லுங்கியில், கையில்லாத வெள்ளை பனியன் அவனுடைய உருண்டு திரண்ட கட்டுமஸ்தான உடலை கவ்வி பிடித்திருக்க... அழகிய மன்மதனாய் தலையை துவட்டிக் கொண்டிருந்த ஜெய்யையே விழி நோக நோக நோக்கிக் கொண்டே நின்றாள், பூரணி!

அவள் கூந்தலில் குடியிருந்த மல்லிகையின் மணம் அவன் உடலில் உணர்வுகளை தூண்டிவிட்டது!

அவள் அருகில் அமர்ந்து பரிமாற... வயிற்றுபசி மறந்து... உடல்பசி அவனை பெரிதாய் தாக்க... கையைக் கழுவிக் கொண்டு எழுந்தவன்...

"பூரணி... என் கண்ணே...! என் கண்ணின் மணியே...!" என்று தாபத்துடன் தாவி அணைத்துக் கொண்டான்!

வெறும் அணைப்போடு நிறுத்திக் கொள்ளதான் நினைத்தான், ஜெய்!

ஆனால், அது முடியாமல் போனது!

அவள் முகம் பிடித்து முத்தமிட்டு முன்னேற...

"வேணாம் ஜெய்... வேணாம் ஜெய்..." என்று முணகினாலே தவிர.... அவனைத் தள்ளிவிட்டு விட்டு... தன் பெண்மையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல்...

அவன் இழுத்த இழுப்புக்கெல்லாம் இணங்கித்தான் போனாள், பூரணி!

அமிர்தமாய் இனித்த அந்த நொடிகளும்.. அவன் கொடுத்த சுகங்களும்... எல்லாம் முடிந்து எழுந்த பின்னர்தான்... அதனால் வரப்போகும் விபரீதம் உணர்ந்து... தலையில் தணல் விழுந்தாற்போல வீறிட்டழுதாள்!

ஜெய் அவளை இதமாய் அணைத்து...

"பூரணி... அழாதேம்மா! உன் ஆத்தா என்னை நம்பி உன்னை விட்டுட்டு போனாங்க! தோட்டக்காரனே விளைச்சலைக் களவாடியது போல இப்படி செய்துட்டேனே, பூரணி!...

இளமை, தனிமை, இருட்டு, மழை, உன் அதீத பேரழகு, என் நெஞ்சில் இருந்த பெரும் நேசம், ஆசை என எல்லாமுமா சேர்ந்து

என்னைத் தப்பு பண்ண வைத்துவிட்டது! என்னை மன்னிப்பாயா, பூரணி?"

ஜெய் வருத்தமுடன் சொல்ல...

"ஜெய்... ஜெய்... என்னை ஏமாற்றிட மாட்டீங்களே!"

அவன் கால்பற்றி அழுதவளை தூக்கி மடியில் போட்டு அணைத்தவன் சொன்னான்.

"உன் கற்பை களவாடியது ஒரு கள்வனல்ல... உன் கணவன்தான்! என் வேலை முடிந்து விட்டது! இன்னும் இருபது நாட்களில் கிளம்புவேன்! ஊருக்கு போனதும்... என் பெற்றோர்களிடம் நம் காதல் விஷயத்தைச் சொல்லி... அவர்களோடு பெண்கேட்டு வருவேன், பூரணி...!"

இந்த ஜென்மமல்ல... ஏழேழு ஜென்மத்திற்கும் என் மனைவின்னா, அது நீதான்! வேறு ஒருத்தி கழுத்தில் தாலி கட்ட மாட்டேன்! இது சத்தியம்!"

பூரணியின் தலையில் அடித்து ஜெய் சத்தியம் செய்ய...

பூரணியோ அவனைப் பரிபூரணமாய் நம்பினாள்! ஊருக்கு போனவன் போனவன்தான்! நாள் ஓடியதே தவிர அந்த நங்கையை மணம் செய்துக் கொள்கிறேன் என்று போனவன் திரும்பவில்லை!

உடல் மெலிந்து... மேனியெங்கும் பசலைப் படிந்து தலைவனைக் காணாத 'குறுந்தொகை' தலைவியாய் தாய்க்கு தெரியாமல் கண்ணீர் விட்டு கலங்கிக் கொண்டிருந்தாள்.

மனதை மறைக்க முடிந்த அவளால்... ஜெய் நேசம் கொண்டு... ஆசை கொண்டு... அவள் வயிற்றில் விதைத்துவிட்டு போன செடியை மறைக்க முடியவில்லை! செடி முளைவிட்டு, தளிர்விட்டு வளர...

எத்தனை இழுத்து மறைத்தும் மேடிட்ட வயிற்றை கண்டு பிடித்துவிட்டாள், சரஸ்வதி!

"பாவி மகளே... ஏமாத்திட்டியே... உனக்காக தானே நான் உயிரை வச்சிட்டு இருந்தேன்! உன் அப்பன் சாகும்போது எனக்கு வயசு இருபதுடி! இருபது வயசுகாரி உடலை அடக்கி... உணர்வுகளை அடக்கின்னு வாழறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா...? எத்தனை பேர் என்னைக் கட்டிக்க வந்தாங்க! நல்லவனை கட்டிட்டா பரவாயில்லே! ஒரு கெட்டவனை கட்டிகிட்டா உன் வாழ்க்கை நரகமாயிடுமே... நாசமாயிடுமேன்னு உனக்காகவே வாழ்ந்தேனடி! உன்னை என் வைரமாவும், தங்கமாவும் நினைச்சேனடி! இப்படி கரிகட்டையாயிட்டியே! என் நெஞ்சில் நெருப்பையள்ளி கொட்டிட்டியே...!"



அந்த பாவி சண்டாளனை நம்பினேனே... இப்படி கழுத்தை அறுத்துட்டானே... அவன் நல்லாவே இருக்க மாட்டான்! நாசமாய் போயிடுவான்!" - தலையிலடித்துக் கொண்டு அழுதாள்!

சரஸ்வதி வேதனைத் தாங்காது... மறுநாள் விடியலில் தூக்கில் தொங்கி பிணமானாள்!

உயிருக்குயிராய் நேசித்த காதலன் கொடுத்த ஏமாற்றம்...

தன்னையே உயிர் சுவாசமாய் நினைத்து வாழ்ந்த தாய்... கண்கள் விரைத்து... நாக்கு தள்ளி... கடைவாயில் இரத்தம் ஒழுக... உத்திரத்தில் தொங்கிய காட்சியைக் கண்ட பூரணி...

அந்த நொடியே மண்டைக் குழம்பி பைத்தியமானாள்!

பூரணியை உறவுகள் வெறுத்து வீதியில் விட... அங்கே சுற்றுலாவுக்காய் வந்த ஆசிரமதலைவி மரியாளின் கண்களில் வயிற்று பிள்ளையோடு அலைந்த பூரணி பட... தங்களோடே கோவைக்கு அழைத்து வந்து விட்டாள்!

கதை சொல்லி முடித்த நந்தனா நீண்ட நேரம் அழுதாள்! "வெள்ளிமலைக்கு போய் ஜெய்ன்னு மூலிகை தோட்டம் அமைக்க வந்தாங்களான்னு கேட்டேன்! அப்படி யாரையும் தெரியாதுன்னு சொல்லிட்டாங்க. விழுதுகள் பவுண்டேஷன் அமைப்பு சந்திரனின் உதவியால்தான் நான் இவ்வளவு படித்தேன்! அவரை பார்க்கவும், பேசவும் ஆசைப்பட்டு மரியாளிடம் வெளிப்படுத்த சந்திரன் மறுத்துவிட்டாராம்! என்னைப் போல நிறைய பேரை படிக்க வைக்கிறாராம்! யாரையும் பார்க்க அனுமதிப்பதில்லையாம்!" - என்று சோகமாய் சொன்னாள்.

"அவரைப் பார்க்கணும்ன்னு ஆசையா இருக்கா?"

"கண்டிப்பா... நான் இன்று சுயசம்பாத்தியம், சுயகௌரவம், சுயமரியாதையோடு வாழறதே, அவர் கொடுத்த படிப்பால் தானே!"

"நந்தனா... அந்தச் சந்திரன் எனக்கு வேண்டப்பட்டவர்தான்! அவரே வந்து உன்னைப் பார்க்கறாப் போல செய்யறேன்!"

"ஐய்யோ சித்தேஷ்... அதெல்லாம் வேண்டாம்! ஸாரி...ஸாரி சார்... தெரியாமல் பெயர் சொல்லிட்டேன்!" என்று நந்தனா வருத்தம் தெரிவித்து தவித்தாள்!

"பரவாயில்லை! நீ சித்தேஷ்ன்னு கூப்பிட மாட்டீயான்னு நான் ஏங்கிகிட்டு இருக்கேன்! தனியா இருக்கும்போது நீ சித்தேஷ்ன்னு கூப்பிடறதைதான் நானும் விரும்பறேன்!" என்று சித்தேஷ் சொல்ல...

"நாம ரெண்டுபேரும் சேர்ந்து போய்... அவரிடத்திலேயே பார்க்கலாம்!"

"நேரம் வரட்டும் கூட்டிட்டிப் போறேன்! அப்போ காதலை வெறுக்க.... தாயோட காதல் தோற்று போனதை எண்ணித்தானா...?"

"ஆமாம், சித்தேஷ்! அடுத்ததா சுயநலமா கணவன், கல்யாணம், குழந்தைன்னு அம்மாவை அநாதையா விட்டுட்டு வாழ பிடிக்கலே, சித்தேஷ்!"

"உன் தாயைக் காலமெல்லாம் என் உறவாய் காப்பது என் பொறுப்பு!"

"நான் யோசிக்கணும், சித்தேஷ்!"

"நான் காத்திருக்கிறேன், நந்தனா! நல்ல முடிவை மட்டும் சொல்லிடும்மா! ப்ளீஸ்!"

சித்தேஷ்வர் கெஞ்சலோடு சொல்ல...

"பார்க்கலாம்!" என்றாள், விட்டேற்றியாக!

நந்தனா கட்டாயம் நல்ல முடிவெடுப்பாள் என்று நம்பினான்!

சித்தேஷ்வரின் எண்ணம் ஈடேறுமா...?

## 16

அந்தச் செய்தித்தாளில் வந்த செய்தி நந்தனாவை அதிர்ச்சியடைய வைத்தது!

"ஏற்காடு ஏரியில் போட்டிங் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, இரு பிள்ளைகள் என படகு கவிழ்ந்து இறந்தனர். நீச்சல் தெரிந்தும் நீந்தி வரமுடியாமல் ஏரியில் வளர்ந்திருந்த பாசி அவர்களின் கை, கால்களில் சுற்றி இந்த விபரீதம் ஏற்பட்டுள்ளது!"

பாசியை அகற்றாமல் இருந்த அரசின் மெத்தனப் போக்கால்தான் இப்படி ஒரு விபரீதம் ஏற்பட்டது என நாளிதழ்கள் அரசை குற்றம் சாட்டியிருந்தன.

ஏரியில் மிதந்துக் கொண்டிருந்த பாசி, அல்லி, தாமரை கொடிகளை படம் பிடித்து செய்தி போட்டிருந்தார்கள்!

நந்தனாவினுள் சட்டென்று மின்னலாய் அந்த எண்ணம் தோன்றியது!

அரசு அந்தப்பாசியை அகற்ற முயற்சி எடுக்கிறதோ இல்லையோ... அதை நீச்சல் தெரிந்த கல்லூரி மாணவர்களைக் கொண்டு அகற்றினால் என்ன என தோன்றியது!

தன் என்.எஸ்.எஸ். அமைப்பில் உள்ள மாணவர்களை அழைத்து விபரம் சொன்னாள்!



அத்தனை பேரும் ஒத்துக் கொண்டனர்! கல்லூரி முதல்வர் எழில் வேந்தனிடம் செய்தியைச் சொன்னாள்!

எழில்மதி... சித்தேஷ்வரிடம் செய்தியைச் சொல்ல பொங்கி எழுந்துவிட்டான்.

"அறிவிருக்கா உனக்கு...? முட்டாளா நீ..? ஏதாவது விபரீதம் நேர்ந்தால்... நம் கல்லூரி கட்டிக்காத்த நல்ல பேர் வீணாகிவிடும்! இதுபோல விபரீத சேவையை எல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டு... உன் வேலை என்னவோ அதை செய்!"

"நான் ஏற்காடு ஏரியை சுத்தப்படுத்தணும்!" என்று உறுதியாய் சொன்னாள்.

"ஏற்காடு ஏரியை சுத்தப்படுத்தும் வேலை அரசின் வேலை! இந்நேரம் அரசாங்கத்திற்கு செய்தி போயிருக்கும்! அவர்கள் அவ்வேலையைப் பார்த்துக் கொள்வார்கள்!"

"எப்போ சித்தேஷ்..? மேலிடத்திலிருந்து கீழிடம் வரை ஆணை வர எப்படியும் இரண்டு, மூன்று மாதங்கள் ஆகும்! அதற்குள் அந்த ஏரி எத்தனை உயிர்களை பலிவாங்கிவிடும் தெரியுமா..? நான் இதைச் செய்யத்தான் போறேன்.!"

"அடம்பிடிக்காதே, நந்தனா! நீ ஆசைப்படுவதற்காக நான் வேண்டுமானால் ஆட்களை அமர்த்தி என் சொந்த செலவில் அந்த வேலைகளை செய்கிறேன்! சரியா..?"

"அதெல்லாம் வேண்டாம், சித்தேஷ்! நம் கல்லூரி மாணவர்கள் இதைச் சுத்தம் செய்தால்... மற்ற கல்லூரி மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாய் இருக்கும்! நம்மை பின்பற்றி ஊட்டி, கொடைக்கானல், கொல்லிமலை, வெள்ளிமலைன்னு இருக்க ஏரியில் இருக்கும் ஆக்கிரமிப்பை... பிற கல்லூரி மாணவர்கள் சுத்தம் செய்ய முன்வரலாம்!" என்று தீர்க்கமாய் பேசினாள் நந்தனா.

"பேரண்ட்ஸ் பர்மிஷன் தரமாட்டாங்க!"

"பர்மிஷன் கொடுக்கறவங்க வீட்டு மாணவர்களை மட்டும் அழைத்துப் போறேன், சித்தேஷ்! ப்ளீஸ் சித்தேஷ்..." என்று நந்தனா கெஞ்சினாள்.

"கலெக்டர்கிட்ட பர்மிஷன் வாங்கணும்!"

"அதை நான் பார்த்துக்கிறேன்!"

சித்தேஷ்வர் விட்டுவிட்டான்! அவளிடம் பேசி இனி பிரயோசனமில்லையென்று!

கலெக்டர் சரண்ரெட்டியிடம் இருந்து பர்மிஷன் கிடைத்துவிட்டது!

சரண்ரெட்டி ஆந்திரக்காரன்!

இளைஞன்!

நந்தனாவின் சேவை தெரிந்து நேரில் வந்து வாழ்த்திவிட்டு சென்றவன்!

இவ்வாண்டின் "தமிழகத்தின் தங்க மங்கை" விருதுக்காக இவள் பெயரை பரிசீலித்து... முதலமைச்சரிடம் அவள் சேவையை விளக்கி... ஒரு அறிக்கை சமர்ப்பித்து உள்ளான், சரண்ரெட்டி!

ஏற்காடு செல்லும் நாள் வந்தது!

மூன்று பஸ்களில் மாணவர்களும், மாணவியர்களும் சந்தோஷமாய் புறப்பட தயாராகி நிற்க....

"நந்தனா... ஜாக்கிரதை! இது ஆபத்தான வேலை! மாணவர்களை குழுவாய் பிரித்து... ஒவ்வொரு குழுவையும் அதன் தலைவன் கண்காணிக்க வேண்டும்! கடைசிநாள் இருக்கும் பங்ஷனுக்கு வரேன்! போய் வா!"

சித்தேஷ்வர் வழியனுப்பி வைத்தான்.

ஏற்காடு போய் இறங்கி... ஏரிக்கு அருகில் இருந்த மண்டபத்தில் தங்கினர்.

மறுநாள் ஏரியில் இறங்கி சேவையை தொடங்கினர்! ஆசிரியர்களின் தீவிர கண்காணிப்பில் வேலை நடந்தது!

சுற்றுலா வந்த பயணிகள் அனைவரும் அவர்கள் சேவையைக் கண்டு வியந்து போயினர்!

டி.விக்களும்.. பத்திரிகைகளும் கூடி கேள்வி மேல் கேள்வி கேட்க...

நந்தனா பேட்டி கொடுத்தாள்!

அவளின் பேட்டி... அங்கு நடக்கும் வேலைகளை அவ்வப்போது செய்தியில் காட்டினர்.

தமிழகமே வியப்பில் ஆழ்ந்தது!

சித்தேஷ்வர் அடிக்கடி போன் செய்து விசாரித்தான்.

நாளெல்லாம் மாணவர்கள் உழைத்தார்கள்!

இரவு அவர்கள் தங்கியிருந்த திருமண மண்டபமே பாட்டும், நடனமுமாய் அமர்க்களப்படும்.

ஐந்து நாட்களில் முடிந்துவிடும் என்று ஆரம்பித்த வேலை பத்து நாட்களாய் கூடிப்போனது!

இடையில் இரண்டு நாட்கள் சித்தேஷ்வரும், எழில்மதியும் வந்து பார்த்துவிட்டு சென்றார்கள்!



நந்தனா சரியாய் உண்ணாமல், நீரருந்தாமல், தன் உடல்நலத்தைப் பேணிகாக்காமல்... இளைத்து, கறுத்துப் போனாள்.

இடையில் வந்து பார்த்த சித்தேஷ்வர்...

"நந்தனா... வேலைகளோடு உன் உடம்பையும் கவனித்துக் கொள்! உடம்புக்கு ஏதாவது வந்துவிடப் போகிறது! அப்படி ஏதாவது என்றால் என்னால் தாங்க முடியாது, நந்தனா!" என்று தனது மிதமிஞ்சிய காதலைத் தெரிவித்து விட்டுப் போனான்.

கடைசி நாள்!

பாசிகளாலும், அல்லி, தாமரை கொடிகளாலும் காட்சியளித்த ஏரி... வெறும் நீர் தடாகமாய் காணப்பட்டது!

வேலை முடிந்து நீரிலிருந்து கரை ஏறிய மாணவர்கள் உற்சாகக் கூக்குரல் இட்டு ஆர்பரித்தனர்.

நந்தனாவை தூக்கிக் கொண்டு மாணவிகள் குதூகலமிட்டனர்.

மாலை... அங்கே கல்லூரி சார்பில் பெரிய விழா மேடை அமைக்கப்பட்டது!

சித்தேஷ்வர், எழில்மதி, கோவை மாவட்ட கலெக்டர் சரண்ரெட்டி, சேலம் மாவட்ட கலெக்டர் சம்பத், சுற்றுலாத்துறை அமைச்சர் என்று விழா மேடையில் கூடிவிட்டனர்.

ஆளாளுக்கு நந்தனாவின் சேவையை பாராட்டினர்! பரிசுகளை வழங்கினர்!

சரண்ரெட்டி அவளை எல்லோரையும் விட அதிகமாய் புகழ்ந்தான்.

"நந்தனா... செய்திருக்கும் சேவை எவ்வளவு பெரிய மகத்தான சேவை! இது சாமான்ய சேவையல்ல! இது சாதனை சேவை! ஒரு பெண்ணால் இதெல்லாம் முடியுமா என்று பர்மிஷன் கொடுத்த போது என்னுள்ளத்தில் கேள்வியெழுந்தது! முடியும் என்று காட்டிவிட்டார் நந்தனா! மாணவ சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டு, இங்கு சேவை செய்த மாணவர்கள்! இவர்களைப் பின்பற்றி நிறைய கல்லூரிகளும், மாணவர்களும் நல்லது செய்ய முன்வருவார்கள்! இவ்வளவு மாணவர்களையும் ஒன்று திரட்டி பெரும்பணியைச் செய்த செல்வி நந்தனாவை எவ்வளவு பாராட்டினாலும் தகும்! நந்தனா தமிழகத்திற்கு கிடைத்த கிரேட் ஏஞ்சல்!"

என்று புகழ்ந்துவிட்டு சரண் அமர... நந்தனா மென்னகையோடு அமர்ந்திருக்க... அதைக்கண்ட சித்தேஷ்வரோ குரோதத்தோடு சரண்ரெட்டியையும், நந்தனாவையும் முறைத்தான்.

மாணவர்களுக்கு கல்லூரி சார்பாய் பெரிய பரிசு ஒவ்வொருவருக்கும் சித்தேஷ்வரால் வழங்கப்பட விழா இனிதே முடிவுற்றது!

அங்கிருந்து கிளம்புவதற்கு முன் ஏரியை கண்ணுற்ற நந்தனாவின் நெஞ்சில் நிலவிய சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

## 17

கோவை வந்த நந்தனா நான்கு நாட்களில் கடும் சுரம், வாந்தி வந்து நினைவு தப்பி ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆனாள்.

சித்தேஷ்வர் பதறிப் போனான்.

நந்தனா தீவிர சிகிச்சை பிரிவில் அட்மிட் செய்யப்பட்டாள்!

அவளுடைய ரத்தம் டெஸ்ட் செய்யப்பட்டது.

அறிக்கையில் மஞ்சள் காமாலை என்று அறிய.. சித்தேஷ்வர் துடிதுடித்துப் போய்விட்டான்.

சித்தேஷ்வர், எழில்மதி மற்றும் பேராசிரியர்கள். மாணவர்கள் என்று பெரும் கூட்டமே... அந்த மருத்துவ மனையில் கூடிவிட்டது!

சிகிச்சை முடிந்து... சாதாரண அறைக்கு மாற்றப்பட்டாள்!

மாலை கண்விழித்தாள், நந்தனா.

நர்ஸ் வந்து செய்தியைச் சொல்ல... சித்தேஷ்வர் எழில் மதி, சில பேராசிரியர்கள் அவளருகே சென்றனர்.

சித்தேஷ்வரைக் கண்ட நந்தனா "சித்தேஷ்..." என்று அழுகையோடு அழைக்க... அவளருகில் அமர்ந்தான்.

அவள் கையை ஆறுதலாய் பற்றினான்.

"சித்தேஷ்... சித்தேஷ்..." என்று அழுதவள் சற்றும் தாமதிக்காமல் எழுந்து... அவன் மார்பில் தஞ்சமானாள்!

சித்தேஷ்வர்... அவளை இழுத்து இதமாய் இறுக்கிக் கொண்டான்!

எழில்மதி, மற்றும் பேராசிரியர்கள் அங்கிருக்கிறார்களே என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல்... அவளுள் புதைந்திருந்த அவன் மேலான காதலால் தன்னவன்... தனக்கு சொந்தமானவன் மார்பு என்ற நினைப்பில்... அவன் மார்பில் தஞ்சமடைந்தாள்!

"உடம்பை பார்த்துக்கோன்னு சொன்னேனே கேட்டாயா?" என்று கடிந்துக் கொண்டான்.



அவர்கள் இருவரை தனிமையில் விட்டுவிட்டு அனைவரும் அகன்றனர்.

அங்கிருந்த இருபது நாட்களும்... காலை, மாலை, மதியம் என வந்து பார்த்துவிட்டு சென்றான், சித்தேஷ்வர்.

இரண்டு நாட்களுக்கு ஒருமுறை என சரண்ரெட்டியும்... அவளை வந்து பார்த்து நலம் விசாரித்து விட்டு சென்றது, அவனுள் பொறாமையைத் தூண்டியது!

ஆனால் கலெக்டரை வரவேண்டாம் என்று சொல்ல சித்தேஷ்வரால் முடியவில்லை!

உடம்பு பூரண குணமாக... ஆஸ்பத்திரிக்கான பில்லை கட்டி அழைத்துப் போனான், சித்தேஷ்வர்.

மறுநாள் அவள் வீட்டிற்கு சென்றான், சித்தேஷ்வர்.

ஷோபாவில் அமர வைத்து... தேநீர் கொண்டு வந்து கொடுக்க, அருந்தினான்.

பின், ஷோபாவில் சற்று தள்ளி நந்தனா அமர...

"பக்கத்துல வா நந்தனா!" அவன் அழைக்க...

"இருக்கட்டும் சொல்லுங்க?" என்று நந்தனா கூற..

அவன் ஒரு லெட்டரை நீட்டினான்.

'இந்த ஆண்டு 'தமிழகத்தின் தங்க மங்கை' விருதை அவளுக்கு தமிழக அரசு கொடுக்கப் போவதாய் லட்டர் சொல்லியது!'

நந்தனா சின்ன சிரிப்புடன் அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

"இந்த பாராட்டுக்கும், பரிசுக்கும் தானே இப்படியெல்லாம் ரிஸ்க் எடுக்கறே?"

சித்தேஷ்வர் எகத்தாளமாய் கேட்க... நந்தனா சட்டென கோபமுற்றாள்.

"நான் செய்யற சேவை என் ஆத்ம திருப்திக்காக, சித்தேஷ்! இந்த பாராட்டுக்கோ, பரிசுக்கோ நான் செய்யல! என்னை இந்த அளவு மட்டமாக எடைபோடுவீங்கன்னு நான் நினைக்கலே! இந்த விருதுக்காக நான் அரசாங்கத்துக்கு எழுதிபோடலே!...

ஒருநாள் கலெக்டர் சரண்ரெட்டியை யதேச்சையா சந்திக்க நேர்ந்தப்போ அவர் இதை செய்திருக்கறதா சொன்னார். அதெல்லாம் எதுக்கு சார் செய்தீங்கன்னு நான் கொஞ்சம் கோபிக்கவும் செய்தவள்! புரிந்து கொள்ளுங்கள், சித்தேஷ்!" என்று நந்தனா விளக்கினாள்.

"அவனுக்கென்ன உன்மேல் இவ்வளவு அக்கறை?"

சித்தேஷ்வர் சீரலாய் கேட்டான்.

"அவர் நம்ம மாவட்டத்து கலெக்டர்! அவரை மரியாதையில்லாமல் அவன் இவன்னு சொல்றீங்களே சித்தேஷ்?"

"அவன் என் எதிரிடி!"

"புதுசா ஏதாவது கம்பெனி ஆரம்பிக்க தடையா இருக்காரா சரண்?"

"அதெல்லாம் இல்லை. ஆனால் என் எதிர்கால வாழ்க்கைக்கு வெடி வைப்பான் போல!"

"என்ன செய்தார்?"

"ரெண்டு கோரிக்கையை நான்தான் நிறைவேற்றி வைக்கணுமாம்!"

"என்ன அது?"

"உன்னைக் காதலிக்கறானாம்! அவன் மிதமிஞ்சிய காதலை நான் உனக்கு எடுத்து சொல்லணுமாம்!"

"அட... அப்படியா..? அப்புறம்..?"

நந்தனா வேண்டுமென்றே... விழிவிரித்து... உல்லாசமாய் கேட்க...

"உன்னைக் கல்யாணம் செய்துக்க விரும்பறானாம்! அதுக்கு நான் உதவணுமாம் உன் அபிப்பிராயம் என்ன?"

"கலெக்டர் மாப்பிள்ளையாச்சே! வேண்டாம்.. என்று சொல்லுவேனா...?

ஆளும் அழகன்...! நெடுநெடுன்னு உயரம்..! ஆந்திர மிளகாயை காரமா சாப்பிட்டுவிட்டு எப்படி சிவசிவன்னு ஜம்முன்னு ஆம்பளையா லட்சணமா இருக்கார்!

அவரைக் கட்டிக்க சம்மதம்ன்னு சொல்லுங்க, சித்தேஷ்! சீக்கிரமே நாள் பார்த்து, நட்சத்திரம் பார்த்து... திருமணத்துக்கு ஏற்பாடு செய்யச் சொல்லுங்க! நான் அவசரப்படறேன்னும் செய்தியை சரண்கிட்ட சொல்லுங்க, சித்தேஷ்!"

நந்தனா இதழில் நெளியும் புன்னகையோடு சொல்ல...

"அடி ராட்சசி... அடி கள்ளி... உனக்கு எவ்வளவு கொழுப்புடி...? இங்கொருத்தன் உயிர் உருக நேசம் வைத்து காத்திருக்கும் போது... அந்த கலெக்டர் பயல் சரண் ரெட்டி கேட்குதா..?

அழகனா..? ஆம்பளையா லட்சணமா இருக்கானா..? சீக்கிரம் நாள் பார்த்து திருமணத்துக்கு நான் ஏற்பாடு செய்யணுமா..?

ஏன் நான் அழகனில்லையா...? என்னைப் பார்த்தால் ஆம்பளையா லட்சணமா தெரியலையா...? இன்று ரெண்டுல ஒன்று தெரிஞ்சாகணும்! என்னை நீ காதலிக்கறியா..? இல்லையா..?"

சித்தேஷ்வர்... அவள் தோள்பற்றி, கண்கள் சிவந்து வேகமாய் உலுக்க..



"மட்டி.. மடையா... பெண்மனம் புரிந்து கொள்ளாத முட்டாளே...!"

நந்தனா திடீரென திட்ட...

"என்னடி திட்டறே..?" என்று கேட்க...

"அன்று ஆஸ்பத்திரியில்... அத்தனை பேர் பார்க்க பார்க்க... உன் பரந்த மார்பில் தஞ்சமடைந்தேனே... அதுல என் காதலை உணரலையாடா, சித்தேஷ்?"

"ஏய்... என்னடி சொல்றே, நந்தனா..?"

"அப்போ தான்டா... அந்த நிமிஷம் தான்டா நானுமே உன்மேல வைத்த பயங்கர காதலை உணர்ந்தேன்! நீ உணரலையா, சித்து?"

"நீதான் அழுத்தமானவளாச்சே! ஆபத்துக்கு என்னிடம் தஞ்சமடைந்தேன்னு நினைத்தேன்!"

"ஏய் சித்தேஷ் பொறுக்கி... ஐ லவ் யூடா!" என்று கண்சிமிட்டினாள்.

சித்தேஷ்வரை இழுத்து இறுக்கி... அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட... அவனோ கள்வெறி கொண்டவனானான்!

"சரணை அழகன்... ஆம்பளைன்னு சொன்னதெல்லாம்..?" என்று முனகலோடு கேட்க...

"உன்னை வெறுப்பேத்த தான்டா..!"

"அப்போ நான்..?"

வெண்பற்கள் மின்ன.. புருவத்தை அழகாய் உயர்த்தி சித்தேஷ்வர் கேட்க... அந்த அழகில் நந்தனா சொக்கித்தான் போனாள்!

"நீ பேரழகன்டா..!"

"ஏய்... ஏய்... என்ன சொல்றே..?" நம்பாமல் கேட்டான்!

"நீ பேராண்மைக்காரன்டா, சித்தேஷ்!" என்று அழகாய் இதழ் சுழித்து சொல்ல...

"நந்தனா... நந்தனா.. என் கண்ணே... என் செல்லமே... என் நெஞ்சமே..." என்று அவளை இழுத்து இறுக்கி கன்னம், நெற்றி என முத்தமிட...

"இப்படித்தான்டா என் அப்பனும்.. என் ஆத்தாளை கொஞ்சி... கெஞ்சி... வேண்டாம், சித்தேஷ்! இன்னொரு பூரணி உருவாக வேண்டாம், சித்தேஷ்...! தாயைப் போல பிள்ளைன்னு யாரும் என்னைச் சொல்லிடக் கூடாது, சித்தேஷ்...!"

இப்படி சொன்னவள் தாங்க முடியாமல் வீறிட்டழ... அவளைத் தேற்றும் பாஷை தெரியாமல் விக்கித்து நின்றான் சித்தேஷ்வர்!

## 18

காதலுக்கு ஜாதி, மதம், இனம், மொழி என்று எதுவுமே தெரியாது! காதலுக்கு பிரதானம் ஈர்ப்பும், அன்பும்தான்! அந்த ஈர்ப்பையும், அன்பையும் கண்ட இடத்தில் காதல் பூக்கும்! காய்க்கும்!

காதல் இயல்பானது! அது யாருக்கு, யார்மேல் எப்போது உண்டாகும் என்று சொல்ல முடியாது!

அதுபோலத்தான் நந்தனாவைக் கண்டதும் ஈர்ப்பும், அன்பும் தோன்றியது!

முடியாது... முடியாது என்று மறுத்த நந்தனா இப்போது உங்களைக் காதலிக்கிறேன்... கட்டிக் கொள்கிறேன் என்று பச்சைக் கொடி காட்டிவிட...

நல்ல குடும்பத்தில் பிறக்காதவள்! பைத்தியக்காரி மகள்! தகப்பன் பேர் தெரியாதவள் எல்லாம் எனக்கு மருமகளாய் வேண்டாம் என்று மறுத்தாள், கோதைநாயகி!

சிவப்பு கொடி பிடித்து போராடிய கோதைநாயகியை சபரிவாசன் சமாதானப்படுத்திப் பார்த்தார்! ஆனால் அவள் சமாதானமாகவில்லை!

'நந்தனாதான் எனக்கு வேண்டும்' என்று அவளைவிட பயங்கரமாய் சித்தேஷ்வர் போராடினான்!

கடைசியில் மகனுக்காக அரையும் குறையுமாய் வேண்டா வெறுப்பாய் சம்மதித்து வைத்தாள்.

"அங்க பெரியவங்கன்னு யார் இருக்கா, அவளுக்கு? நம்ம வீட்டு சொந்தத்தை எல்லாம் கூட்டிட்டுப்போய்... அவ வாடகைக்கு இருக்கும் குடிசையையும், அவளோட பைத்தியக்கார தாயையும் காட்ட சொல்றீயா...? காறி என் முகத்துல துப்புவாங்க! நாள், நட்சத்திரம், மண்டபம்ன்னு நீயே பார்! அவளுக்கு தேதியை சொல்லிவிடு! மண்டபத்துக்கு அந்த பைத்தியக்காரியோட... அந்த நந்தனா கழுதையும் வந்து சேரட்டும்!...

நீ அவளைப் பற்றி வர்ணிச்சதையும், ரெண்டு முறை நேர்ல பார்த்ததையும் வைத்து... நான் ஏதோ தாய், தகப்பனோட இருக்கற சுமாரான வசதியுள்ளவன்னு நினைத்தேன்!" என்று கோதைநாயகி சலித்துக்கொள்ள...

"என்னம்மா இப்படி பேசறே...?"

"நான் சரியாத்தான் பேசறேன்! நீ போய் ஆகற வேலையைப் பார்!"



திருமணதேதி குறித்துபோய் நந்தனா முன்பு நிற்க...

"உங்கம்மா என்னை வந்து பார்க்கலையே...! பெண் கேட்கலையே...!"

"இங்க பெரியவங்க இல்லாததால்..." என்று சமாளிக்க...

"நிஜம் சொல்லுங்க, சித்து? உங்கம்மா மனப்பூர்வமா ஏத்துக்க சம்மதிச்சாங்களா...?"

"இல்லை தான்! ஆனால் போகப் போக சரியாயிடும் நந்தனாம்மா!"

"எனக்கு உங்களைவிட... என் தாய்தான் முக்கியம், சித்து! அந்த வீட்டில் எனக்கு அவமானம் நேர்ந்தாலும் தாங்கிக்குவேன்! ஆனால் தாய்க்கு நேர்ந்தால் தாங்க மாட்டேன்! நீங்களுமாச்சி... உங்க உறவுமாச்சின்னு கிளம்பிடுவேன், சித்து!" என்று கறாராய் சொன்னாள்!

"எதுவும் நடக்காது! எதுக்கு அவலட்சணமா பேசி கழுத்தறுக்கறே...?"

சித்தேஷ் கோபப்பட... நந்தனா அவனைச் சமாதானப்படுத்த கெஞ்சி, கொஞ்ச வேண்டியதாகிப்போனது!

தாலி, கூரைப் புடவை வாங்க அவனோடு சென்றாள். கோதைநாயகி அதற்கும் மனதிளகி வரவேயில்லை!

இன்னும் பத்து நாளில் திருமணம் எனும் போது... கல்லூரியில் இருந்தவளுக்கு... அன்று மாலை ஈஸ்வரி ஆயாவிடமிருந்து போன் வந்தது!

"நந்தனா... உன் மாமியாராம்... அப்புறம் அவங்க பேத்தின்னு ரெண்டுபேர் வந்திருக்காங்க! உனக்கு செய்தியைச் சொல்லச் சொன்னாங்க! என்னையும் வீட்டுக்குப் போக சொல்றாங்க! நான் என்ன செய்யட்டும்!"

"நான் உடனே வரேன்! நீங்க கிளம்புங்க, ஆயா!" என்றாள்.

அரைமணி நேரத்தில் வீட்டிற்கு வந்தவள்... அவர்களைப் பார்த்து... "வாங்க அத்தை... வா ஆரண்யா..." என்று வரவேற்று...

"என்ன அத்தை சாப்பிடறீங்க...? காபி? இல்ல டீ? இல்ல டிபன் செய்யட்டுமா?" - என்று பரபரத்தாள்.

"நான் ஒண்ணும் உட்கார்ந்து வக்கணையா அறுசுவை உணவு உண்ண வர்லேடி! நான் சொல்றதைக் கொஞ்சம் காது கொடுத்து கேளுடி! உனக்கும், எங்க சித்துவுக்கும் நடக்க இருக்கும் திருமணம் நடக்காது!" என்று அரக்கியாய் கோதைநாயகி சொல்ல...

"ஐய்யோ... என்ன அத்தை சொல்றீங்க...?" துதிக்கையை வெட்டி வீசிய யானையாய் அலறினாள், நந்தனா.

"எங்க சித்துவைக் கட்டிக்க அழகும், படிப்பையும் தவிர வேறென்ன தகுதியிருக்கு, உனக்கு? நல்ல பாரம்பரியம் இருக்கா...? உன் அப்பன் யார்...? கறுப்பா...? சிவப்பா...? எந்த ஊர்...? என்ன பெயர்...? என்ன ஜாதி...? எந்த மதம்...? என்ன குலம்...? தெரியுமாடி, உனக்கு...?...

இப்படி முறைதவறி பிறந்தவளெல்லாம் எங்க சித்தேஷை கட்டிக்க ஆசைப்படலாமா...? எடுத்து சொன்னால் புரிஞ்சிக்கற மனநிலையில் சித்தேஷ் இல்லை! அதான் மனசேயில்லாமல் ஒத்துகிட்டேன்!...

ஆரண்யா வந்து 'மாமனை விரும்பறேன், பாட்டி! எனக்கு மாமன் வேணும், பாட்டி! அவருக்கு என்னைக் கட்டி வையுங்க பாட்டி'ன்னு கால்ல விழுந்து அழ...

ரொம்ப மகிழ்ந்து போனேன்! சாமியா பார்த்து உன்னை என் வீட்டுக்கு வரமுடியாத வரம் கொடுத்தாச்சின்னு சந்தோஷப்பட்டேன்!...

ஆரண்யா என் மகள் புவனாவுக்கும், என் தம்பிக்கும் பிறந்த பெண்! நல்ல தாயுக்கும், தகப்பனுக்கும் பிறந்த பெண், ஆரண்யா! நல்ல பாரம்பரியமிக்க குடும்பத்துல இருந்து வந்தவள், எங்க ஆரண்யா! நீ வழிவிட்டு விலகிபோய் விட்டால் கடைசிநேரம் வேறுவழியில்லாமல் எங்க சித்து என் பேத்தி ஆரண்யா கழுத்துல தாலிகட்டிடுவான்! நீ என்ன சொல்றே...?" என்று மிரட்ட....

"நான் போக முடியாது! உங்க சூழ்ச்சியை சித்துகிட்ட அம்பலப்படுத்தறேன் பாருங்க!" என்று செல்போனை எடுத்து நெம்பரைத் தட்டபோக...

"ஏய் அறிவு கெட்டவளே... உள் அறையில உன் ஆத்தா ரொம்ப நல்லா தூங்கறாப் பாரு! அது என் உபயம்தான்!"

கோதைநாயகி வில்லியாய் சிரித்து சொல்ல...

"ஐய்யோ... அம்மாவை என்ன செய்தீங்க...?

"இது வெறும் சாம்பில்தான்! கொஞ்சமே வெறும் ஐந்து தூக்க மாத்திரைதான் கொடுத்தேன்! நீ முரண்டு பிடிச்சால் உன் தாய் உயிரோடு இருக்க மாட்டாள்! உன்னையும், அவளையும் அடையாளம் இல்லாமல் அழிச்சிடுவேன்! ஓடிப்போயிடு, உன் தாய் வேண்டுமானால்!"

"நான் போயிடறேன்... எங்களை ஒன்றும் செய்துடாதீங்க.! எனக்கு என் தாய் வேண்டும்!"

வேதனை தாங்காது மண்டியிட்டு அழுதவளை... புழுவைப் பார்ப்பதுபோல பார்த்துக் கொண்டே ஆரண்யாவும், கோதைநாயகியும் சென்றனர்.

ஆரண்யா அழுத்திக் கொண்டு இருந்து... கடைசியில் கழுத்தை



அறுத்துவிட்டாள்! உறங்கும் எரிமலையாய் இருந்தவள் எழுந்து நெருப்பை கக்க ஆரம்பித்துவிட்டாள்!

நந்தனா கோழையாகிப் போனாள்.

நந்தனாவின் மிடுக்கும், வீரமும் எங்கேதான் ஓடி ஒளிந்ததோ தெரியவில்லை!

பக்கத்தில் இருந்த ஆஸ்பத்தரிக்கு ஈஸ்வரியின் துணையோடு கொண்டுபோய் வைத்தியம் பார்த்து... நள்ளிரவு சிஸ்டர் மரியாள் முன்பு கண்ணீரும், கம்பளியுமாய் விஷயத்தை சொல்லி நிற்க...

யாருக்கோ போனைப் போட்டார், மரியாள்! பின்...

"ஜெயச்சந்திரன், நெம்பர் 6, காந்திசாலை, திருப்பூர்!" என்று அட்ரஸை சொல்லி அங்கே போகச் சொன்னார்.

அவர்கள் சென்ற இடம் 'விழுதுகள்' சந்திரனுடைய பங்களா!

கூடவே ஒரு பெரிய மர்மமுடிச்சியும் அவிழ்ந்தது!

## 19

மறுநாள்... அந்த மிகப்பெரிய பிரம்மாண்டமான கட்டிடத்தின் முன் கார் வந்து நிற்க... வாசலுக்கு வந்தவர்... நந்தனாவையும், அவளோடு எலும்பும் தோலுமாய் உருமாறி... அவரையே விழிவிரிய உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த... பூரணியையும் பார்த்து அதிர்ந்துப் போனார், ஜெய் என்கிற ஜெயச்சந்திரன்!

"பூரணி... பூரணி..." என்று அந்த மனிதர் ஓடிவந்து தன் தாயை அணைத்துக் கொண்டு கதறியதைக் கண்டு மிரண்டு போனாள், நந்தனா!

நந்தனாவிற்கு புரிந்தது, அவர்தான் தன் தந்தையென்று!

கொஞ்ச நேரம் கழித்து நந்தனாவைக் கேள்வியாய் நோக்க...

"நான் நந்தனா! இவங்க மகள்!"

"பூரணிக்கு கல்யாணமாயிடிச்சா...? வேறொருத்தன் மனைவியையா நான் கட்டி, தொட்டு... ஐய்யோ...!" என்று பூரணியை விலக்கி நிறுத்த...

நந்தனா சின்ன சிரிப்போடு சொன்னாள்.

"உங்க காதலியைத்தான் கட்டி, தொட்டு, அணைத்து நின்னீங்க! வேறொருத்தர் மனைவியை இல்ல!

"நந்தனா... நீ... நீ..." என்று திக்கியவருக்கு... அந்த மழைநாளின் ஞாபகம் வந்து தேனாய் தித்தித்தது!

"நீங்க படிக்க வைத்து ஆளாக்கிய பெண்ணுக்கும் அவளின் சித்தம் கலங்கிய தாய்க்கும் பெரும் ஆபத்து! கொஞ்ச நாள் அவர்களை உங்க பாதுகாப்பில் வைத்து காப்பாத்துங்க சந்திரன்!" என்று மரியாள் கெஞ்ச... அவர் மறுக்க முடியாமல் சம்மதிக்க... இதோ அவரின் முன்னால் அவர்கள்... தேடித்தேடி கிடைக்காத அரிய பொக்கிஷமாய் கிடைத்துவிட்டனர்!

நந்தனாவையும், பூரணியையும் அணைத்து உள்ளே கூட்டிப்போனார், ஜெயச்சந்திரன்.

ஜெயச்சந்திரனின் அணைப்பில் இயல்பாய் அமர்ந்திருந்த பூரணியின் கண்களில் புதிய ஒளியையும், உயிர்ப்பையும் காண... நந்தனா பேரானந்தப்பட்டாள்!

தனது தாய் தந்தையின் அருகாமையில் இனி குணமாகிவிடுவாள் என்ற நம்பிக்கை... நந்தனாவின் நெஞ்சை மழைமேகமாய் குளிர வைத்தது!

"சொல்லு, நந்தனா...? உங்களை யார் மிரட்டியது...? ஏன் கோவையைவிட்டு வந்தீங்க...?" என்று கேட்க...

"அதுகிடக்கட்டும்ப்பா! நீங்க சொல்லுங்க... ஏன் என் தாயை தவிக்க விட்டீங்க...? உன்னை பெண்கேட்டு பெற்றோர்களோடு வரேன்னு போனவர் ஏன் வர்லே...? நீங்களும் வராமல்... பாட்டியும் தூக்கு போட்டு சாக... வயிற்றுபிள்ளையோடு இருந்த அம்மாவுக்கு சித்தம் கலங்கி பைத்தியமாக... மரியாள் மேடம்தான் காப்பாற்றி கூட்டிட்டு வந்து..." வார்த்தைகளை முடிக்காமல் அழுதாள்.

"எல்லாம் சதிம்மா! நானும், பூரணியும் பிரிய... என் தமக்கையோடு தாயும் சேர்ந்து சதி செய்துட்டாங்க? வெள்ளிமலையில் இருந்து வந்த நான் என் காதலைச் சொல்ல... எதிர்ப்பு தெரிவிச்சாங்க! அவங்களை சமாதானப்படுத்தி எப்படியாவது பூரணியை மணக்கணும்ன்னு போராடினேன்!

அந்த சமயம் பார்த்து அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக்! டாக்டரும் பிழைக்கறது கஷ்டம்ன்னு கைவிரிச்சுட்டாங்க!... அம்மா, அக்கா மகள் புவனாவை கட்டிக்கணும்ன்னு வற்புறுத்தினாங்க! மரணவாயில்ல இருக்கும் தாயோட ஆசையை நிறைவேத்துடான்னு அப்பாவும் அக்காவும் அழ... எனக்கு வேற வழி தெரியலே!...

காதலை உள்ளே பெரிய குழிதோண்டி புதைச்சிட்டு... பூரணிக்கு செய்த பெரிய துரோகத்தை மறந்துட்டு... மனசாட்சியே இல்லாமல் புவனா கழுத்தில் தாலி கட்டினேன்!...



தாலி கட்டின பிறகுதான் தெரிந்தது அம்மாவும், அக்காவும் பொய் சொல்லி நாடகமாடியிருக்காங்கன்னு! அதுக்கு டாக்டரும் துணை!...

எல்லாவற்றிற்கும் காரணம் கோதைநாயகி! அவதான் என் அக்கா! கோவையில பேரும் புகழுமா வாழ்ந்துட்டு இருக்கா! சித்தேஷ்வர் கல்விக் குழுமம் தெரியுமாமா...? அதன் ஓனர் சித்தேஷ்வரோட அம்மாதான், என் அக்கா...!" ஜெயச்சந்திரன் கூறி முடிக்க...

"என் தாயை வாழவிடாமல் செய்த அந்த அம்மா... என்னையும் வாழவிடலேப்பா!" என்று கதறிய மகளிடம்...

"சொல்லு...? சொல்லு...? அந்த சண்டாளி உனக்கு என்ன துரோகம் செய்தா...?"

"நந்தனா விளக்கமாய் சொல்ல...

"என் மச்சான் சித்தேஷ்வர் கட்டிக்க இருந்த பெண் நீயா? சேர வேண்டிய இடத்துக்குதான் வந்து சேர்ந்திருக்கே! என்ன குலம்...? என்ன ஜாதி...? யார் உன் அப்பன்னு கேட்டாளா...? அவளை உண்டு இல்லேன்னு செய்தால்தான் அடங்குவா! புறப்படு... புறப்படு, நந்தனா!" என்று அவசரப்படுத்த...

"அம்மாவை ஆஸ்பத்தரியிலே சேர்த்து... வயிறு கழுவி... மெல்ல கூட்டிட்டு வந்திருக்கேன்! திரும்பவும் கோவை வரை பயணம்ன்னா அம்மாவுக்கு தாங்காது! நாளைக்கு போகலாம்ப்பா!" என்று நந்தனா கெஞ்ச...

ஜெயச்சந்திரன் சமாதானமானார்.

இங்கே கோவையில் நந்தனாவை காணாத சித்தேஷ்வர் கலங்கி உட்கார்ந்து விட்டான்! ஈஸ்வரி பாட்டியைக் கேட்டால் நந்தனா சொன்னது போல எனக்கு தெரியாதுப்பா! என்று உளறிக் கொண்டே இருந்தாள்.

போன் செய்தால் 'ஸ்விட்ச் ஆப்' என்று சொன்னது.

பைத்தியம் போலானான்!

நந்தனாவின் போட்டோவைப் பார்த்து 'என்னை மறந்ததேன், தென்றலே!' என்று உள்ளுக்குள்ளே அழுதான்!

அந்த அழுகையும், புலம்பலும் பின் ஆத்திரமாய் மாறியது!

நந்தனா மட்டும் கையில் கிடைத்தால் சிங்கமாய் மாறி கடித்து குதறிவிடுவான்!

## 20

**கா**ர் கோவையை நோக்கி சென்று கொண்டிருந்தது!

"நான் உங்களை சந்திக்க அனுமதி கேட்டேன்! நீங்க மட்டும் அனுமதி கொடுத்திருந்தால்... நாம் எப்போதே சேர்ந்திருக்கலாமேப்பா!" நந்தனா சொல்ல...

"எப்போ சேரணும்ன்னு விதியிருக்கோ... அப்போதாம்மா சேரமுடியும்! விதியின் கரங்களில் சிக்கியவருக்கு... அந்த விதியே பாவம் பார்த்து விட்டாதான் நல்லது நடக்கும், நந்தனா!" என்றவர் மகளை அணைத்துக் கொண்டார். பூரணியோ தாய் கோழியின் இறக்கைக்குள் பாதுகாப்பாய் தஞ்சம் புகுந்திருந்த குஞ்சியாய் அவர் மடியில் சுருண்டு படுத்திருந்தாள்!

வேற்று மனிதர்களைக் கண்டால் பயந்து விலகிப்போகும் பூரணி... அவள் அறியாமலேயே அவரிடம் ஒட்டிக் கொண்டாள்!

"பூரணிதான் நான் பார்த்ததிலே அதீத பேரழகின்னு நினைத்திருந்தேன்! இவளைவிட அழகுல மிஞ்சிட்டியேம்மா! அதான் சாமியார் போல இருந்த என் மச்சான் உன்னிடம் கவிழ்ந்துட்டான்! சித்தேஷ் பாவம்மா! கலங்கிட்டு இருப்பான்! அடுத்ததா, உனக்கு நடந்த துரோகம் தெரியாமல்... நீ கிடைச்சா கடித்து குதறவும்... உன்னை வேட்டையாடவும்... வேங்கையா காத்திட்டு இருப்பான்!" என்று ஜெயச்சந்திரன் சோகமாய் சொல்ல...

"அவரை எப்படி அடக்கறதுன்னு தெரியும்ப்பா! என் முந்தானையில நிறைய சொக்கு பொடியை முடிந்து வைத்திருக்கேன்! அதுல கொஞ்சம் எடுத்து தூவினால் உங்க மச்சான் அம்பேலாயிடுவார்!" - என்று நந்தனா சிரித்தாள்.

பங்களாவின் உள்ளே சந்திரன் நுழைய...

ஆரண்யா, சபரிவாசன், கோதைநாயகி, சித்தேஷ்வர் நால்வரும் அமர்ந்திருந்தனர்.

"செய்தி தெரியுமா, சந்திரா...? நடக்க இருந்த கல்யாணம் நடக்காது? இவனை ஆரம்பத்துல இருந்தே அந்த நந்தனாவுக்கு பிடிக்கலே! இவன் அதிகமா வற்புறுத்த... மறுக்க முடியாமல் ஒத்துக்கிட்டா! கடைசியிலே மனசு மாறி ஓட்டம் பிடிச்சிட்டாப்பா!"

கோதைநாயகி சந்திரன் அருகே ஓடிவந்து சொல்ல...

"ஓடிப்போயிட்டாளா...? இல்ல நீ ஓட வைச்சிட்டியாக்கா...?"

"சந்திரா... என்னடா சொல்றே? சித்து... என்னை சந்தேகப்படப் போறான்டா!"



"அதுக்கு உடந்தை இந்த ஆரண்யாவுமா...?"

"ச்சும்மா இரு சந்திரா! ஆரண்யாதான் சித்துவை கட்டிட்டு நம்ம குடும்ப மானத்தைக் காப்பாற்றப் போறாள்! அவளைப்போய் குறை சொல்றீயே!"

"நிஜம் சொல்லுக்கா...? நந்தனாவை என்ன செய்தே...? பூரணிக்கு என்ன கொடுத்தே...?" என்று அதட்ட...

"மாமா... என்ன சொல்றீங்க...?" என்று சித்தேஷ் அதிர்ந்து கேட்க...

"உனக்கு விளங்க வைக்கிறேன்! நந்தனா... நந்தனா..." என்று வெளியே பார்த்து குரல் கொடுக்க...

நந்தனா பூரணியின் கை பற்றி அழைத்துக் கொண்டு உள்ளே வர...

கோதை நாயகி, ஆரண்யா விதிர்விதிர்த்துப் போக... சித்தேஷ்வர், சபரிவாசன் இருவரும் மகிழ்ந்தனர்.

கோதைநாயகி, ஆரண்யா மிரட்டல், கொலைப் படலத்தை விளக்கினார்.

"நீயெல்லாம் ஒரு பொம்பளையா...? இல்ல பேயாடி, நாயே!" சபரிவாசன் ஓங்கி அறைந்து விட்டார்.

"உங்களைப் போய் நல்ல பொறுப்பான தாய்ன்னு நினைத்தேனே... ச்சே...!" என்று சித்தேஷ்வர் முகம் திருப்பினான்.

"நந்தனாவைப் பார்த்து என்ன ஜாதி...? என்ன குலம்...? அப்பன் ஊரென்ன...? பேரென்ன...?ன்னு கேட்டீயாமே நீ...? இப்போ சொல்றேன் தெரிஞ்சிக்கோ... நந்தனாவோட அப்பன் பேர் ஜெயச்சந்திரன்!" என்று சொல்ல...

"தம்பி... தம்பி..." என்று அதிர...

"ஊர் திருப்பூர்! நான் என்ன ஜாதியோ அந்த ஜாதிதான், இந்த நந்தனா! நான் என்ன குலமோ... நான் என்ன மதமோ... அதுதான் நந்தனாவின் குலமும், மதமும்! இப்போ புரியுதா... இந்த நந்தனா யார் என்று...?"

"தம்பி... தம்பி சந்திரா..." என்ற நா தழுதழுக்க கண்களில் நீர் நிரம்பி வழிந்தது, கோதை நாயகிக்கு!

"என் வம்சம்... என் வாரிசு... என் மகள்தான், இந்த நந்தனா!"

"அப்போ பூரணி...?"

"நான் வெள்ளிமலையில காதலிச்ச பெண்!"

"தம்பி என்னை மன்னிப்பாயாடா?"

கோதைநாயகி சந்திரனின் கைகளை கண்களில் ஒற்றி அழுதாள்,

நந்தனா... தனது மாமன் மகள் என்று கனவிலும் நினைத்ததில்லை, சித்தேஷ்வர்!

சித்தேஷ்வர்... தனது அத்தை மகன் என்று கற்பனையிலும் நினைத்தவளில்லை, நந்தனா!

'நீங்க என் அத்தை மகனா...? இல்ல மாமன் மகனா?' என்று அவனிடம் வாயாடிய நாள் வந்து கண்ணில் மின்னியது!

விழிகளாலேயே இருவரும் நலம் விசாரித்துக் கொண்டனர்.

ஆரண்யாவிற்கு அங்கு நடக்கும் ஒவ்வொரு திருப்பமும் கண்டு பயந்து போனாள்.

"உங்களுக்கெல்லாம் இன்னுமொரு உண்மையையும் சொல்லப்போறேன்! ஏன் இதைச் சொல்லப் போறேன்னா ஆரண்யாவின் கொழுப்பு, திமிர், மமதையை அடக்குவதற்குதான்!...

ஆரண்யா... எனக்கும், புவனாவுக்கும் பிறந்த பெண்ணில்லை!" என்று சந்திரன் சொல்ல...

"டாடி... டாடி..." என்று ஆரண்யா அழ...

"என் காதலை கலைச்சி புவனாவையும்... புவனா நேசத்தை கலைச்சி எனக்கும் கட்டி வைச்சீங்க!

முதலிரவு அன்று புவனாவிடம் என் காதலை கொட்டி அழுதேன்! அவளும் 'காலையில் சிவா தூக்குமாட்டி செத்துட்டான், மாமா'ன்னு அழுதாள்!"

'இன்னொருத்தியை நேசித்தவர், நீங்க! இன்னொருத்தி ஆண்டு அனுபவித்த உடம்பு எனக்கு வேண்டாம்! அதுபோல நானும் சிவாவை உயிராய் நேசித்தேன்! நீங்க உடலளவுல கற்பிழந்தது போல... நானும் மனசளவுல கற்பிழந்தவள்!'

'என்னால் என் சிவாவை மறக்க முடியாது, மாமா!'

'என்னால் என் பூரணியை மறக்க முடியாது, புவனா!'

'நீங்க போய் பூரணியைப் பார்த்து... இங்கு நடந்ததை விளக்கி... கையோட கூட்டிட்டு வந்து... ஏதாவது ஒரு மூலையில வைச்சி குடும்பம் நடத்துங்க! வெளி உலகத்துக்கு தெரிய வேண்டாம், மாமா!'

'வெளி உலகத்துக்கு நீங்களும், நானும்தான் கணவன் - மனைவி! அதுல எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திடாதீங்க, மாமா!'ன்னு புவனா சொல்ல நான் வெள்ளிமலை கிளம்ப இருந்த சமயம் காலில் முறிவு ஏற்பட்டு ஆறுமாசம் கிடந்துட்டேன்!

கால் சரியாகி நான் போய் பார்க்க... அங்கு பூரணியில்லை!

உடனே ரெண்டுபேரும் வெளிநாடு சென்றோம்! அக்கா உன் நச்சரிப்பு தாங்காமல் கஷ்டப்பட்டுகிட்டு இருந்தப்போ... இவளுடைய தோழி முறை தவறி அங்கே ஒருத்தனிடம் ஏமாந்து பிள்ளையை வாங்கிக் கொள்ள... அந்த சமயம் நான் உண்டாயிருக்கேன்னு பொய் சொன்ன புவனா... ஏன் உங்களை அங்கே வரவிடலைன்னு தெரியுதா...?



அவள் தோழிக்கு ஆரண்யா பிறக்க... இந்தியாவுக்கு தூக்கி வந்துவிட்டோம்! புவனாவும் சீக்கிரமே சிவாவின் நினைவில் நெஞ்சு வெடித்து செத்துவிட்டாள்!

என்னுடைய வாழ்க்கை, புவனாவுடைய வாழ்க்கையை கோதைநாயகி நரகமாக்கி... பூரணி வாழ்க்கையை நான் நரகமாக்கி... நந்தனா வாழ்க்கையை ஆரண்யா நரகமாக்கி... ச்சே... யாரும் மனிதர்களா... மனித பண்பாட்டோட வாழலே! ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு துரோகம் செய்து... சரி இனியாவது நல்லமுறையில் வாழ்வோம்!" சந்திரன் கூறி முடிக்க...

"டாடி... டாடி..." ஆரண்யா ஓடி வந்து அவர் காலில் விழுந்து அழ... அவளைத் தூக்கி நிறுத்தி...

"உன்னைக் காயப்படுத்தவோ... தண்டிக்கவோ நீ என் மகள் இல்லே'ன்னு சொல்லலே, ஆரண்யா! உன்னைப் பக்குவப்படுத்த... பண்படுத்ததான் உன் பிறப்பு இரகசியத்தைச் சொன்னேன்!" சந்திரன் குரல் கம்ம சொல்ல...

"பூரணி அம்மாவை பராமரிக்கற பொறுப்பை என்கிட்டே விட்டுடுவீங்களா...?" கண்ணீரோடு கேட்க...

"அது ஒன்றுக்கு மட்டும் யாருக்குமே ஏன் நந்தனாவுக்கு கூட அனுமதியில்லை! என் உயிருள்ளவரை... என் பூரணியை இமையாக காப்பது என் பொறுப்பு! பூரணி சீக்கிரமே குணமாயிடுவாங்கிற நம்பிக்கை எனக்கிருக்கு! அந்த நம்பிக்கையோட என் வாழ்வு தொடரும்!

"சந்திரா... என் பொண்ணு நந்தனாவை என் மகனுக்கு கொடுப்பாயாடா...?" என்று கோதை நாயகி கேட்க...

"என் மாப்பிள்ளைன்னா என் மச்சான் சித்தேஷ்வர்தான்! அதை என் மகள் நந்தனா நினைச்சாகூட மாற்ற முடியாதுக்கா!"

என்று சந்திரன் சொல்ல... அங்கே பெருமகிழ்ச்சி நிலவியது!

மாடி அறையில்... சித்தேஷ்வரும், நந்தனாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தனர்.

"ஏய் நந்தனா... நீ என் மாமன் மகள்!"

"டேய் சித்து... நீ என் அத்தை மகன்டா!"

"உன் வீட்டுக்கு வந்த அன்னைக்கு நீ என் மாமன் மகனா...? அத்தை மகனான்னு கேட்டு என்னை வருத்தப்பட வைச்சியேடி...! பெரிய இவ மாதிரி சிலிர்த்துகிட்டயேடி! பிரமிப்பா இருக்குடி நமக்குள்ள இருக்கும் உறவை நினைத்து!" என்று புன்னகையுடன் சொன்னான், சித்தேஷ்வர்!

"என்கிட்ட சொல்லாமல் ஏன்டி மறைந்து போனே...? நான் தவிச்சிட்டேன்...! துடிச்சிட்டேன் தெரியுமா...? நீ இல்லேன்னதும்

உள்ளுக்குள்ள செத்துட்டேன்டி! உன்னைக் கண்ட பின்புதான் மீண்டும் உயிர்பெற்றேன்! ஏன்டி உனக்கு என்னைவிட உன் தாய்தான் முக்கியமா?"

"ஆமாம்...!" என்றாள், பட்டென்று!

"என்னைவிட உனக்கு அத்தையைத்தான் பிடிக்குமா...?"

"ம்..." என்று அவனை மேலும் வெறுப்பேற்ற...

"நான் ஒன்று சொல்லவா...?"

"ம்... சொல்லுங்க...?" அவன் அருகில் நகர்ந்து உட்கார்ந்து கேட்க...

"உன்னைவிட எனக்கு என் அத்தை பூரணியைத்தான் பிடிக்கும்! நீ ரெண்டாம் பட்சம்தான்!" என்று உல்லாசமாய் சிரித்து... அவளை இழுத்து முத்தமிடபோக...

"அப்படியா...? அப்படின்னா உங்க அத்தை பூரணியைப்போய் இப்படி கட்டி, அணைத்து முத்தமிட்டு கொஞ்சிக்கங்க! என்னை விட்டுடுங்க!" என்று பொய்யாய் கோபம் காட்டி சிரித்து சிணுங்க...

"அடி ராட்சசி... உனக்கு என்மேல் எவ்வளவு நாளாடி இவ்வளவு வஞ்சம்...? தீராத பகை...? அப்படி நான் பூரணி அத்தையை கட்டி முத்தமிட்டால் என் மாமன் விட்டு வைப்பாரா...? பெருசா அருவா எடுத்துட்டு... விரட்டி விரட்டி என்னை வெட்ட வரமாட்டார்...? இருடி... இப்படி ஒரு ஐடியாவை சொல்லிக் கொடுத்து... என் மாமன் விரட்டி வெட்டறதை கண் குளிர பார்க்க நினைக்கற உன்னை... என்ன செய்கிறேன் பார்!"

சித்தேஷ்வர் எழுந்து அவளை விரட்ட... அவள் அவனுக்கு பயந்து சிணுங்கலோடு ஓட... சித்தேஷ்வர் தாவி பிடித்து தூக்கி தட்டாமாலை சுற்ற... என்று அந்த அறையில் இளையவர்கள் சந்தோஷமாய் விளையாடிக் கொண்டிருக்க...

மற்றொரு அறையில்... கட்டிலில் படுத்திருந்த ஜெய் என்கிற ஜெயச்சந்திரன் மார்பில் பூரணி தலை சாய்த்து படுத்திருந்தாள், சாதுவாய்!

நெஞ்சம் வந்த தென்றலை... மேனி நோகாமல் மிருதுவாய் வருடி... தட்டி தாலாட்டிக் கொண்டிருந்தார், ஜெயச்சந்திரன்... கண்களில் கண்ணீரோடு!

காதல்... காதலர்களை சோதனைக்குள்ளாக்கும்...! வேதனைக்குள்ளாக்கும்...! கஷ்டப்படுத்தும்...! கலங்க வைக்கும்...! துன்பப் படுத்தும்...! துயரப்படுத்தும்...! ஆனால், உண்மைக்காதல் ஒரு போதும் கைவிடாது!

அப்படிப்பட்ட காதலை நாமும் காதலிப்போமா...?

- முற்றும் -



# பெண்களின் காமத்தை அளவிட முடியாது..!

**பெண்களுக்கான தாம்பத்யகலை பற்றி புத்தகம் ஒன்றை புதிதாக எழுதி இருக்கும் பன்முகத் திறமை கொண்ட கேரளாவைச் சேர்ந்த கே. ஆர். இந்திரா-விடம் பேசியதிலிருந்து...**

**பெண்களிடம் நீங்கள் பேசி சர்வே செய்த விஷயங்களில் குறிப்பிடத்தக்கவை என்ன...**

"திருமணத்திற்கு முன்பே இணை சேர்ந்த பெண்களும் உண்டு. கணவரைத் தவிர வேறு ஆணுடன் உறவு வைத்துக் கொள்ளும் பெண்களும் உண்டு. அவர்களது ஆசை அவர்களை பல பந்தங்களில் கொண்டு சேர்க்கிறது. யாரோடு அவர்கள் இணைய ஆசைப்படுகிறார்களோ அவர்கள் மீது விருப்பம் அன்பு, ஈர்ப்பு போன்றவை ஏற்பட வேண்டும். அவை எல்லாம் இருந்தால்தான் செக்ஸ் வைத்துக் கொள்ள முடியும். ஒரு ஆண், ஒரு பெண்ணை பார்த்ததும் அவளோடு உறவு வைத்துக்கொண்டால் எப்படி இருக்கும் என்று நினைப்பது போல், ரோட்டில் சென்று கொண்டிருக்கும் ஒரு ஆணை அழைத்து உறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்று எந்த பெண்ணும் விரும்புவதில்லை. இது தான் ஆணுக்கும் - பெண்ணுக்கும் இடையேயான அடிப்படை வித்தியாசம்.

திருமணம் செய்து கொள்ளும் ஆணுக்கு மனைவியாகி, இறக்கும் வரை ஒன்றாக வாழ்வது என்பது ஒரு போதும் பெண்ணுக்கு விருப்பமான தல்ல. அவளுக்கு ஆணோடு பேச வேண்டும். பழக வேண்டும். அன்பு செலுத்த வேண்டும். அது வளர்ந்து, தொடர்ந்து இணை சேருவதில் முடிய வேண்டும். இதுதான் இயற்கை. அதற்கான வாய்ப்பு நமது சமூகத்தில் இல்லை என்பதால், பெண்கள் அவ்வாறு செய்வதில்லை."

**செக்ஸ் தேவை என்று பெண்கள் வெளிப்படையாக கேட்பதில்லையே...**

"திருமணமாகும்போது கணவர் முன்னால் தலைகுனிந்து நிற்க வேண்டும். கன்னித்தன்மையுள்ளவள் போன்று நடிக்கவாவது